விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
**Valampurii**

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
THE RAMCO CEMENTS LIMITED
RAMCO
SLS 107 தரம் கொண்டதும், உலகதர 14001, 9001 சான்றிதழ் பெற்றுள்ள ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 மாசி 14 வியாழக்கிழமை (26.02.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 069

## போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் எதிர்பார்த்துள்ள

# நீதியை வழங்குங்கள்

## சர்வதேச மன்னிப்புச்சபை வலியுறுத்து

(லண்டன்)

**இறுதிப்போரில் இடம்பெற்றதாக கூறப்படும் போர்க்குற்றங்கள் மற்றும் மனிதாபிமானத்திற்கு எதிரான குற்றங்கள் தொடர்பில் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் எதிர்பார்த்துள்ள நீதியை இலங்கையின் புதிய அரசு விரைந்து வழங்க வேண்டும் என சர்வதேச மன்னிப்புச்சபை வலியுறுத்தியுள்ளது.**

லண்டனைத் தளமாகக் கொண்டியங்கும் சர்வதேச மன்னிப்புச்சபை 2014 ஆம் ஆண்டு குறித்த தனது ஆண்டறிக்கையை வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையிலேயே மேறபடி விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. மனித உரிமைகள் குறித்து ஆசிய பசுபிக் பிராந்தியத்தின் 29 நாடுகள் உட்பட 160 நாடுகளில் நிலவிய போக்குகள் குறித்து சர்வதேச மன்னிப்புச்சபை தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது. அதில் இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் குறித்து நீண்ட பட்டியலை மன்னிப்புச் 23 ஆம் பக்கம் பார்க்க....

## பொதுத் தேர்தல் ஒத்தி வைக்கப்படும்!


(கொழும்பு)

தேசிய அரசாங்கத்தை அமைபபதற்கான ஆதரவை வழங்குவதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தீர்மானித்துள்ளதையடுத்து பொதுத் தேர்தல் ஒத்திவைக்கப்படும் சாத்தியக்கூறுகள் இருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

பிரதமர் ரணில் விக்ரமசிங்கவின் தலைமை 23 ஆம் பக்கம் பார்க்க....

## உண்மையை வெளிப்படுத்தக் கோருவதை யாரும் இனவாதமாகக் கருத முடியாது

### பிரதமர் ரணிலுக்கு வடக்கு முதல்வர் பதில்



(கொழும்பு)

உண்மை வெளிப்படுத்தப்பட வேண்டும் எனக் கோருவதை ஒரு போதும் இனவாதமாகக் கருத முடியாது எனத் தெரிவித்துள்ள வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், உண்மையை முதலில் அறிந்து கொண்டால்தான் நல்லெண்ணம் பிறக்க வழி வகுக்கலாம் எனவும் 24 ஆம் பக்கம் பார்க்க....



## தேசிய அரசாங்கம் அமைத்தால் த.தே.கூட்டமைப்பே எதிர்க்கட்சி!

(கொழும்பு)

பாராளுமன்றத்திலுள்ள பிரதான இரு கட்சிகளும் இணைந்து அரசாங்கம் அமைத்தால், பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியாக தலை தூக்குவது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகும் என மேல் மாகாண சபை உறுப் பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

மகிந்த வேண்டும் என்று எழுந்த சூடான மக்கள் எழுச்சிக்கு ஐஸ் பக்கட்டினால் மேற்கொள்ளும் ஒரு தாக்குதலாகத் தான் இந்த தேசிய அரசாங்கம் எனும் எண்ணக் கருவைப் பார்க்கின்றோம்.

இந்த தேசிய அரசாங்கத்தினால் நாட்டுக்கு பாரிய அச்சுறுத்தல்கள் காணப்படுவதாக மேல் மாகாண சபை உறுப்பினர் உதய கம்மன் பில தெரிவித்தார். 23 ஆம் பக்கம் பார்க்க....

## உள்ளக விசாரணை தொடர்பில் அரசாங்கம் தீவிர ஆலோசனை

### அமைச்சரவை கூட்டத்தில் இன்று ஆராயப்படும்?

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின்போது மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணைப் பொறிமுறை உருவாக்கப்படும் என அறிவித்துள்ள புதிய அரசாங்கம், அது பற்றி தற்போது தீவிரமாக ஆலோசனை நடத்தி வருகின்றது.

இது தொடர்பில் இன்று வியாழக்கிழமை இடம்பெறவுள்ள அமைச்சரவைக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட 23 ஆம் பக்கம் பார்க்க....

## குண்டு வெடிப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி - சங்கத்தானை ரயில் நிலையத்தின் முன்பாக குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது என சாவகச்சேரிப் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று புதன்கிழமை இரவு 9.20 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் எவருக்கும் பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை. சங்கத்தானை 24 ஆம் பக்கம் பார்க்க....

## சம்பூர் காணிகளை அரசு திரும்ப வழங்கத் தீர்மானம்

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டம் சம்பூர் பிரதேசத்தில் மீள்குடியேற்றம் தடைப்பட்டுள்ள தமிழ் மக்களின் காணிகளை அவர்களிடம் மீளக் கையளிப்பது தொடர்பாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான தேசிய நிறைவேற்றுக் குழு தீர்மானித்துள்ளது.

இந்த தகவலை தேசிய நிறைவேற்றுக் குழு உறுப்பினரும் ஜே.வி.பி தலைவருமான அனுர குமாரதிஸநாயக்கா தெரிவித்துள்ளார்.

இந்த தீர்மானம் தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய அவர், சம்பூர் பிரதேசத்தில் பாரம்பரியமாக வாழ்ந்த தமிழ் மக்கள் அங்கிருந்து முன்னைய அரசாங்கத்தினால் வெளியேற்றப்பட்டு அவர்களது காணிகள் பல்தேசிய 23 ஆம் பக்கம் பார்க்க....

## தேசிய அரசில் பங்கேற்க சுதந்திரக்கட்சி முடிவு!

### அமைச்சர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு தேசிய அரசாங்கத்தில் இடமளிக்கும் வகையில் அமைச்சர்களின் எண்ணிக்கை 45 ஆகவும், பிரதி அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர் களின் எண்ணிக்கை 55 ஆகவும் அதிகரிக்கப்படவுள்ளதாக அமைச் சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார். அமெரிக்கவர்த்தக மன்றத் 23 ஆம் பக்கம் பார்க்க....

## மின்கட்டணம், இயந்திர எண்ணெய் அடுத்த மாதம் விலை குறைப்பு

(கொழும்பு)

மின் கட்டணம் மற்றும் இயந்திரங்களை இயக்க பயன்படுத்தும் எண்ணெயின் விலை குறைக்கப் படவுள்ளதாக மின்வலு சக்தி இராஜாங்க அமைச்சர் பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளார். தெமட்டகொடயிலுள்ள இலங்கை பெற்றோலிய கூட்டுதாபனத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மின் கட்டணம் குறைக்கப்படவுள்ளதுடன் புதிதாக மின் இணைப்பு பெற்றுக்கொள்ளும் முறையும் இலகுவாக்கப்பட்டுள்ளது என அவர் குறிப்பிட்டார்.

அரசாங்கத்தின் நூறு நாள் வேலைத் திட்டம் வெற்றிப் பாதையில் பயணிக்கும் தருவாயில் பொது மக்களுக்கு அதிக சலுகைகளை வழங்கும் நோக்கிலேயே இவ்வாறு மின் கட்டணம் குறைக்கப்படவுள்ளது.

அத்துடன் இயந்திர எண்ணெயின் விலையும் 24 ஆம் பக்கம் பார்க்க....

**நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளக பொறிமுறை தொடர்பில் ஐ.நாவிடம் மங்கள வாக்குறுதியளிப்பார்

(கொழும்பு)

ஜெனிவாவில் அடுத்த மாதம் 02ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் 28-வது கூட்டத்தொடரில் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர ஜெனிவா நேரப்படி பிற்பகல் 1.20 மணிக்கு உரையாற்றவுள்ளார்.

இதன்போது ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் பணியத்தின் இலங்கை மீதான அறிக்கையை பிற்போட்டமைக்காக நன்றி தெரிவிக்கவுள்ள மங்கள சமரவீர, உள்ளகப் பொறிமுறையை இரண்டு மாதங்களில் நிறுவவுள்ளதாகவும் வாக்குறுதி அளிக்கவுள்ளார்.

இக்கூட்டத்தொடரில் அமெரிக்கா, பிரித்தானியா, டென்மார்க் மற்றும் தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளின் சார்பில் அமைச்சர்களும், ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் பொதுநலவாய அமைப்பு ஆகியவற்றின் பிரதிநிதிகளும் உரையாற்றவுள்ளனர்.

பொதுநலவாய அமைப்பின் சார்பாக அதன் செயலாளர் நாயகம் கமலேஷ் சர்மா எதிர்வரும் 03ஆம் திகதி ஜெனிவா நேரப்படி மாலை 5 மணிக்கு உரையாற்றவுள்ளார்.

அத்துடன் முதல் நாள் ஆரம்ப அமர்வில் ஐ.நா செயலாளர்நாயகம்பான்கீமூன்காணொளி மூலம் உரையாற்றவுள்ளார். மேலும் ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் சையித் அல் ஹுசேன் மற்றும் ஐ.நா பொதுச்சபைத் தலைவர் சேம் குடேசா மற்றும் மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜோசிம் ருக்கர் ஆகியோரும் உரையாற்றவுள்ளனர்.

அதேவேளை பிரித்தானியப் பிரதிநிதி மார்ச் மாதம் 02 ஆம் திகதி ஜெனிவா நேரப்படி மாலை 4.20 மணிக்கும், 03 ஆம் திகதி பிற்பகல் 1.40 மணிக்கு அமெரிக்காவின் பிரதிநிதியும் உரையாற்றவுள்ளனர்.

அத்துடன் எதிர்வரும் 03ஆம் திகதி மாலை ஜெனிவா நேரப்படி 3.40 மணிக்கு தென்னாபிரிக்காவின் பிரதிநிதியும், 4 மணிக்கு டென்மார்க் பிரதிநிதியும், 4.40 மணிக்கு ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதியும் உரையாற்றவுள்ளனர்.

ஐ.நா செயலாளர் நாயகம் பான் கீ மூன் ஆற்றவுள்ள உரையில், இலங்கை மனிதவுரிமை விவகாரம் குறித்த விசாரணை அறிக்கை பிற்போடப்பட்டுள்ளமை குறித்து பிரஸ்தாபிக்கவுள்ளார். மேலும் ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் சையித் அல் ஹுசேன் ஆற்றவுள்ள உரையில் இலங்கை மீதான விசாரணை அறிக்கை ஏன் பிற்போடப்பட்டது என்பது குறித்து தனது விளக்கத்தை அளிப்பார் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

அதேவேளை நாளை வெள்ளிக்கிழமை உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு சீனா செல்லவுள்ள மங்கள சமரவீர, அங்கிருந்தவாறு ஞாயிற்றுக்கிழமை ஜெனிவா செல்லவுள்ளார்.

இதன்போது உயர்மட்ட அமர்வில் கலந்து கொள்கின்ற நிலையில் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் சைய்த் அல் ஹுசேனையும் சந்தித்து பேசவுள்ளதுடன், உள்ளக பொறிமுறைக்கு உதவி வழங்குமாறு கோருவார் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கை மனிதவுரிமை விவகாரம் குறித்து ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் பணியகத்தால் முன்னெடுக்கப்பட்ட விசாரணை அறிக்கை எதிர்வரும் மார்ச் மாதம் 25ஆம் திகதி வெளியிடப்படவிருந்த போதிலும், புதிய அரசாங்கம் விடுத்த கோரிக்கைக்கு அமைய குறித்த விசாரணை அறிக்கை ஆறு மாதங்களுக்கு பிற்போடப்பட்டுள்ளமை தெரிந்ததே. (செ-11)

## கிராம உத்தியோகத்தர்கள் விசேட கலந்துரையாடல்

(கிளிநொச்சி)

வட மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களை சேர்ந்த கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான விசேட கலந்துரையாடல் எதிர்வரும் 27-ம் திகதி வெள்ளிக்கிழமை கிளிநொச்சி மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் வடக்கு மாகாண மீன்பிடி போக்குவரத்து வர்த்தக கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் வட மாகாண கிராம அபிவிருத்தி சங்கங்களின் செயற்பாடுகள் மற்றும் அபிவிருத்தி செயற் திட்டங்கள் தொடர்பாக கலந்துரையாடப்படவுள்ளதாக வட மாகாண கிராம அபிவிருத்தி பணிப்பாளர் எ.ஜே.தெலிசியன் தெரிவித்துள்ளார். (செ-277)

# நிலத்தடி நீரில் கழிவு எண்ணெய் ஆராய நோர்வே நிபுணர்கள் வருகை

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் பிரதேசத்தில் நிலத்தடி நீரில் கழிவு எண்ணெய் கலந்துள்ளமை தொடர்பாக ஆராய்வதற்காக நோர்வே நாட்டு நிபுணர்கள் வருகை தந்துள்ளனர்.

இவர்கள் இப்பிரச்சினை தொடர்பாக வடக்கு விவசாய கமநல சேவைகள், கால்நடை அபிவிருத்தி, கூட்டுறவு அபிவிருத்தி, உணவு வழங்கல், நீர்வழங்கல், நீர்ப்பாசனம் மற்றும் சுற்றாடல் அமைச்சர் பொ.ஐங்கரநேசனை அவரது அலுவலகத்தில் நேற்று சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்கள்.

நிலத்தடி நீரில் கழிவு எண்ணெய் கலந்துள்ளமை பற்றி ஆராய்வதற்காக வடக்கு முதல்வர் சி.வி.விக்னேஸ்வரனின் அறிவுறுத்தலுக்கமைய நிபுணர் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், கிழக்குப் பல்கலைக்கழகம், பேராதனைப் பல்கலைக்கழகம் மற்றும் கொழும்புப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த துறைசார்ந்த வல்லுநர்களைக் கொண்ட இந் நிபுணர்குழு நிலத்தடியில் எண்ணெய் மாசின் மூலம், அது பரவும் திசை, நிலத்தடி நீரில் கலந்துள்ள எண்ணெய் மாசின் அளவு, எண்ணெய் மாசில் அடங்கியுள்ள இரசாயனக் கூறுகள், மாசு பரவுவதைத் தடுக்கும் வழிமுறைகள் மற்றும் குடிநீரைத் தூய்மைப்படுத்தும் வழிமுறைகள் தொடர்பாக விரிவாக ஆராய்ந்து வருகின்றது.

இந்நிபுணர்குழு, ஆய்வின் தேவைகளை அடிப்படையாகக் கொண்டு வேறுதுறை சார்ந்த நிபுணர்களின் ஆலோசனைகளை உடனுக்குடன் பெற்றுக்கொள்வதோடு தொழில்நுட்ப நிறுவனங்களிடம் இருந்தும் உதவிகளையும் பெற்று வருகிறது.

இதன் அடிப்படையில் குடிநீரில் எண்ணெய் கலந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்ட இடங்களில் நீரின் மாதிரிகளைச் சேகரிப்பதற்காக ஏற்கெனவே கொழும்பில் உள்ள கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தின் உதவியை நிபுணர்குழு நாடியிருந்தது.

மத்திய அரசின் அங்கீகாரம் பெற்ற இந் நிறுவனம் வலிகாமத்தில் இருந்து நீர் மாதிரகளைச் சேகரித்து கொழும்புக்குக் கொண்டு சென்று பகுப்பாய்வில் ஈடுபட்டுள்ளது.

நிலத்தடியில் எண்ணெய்க் கழிவு தேங்கியிருப்பின் அதன் சரியான அமைவிடத்தைக் கண்டறிவதற்கு தரையை ஊடுருவும் ரேடார் அவசியமானதாகும். இத்தகைய ரேடார் ஒன்றை நோர்வே அரசாங்கம் இலங்கை தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்துக்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளதால், நிபுணர்குழு ரேடார் வசதியை ஏற்படுத்தித் தருமாறு தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்திடம் விண்ணப்பித்திருந்தது.

இதன் அடிப்படையிலேயே நேற்று கொழும்பில் இருந்து நோர்வே புவித் தொழில்நுட்ப நிறுவனத்தைச் சேர்ந்த ஆய்வாளர்கள் இலியாட் ரன்பிறிட்ஜ், ரஜீந்தர் குமார் பசின் ஆகியோரும் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தைச் சேர்ந்த ஆய்வாளர்களான எச்.டி.எஸ்.பிறேமசிறி, தயான் முனசிங்க, சதுரங்கா குமாரசிறி, டி.எச்.வீஜே விக்கிரமா ஆகியோரும் வருகை தந்துள்ளனர்.

தரையை ஊடுருவும் ரேடாரைப் பயன்படுத்துவது தொடர்பான களநிலைகளை ஆராய்வதற்காக யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருக்கும் நோர்வே நிபுணர்கள் அடங்கிய குழுவினர் நேற்று வடக்கு அமைச்சர் பொ.ஐங்கரநேசனைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

இச்சந்திப்பில் வடமாகாணசபை நியமித்த நிபுணர்குழுவைச் சேர்ந்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பொறியியற் பீடத்தின் தலைவர் கலாநிதி அ.அற்புதராஜா, புவியியற பீடத்தைச் சேர்ந்த திட்டமிடலாளர் செ.ரவீந்திரன் ஆகியோரும் கலந்துகொண்டிருந்தார்கள்.

இச்சந்திப்பின் பின்னர் நோர்வே நிபுணர்குழுவினர் வடமாகாண நிபுணர் குழுவினருடன் இணைந்து சுன்னாகம் அனல் மின்நிலையப் பகுதியையும் சென்று பார்வையிட்டுள்ளார்கள். (செ-11)

# மரண அறிவித்தல்

## திருமதி சந்தியாப்பிள்ளை செல்வராசா திரேசம்மா (சின்னம்மா)



மிருசுவிலைப் பிறப்பிடமாகவும், கொய்யாத்தோட்டத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சந்தியாப்பிள்ளை செல்வராசா திரேசம்மா நேற்று (25.02.2015) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நீக்கிலாப்பிள்ளை சந்தியாப்பிள்ளை செல்வராசாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான இசிதோபிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான ஜெக்கப் அன்னம்மா, பிலிப்பையா செல்வராசா ஆகியோரின் பாசமிகு சகோதரியும், அந்தோனிப்பிள்ளை நவரட்ணம் (இத்தாலி), மேரியோசேப்பின் சகுந்தலா, மரியதாசன் செபா (கிராம அலுவலர் கோட்டகட்டியகுளம்), மரியதிரேசா (லலிதா), மேரிரோசா செல்வராணி (சுவிஸ்), அருள்நேசன் ஜெயரட்ணம் ஆகியோரின் அன்புத் தாயாரும், ஜெயராணி, காலஞ்சென்ற அன்ரன் மற்றும் பற்றிமா, யோசப் நித்தியானந்தம், விஜயகுமார் (சுவிஸ்), ஜெயந்தி ஆகியோரின் மாமியாரும், காலஞ்சென்ற மரியநாயகம், மற்றும் அருட்திரு. திருச்செல்வம், அருட்திரு.நீக்லஸ், அருட்சகோதரி பொஸ்கோ, அருட்சகோதரி கென்றியேல் ஆகியோரின் சிறிய தாயாரும், இராசேஸ்வரி, ரூபி, ஐஸ்வரியம், அன்ரன், புவி, கில்டா, புவனேஸ், மனோ ஆகியோரின் மாமியும், ஜொய்லின் (சுவிஸ்), ஜெஸ்லின் (சுவிஸ்), இவ்லின் (கனடா), அஞ்சலின், துரைநாயகம் (இத்தாலி), மேரி ஜஸ்மின் ஜிவிலா, அருமைநாயகம் (இத்தாலி), காலஞ்சென்ற ஜீவநாயகம் மற்றும் ஜெபநாயகம், இன்பநாயகம், ஜீவந்தி (லண்டன்), ஜீவந்தன், அனுஷா (இத்தாலி), சுமணன், விமிரா, விதுஷன், நிரூஷன், ஜெனிற்றா ஆகியோரின் பேர்த்தியும், லவன், லவீனா, ஆர்த்திகா, நிரோஷ், ஏஞ்சலின், அஸ்லின், ரொய்சன் தினிஸ்ரஸ், தனுஷன், தனுசியா, தீபிகா, தீபராஜ், அனிஸ்ரன், அனஸ்ரீனா, டர்ஷா, டர்ஷன், அனோஜா, அனோஜன், அக்ஷயா, ரோஜன், தரோமிக்கா ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.02.2015) வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் கொய்யாத்தோட்டம் கிறிஸ்து அரசர் ஆலயத்தில் இரங்கற்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, மிருசுவில் சென் நீக்கலஸ் ஆலயத்தில் இறுதி வழிபாடு நடைபெற்று மிருசுவில் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

43A, முதலாம் ஒழுங்கை,
புதுவீதி, கொய்யாத்தோட்டம்,
யாழ்ப்பாணம்.

தகவல்:
பிள்ளைகள்

(9624)

# தேசிய அரசாங்கம் என்பது ஐ.தே.கட்சியின் அரசியல் சதி

## குற்றம் சுமத்துகிறார் வாசு

(கொழும்பு)

தேசிய அரசாங்கம் என்ற எண்ணக்கருவை விமர்சித்துள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினரான வாசுதேவ நாணயக்கார, அது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை வலுவிழக்க செய்ய ஐக்கிய தேசியக் கட்சி மேற்கொள்ளும் அரசியல் சதி எனவும் குற்றம் சுமத்தியுள்ளார்.



கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார்.

தேசிய அரசாங்கம் என்ற எண்ணக்கருவை அறிமுகம் செய்து பிரதமர் ரணில் விக்ரமசிங்க நீண்டகாலம் பதவியில் இருக்க முயற்சிக்கின்றார்.

தற்போதைய அரசாங்கம் மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கம் இல்லை என்பதால், மக்கள் நட்பு அரசாங்கம் என்ற போர்வையில் அதிகாரத்தை தக்கவைத்து கொள்ள முயற்சித்து வருகிறது.

ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்காக நடத்திய செயலமர்வில் ஐக்கிய தேசியக் கட்சியின் மூலோபாயவாதி சிரால் லக்திலக்க உரையாற்றினார். இது அபத்தமானது.

தற்போதைய அரச நிர்வாகம் சட்டத்தின் ஆட்சியை பிடித்து அடக்கி வருகிறது எனவும் வாசுதேவ நாணயக்கார கூறியுள்ளார்.

அதேவேளை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை பிரதமர் வேட்பாளராக நியமிக்க வலியுறுத்துவதன் மூலம் தாம் உள்ளிட்டோர் ஶ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியை உடைக்க முயற்சிக்கவில்லை என இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட முன்னாள் அமைச்சரும் மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவருமான தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பிரதான கூட்டணி கட்சியான ஶ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியுடன் நாங்கள் இணைந்து பணியாற்றி வருகின்றோம்.

ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் உள்ள பிரச்சினைகளை அந்த கட்சி விரைவில் தீர்த்து கொள்ளும் என எதிர்பார்க்கின்றோம்.

நாங்கள் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வெற்றிக்கான அத்திபாரத்தை போட முயற்சித்து வருகின்றோம் எனவும் தினேஷ் குணவர்த்தன கூறியுள்ளார். (செ-11)

SPEED
PURIFIED DRINKING WATER
சுத்தமான குடி தண்ணீர்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ள
மங்கல நிகழ்வுகள், விடுதிகள்,
ஹோல்கள் (Hall)
விசேட விலைக்கழிவு
வழங்கப்படும்.
ஶ்ரீமுருகன்
தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 5392
(C-8284) (சி-152)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் தொழில்நுட்ப ஆய்வுகூடத் திறப்பு

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் புதிதாக அமைக்கப்பட்ட தொழில்நுட்ப ஆய்வுகூடத்தின் திறப்பு விழா இன்று வியாழக்கிழமை முற்பகல் 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

கல்லூரியின் அதிபர் ந.சர்வேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஷ்ணன் பிரதம விருந்தினராகவும் மகளிர் விவகாரப் பிரதி அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சர் த.குருகுலராஜா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-5)

## தமிழ் மக்களின் கன்னத்தில் பிரதமர் ரணிலே அறைந்தார்

### பிரபா கணேசன் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

**வட மாகாணசபையில் கொண்டுவரப்பட்ட பிரேரணைக்கு சர்வதேசம் முதலமைச்சர் விக்னேஸ்வரனின் கன்னத்தில் பதிலடி கொடுத்துள்ளதாக தெரிவித்திருக்கும் ரணில் விக்ரமசிங்கவே தமிழ் மக்களின் கன்னத்தில் அறைந்திருக்கின்றார் என்று ஜனநாயக மக்கள் காங்கிரஸ் தலைவரும் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான பிரபா கணேசன் தெரிவித்துள்ளார்.**



பிரபா கணேசன் நேற்று விடுத்துள்ள ஊடக அறிக்கையில்,

பெரும்பான்மை பலமின்றி குறுக்கு வழியில் பிரதமர் பதவியை பெற்றுக் கொண்ட ரணில் விக்ரமசிங்க தமிழ் மக்களுக்கு நண்பன் போன்ற நாடகத்தை பலவருடமாக தொடர்ச்சியாக நடத்தி வருகின்றார்.

இன்று இவர் வடமாகாண சபையில் கொண்டு வரப்பட்ட பிரேரணையை கேவலப்படுத்தி மறுபக்கம் தானே தமிழ் மக்களுக்கு அனைத்து தீர்வினையும் பெற்றுக் கொடுப்பேன் என்று கூறி தமிழ் கூட்டமைப்பினரிடமிருந்து தமிழ் மக்களை அந்நியப்படுத்தி ஐக்கிய தேசிய கட்சியை யாழ். மாவட்டத்தில் நிலை நிறுத்தப் பார்க்கின்றார்.

லண்டன் மாநகரில் சம்பந்தன், சுமந்திரனது படங்கள் புலம் பெயர்ந்தவர்களால் எரிக்கப்பட்டுள்ளதை பார்க்கும் பொழுது இவ்விருவரும் ரணில் விக்ரமசிங்கவுடன் இணைந்து செயற்படுவது அம்பலப்படுத்தப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் அறிக்கை வெளியிடப்படுமானால் அது சிங்கள மக்கள் மத்தியில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு அமோக ஆதரவு கிடைத்து விடும் என்ற அரசியல் காரணத்திற்காக அறிக்கையினை ரணில் அரசாங்கம் தாமதப்படுத்த வைத்துள்ளமை தமிழ் மக்களுக்கு செய்யும் துரோகம்.

இந்த துரோகத்திற்கு தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைமை துணை போகின்றது. கடந்த காலங்களில் கருணாவை விடுதலைப் புலிகளிடமிருந்து பிரித்து ஆயுதப் போராட்டத்தை முடித்து வைத்த பெருமை ரணில் விக்ரமசிங்கவையே சேரும்.

அதே போல் இன்று வடமாகாண சபைக்கும் தமிழ் தேசிய கூட்டமைப்பிற்கும் இடையில் பிரிவினை ஏற்படுத்தி அதனை தென்னிலங்கைக்கு தெரிவித்து அடுத்த தேர்தலில் சிங்கள பெரும்பான்மை வாக்குகளால் வெற்றி பெற முயற்சிக்கின்றார்.

ரணில் விக்ரமசிங்கவின் உண்மையான முகத்தினை வெகு விரைவில் தமிழ் மக்கள் புரிந்து கொள்வார்கள். கடந்த ஜனாதிபதி தேர்தல் நேரத்தில் தமிழ் வர்த்தகர்களை சந்தித்த முன்னாள் ஜனாதிபதி தெரியாத தேவதையை விட தெரிந்த பிசாசான தனக்கு வாக்களிக்குமாறு கேட்டது இப்பொழுது எமக்கு ஞாபகம் வருகின்றது. இவ்வாறு பாராளுமன்ற உறுப்பினர் பிரபா கணேசன் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

## துரித கதியில் தே.அ.அட்டை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச செயலக பிரிவிலுள்ள ஜே/89 தொடக்கம் ஜே/128 வரையான கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த வயது பூர்த்தியடைந்து இதுவரை தேசிய அடையாள அட்டை பெற்றுக்கொள்ளாதவர்கள் மற்றும் தொலைந்த, சேதமடைந்த, தெளிவில்லாத அடையாள அட்டை உள்ளவர்கள் தமது பிரி விலுள்ள கிராம அலுலர்களைத் தொடர்புகொண்டு தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப் பிக்குமாறு நல்லூர் பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (இ-3)

## ஓய்வூதியர் நம்பிக்கை நிதியம் ஜனாதிபதி மைத்திரிக்கு கடிதம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியம் ஓய்வூதியர்களுக்கான கொடுப்பனவை மாசி மாதம் முதல் வழங்கி உதவுமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது. அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, ஓய்வூதியர்கள் என்போரும் முன்னாள் அரச சேவையில் இணைந்து மக்களுக்கு எத்தனையோ அல்லல் தொல்லைகளுக்கு மத்தியில் கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் அர்ப்பணிப்புடன் மக்கள் சேவையாற்றியவர்கள் என்பதை யாவரும் மதிப்புடன் நினைவு கொள்வர்.

அத்தகைய ஓய்வூதியர் முதுமை அடைந்த காரணத்தால் அவர்களிற்கு வைத்திய செலவீனம் அதிகமாக உள்ளது. அதற்கு அவர்களிற்கு வழங்கப்படும் ஓய்வூதியம் போதாமல் அல்லற்படுவதை காண்கின்றோம். அவர்களின் கௌரவத்தை பேணிப் பாதுகாப்பது அரசின் கடமையாகும்.

ஆகவே அதனைக் கருத்திற் கொண்டே 3 ஆயிரத்து 500 ரூபாவை அதிகரித்து வழங்குவதாக தேர்தல் பரப்புரைகளில் தெரிவிக்கப்பட்டது. தங்கள் முயற்சிக்கு நன்றி தெரிவிக்கும் அதே வேளையில் ஓய்வூதியர்களுக்கும் தேர்தல் பரப்புரையின் படி ரூபாய் 3500/- ஐ மாசி மாதம் முதல் வழங்கி உதவுமாறு யாழ்ப்பாண பிரதேச பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியம் ஜனாதிபதி யையும் நிதி அமைச்சரையும் பணிவுடன் நன்றியுணர்வுடனும் கேட்டுக் கொள்கின்றது.

மேற்குறிப்பிட்ட தீர்மானம் யாழ்ப்பாண பகிரங்க சேவைகள் நம்பிக்கை நிதியத்தின் தலைவர் வி.ஸ்ரீ சக்திவேல் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது என்று அக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

## விமல் வீரவன்சவின் கட்சி கூட்டணியில் இல்லையாம்

(கொழும்பு)

தேசிய சுதந்திர முன்னணி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பங்காளிக் கட்சி இல்லை என எதிர்க்கட்சி தலைவர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கொழும்பில் இடம் பெற்ற தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போது அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

மேலும் தேசிய அரசாங்கம் தொடர்பாக ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் முடிவினை விரைவில் அறிவிப்போம் என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

எப்படியிருப்பினும் தேசிய அரசாங்கம் தொடர்பாக உடனடியாக பதில் வழங்க முடியாது.

தேசிய அரசாங்கத்தில் அமைச்சர் அதிகாரத்தினை பெற்றுக்கொண்டால் கட்சியை பாதுகாத்துக் கொள்ள முடியுமா என்று கட்சி உறுப்பினர்களுடன் கலந்துரையாடல் மேற்கொண்ட பின்னரே அறிவிக்க முடியும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் நிமால் சிறிபால டி சில்வா மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

## இராசி பலன்

26.02.2015
(மாசி 14, வியாழக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.25 மணிக்கு
அட்டமி பிற்பகல் 4.24 மணிவரை
ரோகினி முன்னிரவு 11.28 மணிவரை
இராகுகாலம் 1.59 - 3.29 மணிவரை
சுபநேரம் 7.59 - 9.29 மணிவரை

வளவன்

**மீனம்:** பகை விலகி பாசம் கூடும் நாள், பெரிய மனிதர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், தொழிலில் எதிர்பார்த்த சில திருப்பங்களைக் காணலாம், முத்தான வாய்ப்புகள் இல்லம் வந்து சேரலாம்.

**மேடம்:** எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், கொடுத்த வாக்கை காப்பாற்ற வேண்டுமென்ற எண்ணம் மேலோங்கும், பணத்தேவைகள் பூர்த்தியாகும்.

**இடபம்:** உடல்நலன் சீராக உணவில் கட்டுப்பாடு தேவை, பெருமைகள் வந்து சேர பெருமாளை வழிபட வேண்டிய நாள், உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள்.

**மிதுனம்:** எடுத்த செயலை முடிக்க ஒரு முறைக்கு பலமுறை அலைய நேரிடலாம், நீங்கள் சந்திக்க நினைத்த நபர் உங்கள் இல்லம் தேடி வரலாம், செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள்.

**கும்பம்:** தாய்வழி உறவினர்களால் நன்மையுண்டு, வளர்ச்சிப் பாதைக்கு நண்பர்கள் ஒத்துழைப்பு வழங்குவர், நீங்கள் தேடிச் செல்ல நினைத்த நபர் உங்கள் இல்லம் தேடி வரலாம்.

**கடகம்:** ஙகையில் பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும், பயணங்கள் கைகூடுவதற்கான வாய்ப்புண்டு, ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள்.

**மகரம்:** செல்வாக்கு மேலோங்கும் நாள், பிள்ளைகளின் நீண்ட நாளைய கோரிக்கைகளை நிறைவேற்றுவீர்கள், சுப செய்திகள் வந்து சேரும் நாள், சொத்துக்களால் ஆதாயமுண்டு.

**சிம்மம்:** கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், குடும்பத்தில் மங்கல நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் மேலோங்கும்.

**தனுசு:** புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வியாபார விரோதம் விலகும், சுவாரஸ்யமான நாள், முயற்சிகள் கைகூடும், அரசு வழியில் அனுகூலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

**விருச்சிகம்:** இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, திடீர் பயணங்கள் சிந்திக்க வைக்கும், உடன் பிறப்புக்கள் உதவிகரமாக [illegible] முன்வருவர், [illegible] திருப்தி தரும்.

**துலாம்:** சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, மறதியால் ஒருசில பணிகளை செய்யாமல் விட்டுவிடுவீர்கள், பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.

**கன்னி:** அதிகம் செலவாகும் என நினைத்த காரியம் குறைந்த செலவில் முடிவுக்கு வரும், பிரிந்து சென்றவர்கள் பிரிய முடன் வந்திணைவர், பயணங்களால் பலனுண்டு.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



யாழ்.அனலைதீவு சதாசிவ மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற இல்ல மெய்வல்லுநர் போட்டி நிகழ்வுகளின் போது...



யாழ்.பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலையில் நடைபெற்ற இல்ல மெய்வல்லுநர் போட்டி நிகழ்வுகளின் போது...



மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் அண்மையில் நடைபெற்ற போது...

# அதிசய உலகம்

## கணிதத்தில் "லிட்டில் ஜீனியஸ்" 10 வயதிலே மேதையான சுட்டி சிறுமி




பிரித்தானியாவில் 10 வயது சிறுமி ஒருவர் அந்நாட்டின் பல்கலைக்கழகம் ஒன்றில் படித்து வருவது ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

பிரித்தானியாவை சேர்ந்த எஸ்தர் ஒகடே (Esther Okade Age-10) என்ற சிறுமிக்கு அவரது தாய் வீட்டில் வைத்தே கல்வி கற்பிக்கிறார்.

வீட்டிலிருந்து படித்தாலும் கணித மேதையாக இருக்கும் எஸ்தருக்கு, பல்கலைக் கழகத்தில் சேர்ந்து கணிதத்தில் பட்டம் பெறும் ஆசை ஏற்பட்டது.

இதையடுத்து அவர் கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் திறந்தவெளி பல்கலைக் கழகம் ஒன்றில் சேர விண்ணப்பத்தை சமர்பித்தார்.

ஆனால் இவர் சிறுமி என்பதால் முதலில் தயங்கிய பல்கலைக்கழகம், பிறகு அவரிடம் தொலைப்பேசியில் பேசியது மூலம் அவரது திறமைகளை புரிந்து கொண்டுள்ளது.

மேலும் கட்டுரை ஒன்றை எழுதி சமர்பித்த இவர், கணித தேர்விலும் நல்ல மதிப்பெண்களை பெற்றதால், கடந்த டிசெம்பர் மாதம் பல்கலைக்கழகத்தில் இவர் மாணவியாக ஏற்றுக்கொள்ளப்பட்டார். தற்போது இளங்கலை பட்டப்படிப்பு படித்து வரும் எஸ்தர் புல்கலைக்கழக தேர்வுகளில் நூற்றுக்கு நூறு வாங்கியதாக அவரது தாய் பெருமையுடன் தெரிவித்துள்ளார். எஸ்தர் மட்டும் அல்ல அவரது 6 வயது தம்பியும் கணித மேதை ஆவார் என்பது குறிப்பிடத்தக்கது.

# சமைப்போம் சுவைப்போம்

## கோதுமை மா குழிப்பணியாரம்



தேவையான பொருட்கள்:

கோதுமை மாவு - ஒரு கப்

உருளைக்கிழங்கு - 1

பெரிய வெங்காயம் - 1

பட்டாணி - கால் கப்

மிளகாய்தூள் - 1 டேபிள் ஸ்பூன்

உப்பு - சுவைக்கேற்

செய்முறை:

உருளைக்கிழங்கையும் பட்டாணியையும் வேக வைக்கவும். உருளைக்கிழங்கை தோல் உரித்து, வெங் காயம், மிளகாய்தூள், சிறிது உப்பு சேர்த்துப் பிசைந்து சிறிய உருண்டைகளாக உருட்டவும். கோதுமை மாவில் உப்புப் போட்டுக் கரைத்துக் கொள்ளவும். உருட்டி வைத்துள்ள மசாலா உருண்டைகளை, கோதுமை மாவில் தோய்த்து, குழிப்பணியாரக் கல்லில் எண்ணெய் விட்டு, போட்டு, திருப்பியதும் எண்ணெய் விட்டு பொன்னிறமாக வெந்ததும் எடுக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவினது தேவையினை நிறைவேற்ற சிங்களவர்களை அரசு பயன்படுத்துகிறது

## பொதுபல சேனா கண்டுபிடிப்பு

(கொழும்பு)

**நல்லாட்சி என்ற சொல் எவ்வகையான அர்த்தத்தினை குறிக்கின்றது என்பதை தெளிவாக இந்த தேசிய அரசாங்கம் விளங்கிக் கொள்ள வேண்டும். இனவாதத்தினையும் தேசிய வாதமாக எண்ணி ஆட்சி நடத்தும் ஆட்சியின் கீழ் நாம் வாழ்கின்றோம் என்று பொதுபல சேனா அமைப்பின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளதோடு சர்வதேசத்தினதும் இந்தியாவினதும் தனிப்பட்ட தேவையினை மாத்திரம் பூர்த்தி செய்ய சிங்களவர்களை பயன்படுத்துவதாகவும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.**

பொதுபல சேனா பௌத்த அமைப்பினால் நேற்று முன்தினம் கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒவ்வொரு அரசும் தமது ஆட்சியில் ஒரு சொல்லினை மெருகூட்டிக்காட்டுகின்றது. அதேபோல் இம் முறையும் தேசிய அரசாங்கம் நல்லாட்சி என்ற சொல்லினை பிரதானப்படுத்தி ஆட்சி நடத்துகின்றது. ஆனால், உண்மையில் இந்த அரசாங்கத்திற்கு நல்லாட்சி என்றால் என்ன என்பது தெரியாது.

ஒரு சிலரின் தேவைகளுக்கே இவர்கள் முக்கியத்துவம் கொடுக்கின்றனர். சர்வதேசத்தின் முடிவு இலங்கையிலும் ஆட்சியினை தீர்மானிக்கின்றது. இந்தியாவின் முடிவுகள் இலங்கையின ஆட்சியில் தாக்கத்தினை செலுத்துகின்றது.

வடமாகாண அரசியல் வாதிகளினதும் கிழக்கின் அரசியல் வாதிகளினதும் கோரிக்கைகள் இங்கு ஆட்சியினை தீர்மானிக்கின்றன. ஆனால் சிங்கள மக்களின் குரல் இந்த அரசுக்கு கேட்கவில்லை. சிங்கள பௌத்த மக்களின் விருப்பம் அவர்களின் பாதுகாப்பு தொடர்பில் தேசிய அரசாங்கத்திற்கு அக்கறை இல்லை.

கடந்த காலங்களில் பல சந்தர்ப்பங்களில் தேசிய அரசு உருவாகுவதற்கு பல வாய்ப்புகள் அமைந்தன. ஆனால் அப்போது இது தொடர பில் எந்தவொரு சிங்கள அரசியல்வாதியும் அக்கறை செலுத்தவில்லை. ஆனால் இன்று தேசிய அரசாங்கம் அமைக்க எந்தவொரு தேவையும் இல்லாத நிலையில் தமிழ் பிரிவினைவாதிகளின் தேவையினை பூர்த்தி செய்யும் நோக்கில் இவர்கள் தேசிய அரசாங்கத்தினை அமைத்து பிரபாகரனின் தேவையினை பூர்த்தி செய்து வருகின்றனர்.

தேசிய வாதம் பற்றி பேசும் இவர்களுக்கு தேசியவாதம் எவ்வாறு அமைய வேண்டும் என்பது தெரியாது. இனவாதத்தினை தேசிய வாதமாக கருதி இனவாதத்தினையே பலப்படுத்தி வருகின்றனர். இவர்களை நம்பி வாக்கு வழங்கிய பொதுமக்கள் இன்று அதிருப்தியில் உள்ளனர். எனவே, மக்களே வெகு விரைவில் மாற்றம் ஒன்றினை எதிர்பார்ப்பார்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# முன்னாள் ஜனாதிபதி கைது; அமெரிக்கா ஆழ்ந்த கவலை

மாலைதீவின் முன்னாள் ஜனாதிபதி முகமது நஷீத் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின கீழ் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டது தொடர்பாக அமெரிக்கா தனது ஆழ்ந்த கவலை தெரிவித்துள்ளது.

மாலைதீவின் முன்னாள் ஜனாதிபதி முகமது நஷீத் (வயது- 47) பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் கீழ் கடந்த ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டார்.

இந்நிலையில் அவரது கைது நடவடிக்கை மிகவும் கவலை அளிப்பதாக அமெரிக்கா கருத்து தெரிவித்திருக்கிறது. தலைநகர் வோஷிங்டனில் அந்நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சக செய்தித் தொடர்பாளர் ஜென் ஸாக்கி செய் தியாளர்களிடம் தெரிவித்த தாவது, பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் மாலைதீவின முன்னாள் ஜனாதிபதி கைது செய்யப்பட்டுள்ள நடவடிக்கை கவலை அளிப்பதாகவுள்ளது.

தெற்கு மற்றும் மத்திய ஆசியப் பகுதி விவகாரங்களுக்கான அமெரிக்க வெளியுறவுத் துறை இணை அமைச்சர் நிஷா தேசாய் மாலைதீவின் வெளியுறவுத்துறை அமைச்சருடன் தொடர்பு கொண்டு பேசினார்.

நஷீத் கைது விவகாரம் குறித்து அவர் பேசியதுடன் கடந்த சில வாரங்களாக அந்நாட்டில் நிலவி வரும் அரசியல் நிலவரம் குறித்துக் கவலை தெரிவித்தார்.

அந்நாட்டில் ஜனநாயகம், சட்டம், சுதந்திரமாகச் செயற்படும் நீதித்துறை, முறையான வழியில் சட்ட நடவடிக்கைகள் ஆகியவற்றின் மீது நம்பிக்கை ஏற்படும் வகையில் மாலைதீவு அரசு நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என இணை அமைச்சர் நிஷா தேசாய் வலியுறுத்தியதாக ஜென் ஸாக்கி கூறினார்.


கடந்த 2012 ஆம் ஆணடு நஷீத் ஜனாதிபதியாக இருந்த போது சிரேஷ்ட நீதிபதி அப்துலலா முகமதைக் கைது செயய உத்தரவிட்டது தொடர்பாக கைது நடவடிக்கை எடுக்கப்பட்டதாக அந்நாட்டு அரசு தெரிவித்தது.

பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுவதாக அரசு குறிப்பிட்டுள்ள போதிலும் அது குறித்து எந்த விளக்கமும் அளிக்கப்படவில்லை. அவர் கைதாகும் காட்சி தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பப்பட்டது.

கடந்த திங்கட்கிழமை அவர் நீதிமன்றத்துக்கு கொணடு வரப்பட்ட போது அவரை நடக்க விடாமல் பொலிஸார் அவரைக் கீழே தள்ளிய பின்னர் அவரை அப்படியே இழுத்து வந்த காட்சிகள் வெளியானது உலக அரசியல் பார்வையாளர்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 294

பாத்திமா மொஹமட்




மெரினா அந்தோனிப்பிள்ளை




மது மதுசன்

மனைவி : என்னங்க ஏன் அழுதிட்டு இருக்கீங்க? இன்னைக்கு நமக்கு பத்தாவது வெட்டிங் அனிவெசரி நாளுங்க.

கணவன் : உனக்கு ஞாபகம் இருக்கா?10 வருசத்துக்கு முன்னாடி நான் உன்னை கல்யாணம் பண்ணிக்க மாட்டேன்னு உங்க அப்பாக்கிட்ட சொன்னனே.

மனைவி :இப்ப ஏன் பழச கிளறுறீங்க.

கணவன் : அப்போ உங்க அப்பா எங்கிட்ட என்ன சொன்னாருன்னு ஞாபகம் இருக்கா?

மனைவி : அத நீங்களே சொல்லுங்க

கணவன் : டேய் மரியாதையா என் பொண்ணுக்கு தாலி கட்டறியா இல்ல ஜெயில்ல 10 வருசம் கம்பி எண்ணுறியா? என்று கேட்டாரு.

மனைவி : இப்ப அதுக்கு என்ன ?

கணவன் : இதுவே நான் அன்னைக்கு ஜெயிலுக்கு போயிருந்தா இன்னைக்கு ரிலீஸ் ஆகியிருப்பன்.

மனைவி : பூரி கட்டையை எங்க வைச்சேன்னு தெரியல.

திவ்யா கருணாகரன்




கிரு கிருஜிகா




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோப்பாய் ஆசிரிய கலாசாலை ஆசிரியர்களுக்கான சான்றிதழ்

(யாழ்ப்பாணம்)

யாழ். கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் 2012-2014 கல்வியாண்டில் கற்கை நெறிகளை மேற்கொண்டு 2014 ஆம் ஆண்டு இறுதிப் பரீட்சைக்குத் தோற்றி அண்மையில் பரீட்சைத் திணைக்களம் வழங்கிய பெறுபேற்றுப் பத்திரத்தைப் பெற்றுக் கொண்டவர்களுக்கு மேலதிகமாக இன்னொரு பெறுபேற்றுப் பத்திரத்தை கலாசாலை நிர்வாகம் வழங்கி வருகின்றது.

கற்கை நெறி விபரம் மற்றும் கற்கை நெறிச் சான்றிதழ், செல்லுபடியாகும் திகதி என்பவற்றை உள்ளடக்கியதாக இச்சான்றுப் பத்திரம் வழங்கப்படுகின்றது.

2014 ஆம் ஆண்டு பரீட்சைக்குத் தோற்றிச் சித்தியெய்திய ஆசிரியர்கள் அலுவலக நேரத்தில் இச்சான்றிதழைப் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் நேரில் வர முடியாதவர்கள் உரிய விபரங்களைக் கடிதம் மூலம் சமர்ப்பித்து வேறொருவர் மூலம் பெற்றுக் கொள்ளலாம் எனவும் கலாசாலை அதிபர் வீ.கருணலிங்கம் அறிவித்துள்ளார். (இ-5)



# ஐ.நா.அறிக்கை கடுமையானது!

(கொழும்பு)

**இலங்கை மீதான ஐ.நா. விசாரணை அறிக்கை கடுமையானதாக இருக்கும் என தாம் நம்புவதாகவும் உள்ளக விசாரணையில் நம் பிக்கையில்லை என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளரும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் மாவை சேனாதிராசா தொடர்ந்து தெரிவிக்கையில், இலங்கை மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ள இனப்படுகொலை மற்றும் போர்க்குற்றங்கள் தொடர்பிலான விசாரணையில், உள்ளக விசாரணையில் நாம் நம்பிக்கை கொள்ள முடியாது.

இவ் உள்ளக விசாரணை என்பது மேலும் காலத்தை நீடிப்பதாக அமையும். எங்களிற்கு கிடைத்த தகவலின் படி இப்போது தயாரிக்கப்பட்டுள்ள இலங்கை மீதான குற்றச்சாட்டுக்கள் தொடர்பிலான ஐ. நா மனிதவுரிமை சபையின் அறிக்கை மிகவும் கடுமையானதாக இருக்கின்றது.

இந்த தாமதத்தை ஏற்படுத்துவதற்கு இலங்கை மீதான பிரேரணையை கொண்டு வந்த அமெரிக்கா தான் முயற்சித்து வருகின்றது.

இந்த விடயத்தில் எமது தமிழ் மக்களின் உணர்வுகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு மார்ச் மாதமே அறிக்கை வெளியிடப்பட வேண்டுமென ஏற்கனவே வலியுறுத்தி கேட்டிருந்தோம்.உலக நாடுகளுடன் எமது தலைவர் களும் பேசியுள்ளனர்.

மேலும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைமையுடன், பேசிய ஜெனீவாவில் மார்ச் மாதம் நடைபெறவுள்ள கூட்டத் தொரில் அறிக்கையினை வெளியிடக்கோரி அழுத்தம் வழங்குவது தொடர்பில் ஆராயப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)

## நிர்வாகத் தெரிவு

கொக்குவில் பிரம்படி சனசமூக நிலையத்தின் புதிய நிர்வாக சபைத் தெரிவு அண்மையில் இடம் பெற்றது.

இதில் நிலையத் தலைவராக ந. சிவராசா, செயலாளராக இ. அழகராசா, பொருளாளராக இ: செல்வராசா, உபதலைவர்களாக வ. தம்பிராசா, சி.சிவபாலசுந்தரம் , உபசெயலாளராக கு. தர்மேந்திரா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (இ-3)




## பகிரங்க ஏலவிற்பனை

(யாழ்ப்பாணம்)

யாழ் நீதவான் நீதிமன்ற வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதும், உரிமை கோரப்படாததுமான சான்றுப் பொருட்கள் நாளை மறுதினம் சனிக்கிழமை பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன. இப்பகிரங்க ஏல விற்பனை முற்பகல் 10 மணிக்கு ஆரம் பிக்கப்படவுள்ளது. பொருட்களை கொள்வனவு செய்பவர்கள் கொடுப்பனவாக பணத்தினை மட்டும் செலுத்த வேண்டும். காசோலை ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. ஏலத்தில் பொருட்களை கொள்வனவு செய்ய வருபவர்கள் தமது தேசிய அடையாள அட்டையுடன் சமுகமளிக்குமாறு நீதிமன்றப் பதிவாளர் அறிவித்துள்ளார். (இ-3)

# கனடா தூதுவருடன் ஈ.பி.டி.பியினர் சந்திப்பு

இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றம் தொடர்பான அறிக்கையை, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையகம் செப்டெம்பர் வரை ஆறு மாதங்களுக்கு ஒத்திவைத்திருப்பது தொடர்பாக இலங்கைக்கான கனடா நாட்டின் உயர்ஸ்தானிகர் செலி விற்றிங்குடன் விரிவான கலந்துரையாடல் ஒன்றை ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியினர் நடத்தியுள்ளனர்.

மேற்படி சந்திப்பில், ஈ.பி.டி.பியின் பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் , வடக்கு மாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர் சின்னத்துரை தவராசா ஆகியோர் கலந்து கொண்டார்.

இந்தச் சந்திப்பு நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் உள்ள எக்ஸ்போ பவிலியன் மாகோசா விடுதியில் இடம்பெற்றது.

இச் சந்திப்பில் மேலும் இலங்கையின் தற்கால அரசியல் விவகாரங்கள், கனடாவினால் மேற்கொள்ளப்பட்டு வரும் வடக்கு கிழக்கு மாகாணங்களிற்கான உதவித் திட்டங்கள் போன்ற விடயங்களும் கலந்துரையாடப்பட்டன. சமகால அரசியல் விவகாரங்களில் புதிய அரசிடம் தமிழ் மக்களின் எதிர் பார்ப்புக்களாகிய இராணுவ வசமிருக்கும் தனியார் காணிகளை விடுவித்தல், அரசியல் கைதிகளை விடுவித்தல், இராணுவப் பிரசன்னத்தைக் குறைத்தல், வடக்கு மாகாண சபையில் அண்மையில் நிறைவேற்றப்பட்ட இனப்படுகொலை சம்பந்தமான பிரேரணை போன்ற முக்கிய விடயங்கள் தொடர்பாக விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

அத்துடன், கடந்த காலங்களில் மீள்குடியேற்றத்தின் பின்னர் அழிந்து போன பிரதேசங்களை மீளக் கட்டியமைத்தல், மக்களின் வாழ்வாதார மேம்பாட்டை உருவாக்கி, அவர்களை இயல்பு வாழ்வில் ஈடுபடுத்தியது போன்றவற்றில் முன்னேற்றத்தை எட்டியிருப்பதைச் சுட்டிக்காட்டிய ஈழமக்கள் ஜனநாயகக் கட்சிப் பிரமுகர்கள், தொடர்ந்தும் தொழில் வாய்ப்புகளை உருவாக்குதல், யுத்தத்தால் மிக மோசமாகப் பாதிப்படைந்த மாற்றுத்திறனாளிகள் மற்றும் பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களுக்கான வாழ்வாதாரத்திட்டச் செயற்பாடுகள், சிறார்களுக்கான போசாக்கு மற்றும் கலவி, சுகாதாரம் போன்ற துறைகளின் மேம்பாடு ஆகியவற்றுக்கு கனடா ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்றும் இந்தச் சந்திப்பில் வலியுறுத்தியுள்ளனர். (இ-5)

# புண்ணிய கிராம நிகழ்வு

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களமும் பொலிகை விநாயகர் அறநெறிப் பாடசாலையும் இணைந்து நடத்தும் புண்ணிய கிராம நிகழ்வு நாளை மறுதினம் 28 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு பொலிகண்டி இலுப்பை மூலை சித்தி விநாயகர் ஆலயத்தில் இடம் பெறவுள்ளது.

பருத்தித்துறை பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் ச. சீவரத்தினம் தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சின் பிரதிப் பணிப்பாளர் சிற்றம்பலம் புஸ்பலிங்கம் கலந்துகொள்ளவுள்ளார். (இ-3-5)

# மெய்வல்லுநர் போட்டி இன்று

அளவெட்டி தெற்கு றோ.க.த.க பாடசாலையின் இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை வெள்ளிக்கிழமை பி.ப 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் பாடசாலை அதிபர் க. சிவபாலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் வடமாகாண சபை உறுப்பினர் த. சித்தார்த்தன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ள அதேவேளை பண்டத்தரிப்பு புனித பற்றிமா அன்னை ஆலய பங்குத் தந்தை இயூஜின் பிரான்சிஸ் அடிகளார் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (இ-3)



நயினாதீவு ஸ்ரீகணேஷ கனிஷ்ட மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டி அண்மையில் அதிபர் ஓங்காரலிங்கம் தலைமையில் பாடசாலை மைதானத்தில் இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராக தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் வடமாகாணசபை உறுப்பினர் பா. கஜதீபன் கலந்து கொண்டு பரிசுகளை வழங்கி வைத்ததுடன் வடமாகாணசபை உறுப்பினரின் நிதியொதுக்கீட்டின் கீழ் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான ஒலிபெருக்கி சாதனங்களும் பாடசாலைக்கு வழங்கி வைக்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாம் நல்லாட்சி பற்றிப் பேசியிருந்தால் மகிந்த ஆட்சியில் கடத்தப்பட்டிருப்போம்

## அமைச்சர் கருஜெயசூரிய குற்றச்சாட்டு

**நல்லாட்சி தொடர்பாக முன்னர் பேசியிருப்போமாகவிருந தால் தாக்கப் பட்டு வெள்ளைவானில் கடத்தப்பட்டிருப்போம். அவ்வாறான நிலைமை யொன்றே மகிந்த ஆட்சியில் காணபபட்டது என பொதுநிர்வாகம், நல்லாட்சி மற்றும் புத்தசாசன அமைச்சர் கரு ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.**

முன்னதாக ஓய்வுபெற்ற பொலிஸ்மா அதிபர், பிரதிப்பொலிஸ்மா அதிபரின் அதி காரங்களையும் மீறி குற்றமிழைத்தவர் களை வெள்ளைவான்களில் கடத்துவதற்கும் சிறைகளில் அடைப்பதற்கும் உத்தர விட்ட சம்பவங்கள் பதிவாகியுள்ளன. அவ்வாறு எம்மால் செயற்படமுடியாது. தற்போது நர்ம் மிகமெதுவாக செயற்படுவதாக குறறச்சாட்டை முன் வைப்பவர்கள் அதனைப் புரிந்து கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார்.

வறுமை நிலையத்தின் ஏற்பாட்டில் குடி மக்கள் மதிப்பீட்டு அட்டை வெளியிடும் நிகழ்வு நேற்று முன்தினம் ஜெய்ஹில்டன் விடுதியில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையி லேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். தற்போது நல்லாட்சி தொடர்பில் அனை வரும் பேசுகின்றார்கள். வீதியோரங்கள் முதல் வைத்தியசாலை வரை இவ்விடயம் குறித்து அவதானித்து வருகின்றார்கள். ஆனால் கடந்த ஆட்சியில் நல்லாட்சி தொடர்பாக நாம் பேசியிருப்போமாக விருந் தால் தாக் கப்பட்டிருப்போம். வெள்ளை வானில் கடத்தப்பட்டிருப்போம். அவ்வா றான ஒரு நெருக்கடியான நிலைமையே காணப்பட்டது. ஆனால் இன்று அந்நிலைமையானது முற்றாக மாறியுள்ளது. குறிப்பாக மாதுலு வாவே சோபித தேரரின் 75 ஆவது பிறந்த தினத் தின்போது உரையாற்றியவர் இந்த நாட்டில் நல்லாட்சி யொன்று உருவெடுப்ப தற்கு தனது எதிர்கா லத்தை அர்ப்பணிக்க வுள்ளதாக குறிப்பிட்டார். அன்று முதல் நாம் அனைவரும் நல்லாட்சி நோக்கிய பயண த்தை படிப்படியாக ஆரம்பி த்தோம். இந்நி லையில் புதிய ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேன, பிரதமர் ரணில் விக்ரமசிங்க தலை மையில் நூறு நாள் வேலைத்திட்டத்தை முன்னெடுத்து வருகின்றோம். எமது நிகழ் ச்சி நிரலின் பிரகாரம் செயற்படுவதில் சில தாமங்கள் காணப்படுகின்றன. நல்லாட்சியை உறுதிப் படுத்துவதற்காக சட்டம் ஒழுங்கினை பின்பற்றியே செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டியுள்ளது. அதன் காரணமாகவே இவ்வாறான தாமதங்கள் ஏற்படுகின்றன. தற்போது 45 தினங்கள் நிறைவடைந்துள்ளன. இன்ன மும் 55 தினங்கள் காணப்படுகின்றன. குறித்த காலப் பகுதியில் எமது செயற்றிட்ட த்தினை முழுமையாக செயற்படுத் துவத ற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)


## காணி விற்பனைக்கு

யாழ். கோட்டை, ரெலிகொம், சமுர்த்தி வங்கி, தொழில் திணைக்களம் அருகாமையில் சிவன் பண்ணை வீதியில் 6 பரப்பு காணி றோட் முகப்புடன் விற்பனைக்குண்டு. தொடர் மாடி வீடு, வங்கி, வர்த்தக நிறுவனம் , காட்சி அறை , ஹோட்டல் , களஞ்சியம் கட்டுவதற்கு உகந்தது. தரகர் தேவையில்லை.

தொடர்பு :- 0776143911 (9619)



## வெளிநாடுகளுக்கான துரித தபால் பொதிகள் சேவை

- 220இற்கு மேற்பட்ட நாடுகளுக்கான சேவை
- 3 வேலை நாட்களில் குறித்த முகவரியில் ஒப்படைக்கப்படும்



**திருமுருகன் கொம் நெற்**

**விரைவு! பாதுகாப்பு! நம்பகத்தன்மை!**

வடமாகாணத்திற்கான அங்கீகரிக்கப்பட்ட முகவர்

இல. 46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.

இல. 18, பிரதானவீதி, நெல்லியடி.

ஏ9 வீதி, கிளிநொச்சி (கொமர்ஷல் வங்கி முன்பாக)

இல. 50, கே.கே.எஸ்.வீதி, சுன்னாகம். (கொமர்ஷல் வங்கி முன்பாக)

கடற்கரை வீதி, குருநகர். (தொடர்மாடி கட்டடம் முன்பாக)

பிரதான வீதி,சங்கானை. (வைத்திலிங்கம் கட்டடம் மேல்மாடி, ஆசைபிள்ளை நகைக்கடை முன்பாக)

பிரதான வீதி, பருத்தித்துறை.

WESTERN UNION MONEY TRANSFER

271A. K.K.S. Road, Jaffna. T.P: 021 222 7835/ 077 7554528



# LED

Reduced energy consumption and cooler lights mean lower electricity bills. Saving money

**6 Months Warranty**

## PLASTIC LED BULB

2W Rs.100/= | 3W Rs.120/=
5W Rs.210/= | 7W Rs.260/=
9W Rs.360/= | 12W Rs.420/=
15W Rs.550/= | 18W Rs.750/=



*Buy same item 10pcs Get 10% Discount*

**SPECIAL PRICE FOR WHOLESALE MINIMUM ORDER 50PCS**

2W Rs.80/= | 3W Rs.96/=
5W Rs.168/= | 7W Rs.208/=
9W Rs.288/= | 12W Rs.336/=
15W Rs.440/= | 18W Rs.600/=

No 11A, Stanley Road, Jaffna. Tel : 0212223857
Hotline : 0727949242

KINGS ELECTRONICS

www.kingselectronics.lk



# கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை

| | |
|---|---|
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 55 1/2 சூரி செவ் 8 இல்<br>உயரம்: 5’7"<br>தகைமை/தொழில்: A/L டோகா<br>தொ.இ: B/4172 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 15 1/4 செவ் 2 இல்<br>உயரம்: 5’3"<br>தகைமை/தொழில்: BSC/ அரச தொழில்<br>தொ.இ: G/2041 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 31<br>உயரம்: 6’1"<br>தகைமை/தொழில்: BSC/ பொறியியலாளர் கனடா PR<br>தொ.இ: B/4173 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 27 3/4<br>உயரம்: 167cm<br>தகைமை/தொழில்: BSC/ அரச தொழில்<br>தொ.இ: G/2368 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா: 11<br>உயரம்: 5’6"<br>தகைமை/தொழில்: HNDE<br>தொ.இ: B/4174 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 36 சூரிசெவ் 8 இல்<br>உயரம்: 5’4"<br>தகைமை/தொழில்: BSC/ அரச தொழில்<br>தொ.இ: G/3575 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 65 1/2 செவ் 4 இல்<br>தகைமை/தொழில்: A/L/ சாரதி<br>தொ.இ: B/4175 | பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 18<br>உயரம்: 5’3"<br>தகைமை/தொழில்: O/L<br>தொ.இ: G/522 |

## கல்யாண மாலை

(சர்வதேச திருமண சேவை)

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே

தொடர்பு:- 021 720 1005

E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.



## வடமராட்சி பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி (வ-து) திக்கம் வடிசாலை

பொறித்தொகுதி திருத்தம் செய்வதற்கான கூறுவிலை கோரல்

திக்கம் வடிசாலையின் பொறித்தொகுதிகள் திருத்த வேலை செய்வதற்கான கூறுவிலை கோரப்படுகின்றது.

-திருத்தவேலை தொடர்பான விபரங்களை திக்கம் வடிசாலையின் காரியாலயத்தில் பார்வையிட்டு அதற்கான கூறுவிலையினை எதிர்வரும் 14.03.2015 ஆம் திகதிக்கு முன்னதாக ஒட்டிய தபால் உறையில் நேரடியாக அல்லது பதிவுத்தபால் மூலம் பின்வரும் முகவரிக்கு அனுப்பி உதவுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

தலைவர்

வடமராட்சி பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி,திக்கம் வடிசாலை,அல்வாய் மேற்கு.

(சி-160)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரவூப் ஹக்கீம் ஓர் இனவாதி!

## தயா கமகே காட்டம்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் ஓர் இனவாதி என ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளர் தயா கமகே தெரிவித்துள்ளதாக கொழும்பு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. கிழக்கு மாகாணத்தில் வாக்குகளைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் இனவாத பரசாரங்களில் ஹக்கீம் ஈடுபடக் கூடாது எனவும் ரவூப் ஹக்கீம் உண்மையில் மகிந்தவின் பாசறையைச் சேர்ந்தவர். அவர் எந்தச் சந்தர்ப்பத்திலும் மைத்திரிபால சிறிசேனவிற்கு ஆதரவளிக்கவில்லை எனவும் தெரிவித்தார்.



இது தொடர்பாக ஊடகங்களுக்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

எனினும் நாம் அவருக்கு நகர அபிவிருத்தி மற்றும் நீர்விநியோக அமைச்சுப் பதவியை வழங்கியுள்ளோம். கிழக்கு மாகாணத்தில் சிங்களவர் ஒருவர் முதலமைச்சராக இருப்பதனை அனுமதிக்க முடியாது என்று ஹக்கீமே தெரிவித்தார்.


தற்போதைய முதலமைச்சர் இசட்.ஏ. நசீர் கடந்த இரண்டரை ஆண்டுகளாக மாகாண சபையில் அங்கம் வகித்த போதிலும் மக்களுக்கு எதுவும் செய்யவில்லை. 30 ஆண்டுகள் யுத்தம் காரணமாக பாதிப்புக்களை எதிர்நோக்கினோம். எவரும் அந்த இருண்ட யுகத்திற்கு செல்ல விரும்புவார்கள் என நான் நினைக்கவில்லை.

எனவே ரவூப் ஹக்கீம் இனவாத பிரசாரங்களை கைவிட வேண்டும் என தயா கமகே கோரியுள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

தயா கமகே கிழக்கு மாகாண முதலமைச்சர் பதவியை கைப்பற்ற முயற்சி மேற்கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# பேசும் படம் - 36

இடம்: நல்லூர் ஆயை வீதி.



அம்மா நம்மள யாரோ படம் எடுக்கிறாங்கம்மா

குறிப்பு : அன்பு வாசகர்களே! நீங்களும் பேசும் படங்களை உங்கள் பெயர், முகவரி, சம்பவம் நிகழ்ந்த இடம் என்பவற்றுடன் அனுப்பி வைக்க முடியும்.

மின்னஞ்சல்: valampuriijaffna@gmail.com
facebook: www.facebook.com/valam.puri.1
தபால் முகவரி :ஆசிரியர், பேசும் படம், வலம்புரி,
இல.03, 2-ம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
அல்லது நேரில்.

அனுப்பியவர்:-
நி.ககிதரன்

# ஊடகங்களை அடக்குமுறைக்கு உட்படுத்த ரணில் பாரிய முயற்சி

## முதலமைச்சர் குற்றச்சாட்டு

பிரதமர் ரணில் விக்ரமசிங்க ஊடகங்களை அடக்குமுறைக்கு உட்படுத்த முயற்சிக்கின்றார் என மேல் மாகாண முதலமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார். இனவாத முத்திரை குத்தி ஊடகங்களை அடக்குமுறைக்கு உட்படுத்த பிரதமர் ரணில் விக்ரமசிங்க மேற்கொண்டு வரும் முயற்சி கண்டிக்கப்பட வேண்டியது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் தெரிவிக்கையில், ஒரு புறத்தில் தகவல்களை அறிந்து கொள்ளும் சட்ட மூலம் பற்றி பேசும் அரசாங்கம், மறுபுறத்தில் ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடக நிறுவனங்ளுக்கு அச்சுறுத்தல் விடுக்கின்றன.

இதன்மூலம் பிரதமரின் இரண்டு நாக்குகளை உடைய வழமையான முகம் வெளிப்பட்டுள்ளது.

திவயின, இருதின மற்றும் ரிவிர போன்ற ஊடகங்களின் பெயர்களையும் செய்தி ஆசிரியர்களின் பெயர்களையும் ரணில் விக்ரமசிங்க நேரடியாக குறிப்பிட்டு அச்சுறுத்தல் விடுத்துள்ளார்.

இந்த அச்சுறுத்தல் நல்லாட்சி அரசாங்கம், ஊடகத்தின் மீது பிரயோகிக்கும் கடுமையான அழுத்தமாகவே கருதப்பட வேண்டும். "இந்த ஊடகங்கள் மகிந்த ராஜபக்ஷவின் மலசல கூடங்களைக் சுத்தப்படுத்தும் வேலை செய்வதாக" பிரதமர் குருணாகலில் கூறியுள்ளார். பாதாள உலகக் குழுத் தலைவரைப் போன்று பிரதமர் நடந்து கொள்கின்றார்.



கடந்த அரசாங்க காலத்தில் ஊடக சுதந்திரம் இல்லை என குரல் கொடுத்தவர்கள் இது தொடர்பில் ஏன் அமைதி காத்து வருகின்றார்கள்.

கடந்த காலங்களில் பிழைகள் இடம் பெற்றிருந்தால் அதனை சுட்டிக்காட்டி மேலும் பிழைகளை செய்வது நல்லாட்சியாக அமையாது என பிரசன்ன ரணதுங்க மேலும் தெரிவித்துள்ளார்.

அவர் நேற்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் அவர் இந்தக் கருத்துக்களை முன்வைத்துள்ளார். (இ-5)

# மெய்வல்லுநர் போட்டி இன்று

யாழ். கோண்டாவில் றோ. க.த.க பாடசாலை இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை வெள்ளிக்கிழமை பிறபகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் ப. வாசுகி தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சபை தவிசாளர் சீ.வீ கே. சிவஞானமும் சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக உதவிப்பதிவாளர் எஸ்.கே. என். தவராஜாவும் கௌரவ விருந்தினராக நல்லூர் பிரதேச சபை தவிசாளர் ப. வசந்தகுமாரும் கலந்துகொள்ளவுள்ளனர். (இ-5)

# தமிழ் தெரியாததால் திண்டாடிய பொலிஸார்

நெல்லியடி பொலிஸ் நிலையத்திற்கு இடமாற்றம் பெற்று வந்த போக்குவரத்துப் பொலிஸார் தமிழ் மொழி தெரியாததால் நேற்று முன்தி னம் இடம்பெற்ற விபத்து சம்பவம் தொடர்பில் விபரங்களைப் பெறுவதற்கு திண்டாட வேண் டிய நிலை ஏற்பட்டுள்ளது.

மாலுசந்திப்பகுதியில் போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பேருந்து ஒன்றும் துவிச்சக்கர வண்டியும் மோதுண்டு விபத்துக்குள்ளானது.

சம்பவத்தில் அல்வாய் கிழக்கினைச் சேர்ந்த குலசேகரம் சஞ்சயன் (வயது-10) என்ற சிறுவனே காயமடைந்தவராவார்.

சம்பவம் நடைபெற்று அரைமணி நேரத்திற்குப் பின்னர் பொலிஸார் அப்பகுதிக்குச் சென்றுள்ளனர்.

பொலிஸார் அங்கு வருவதற்கு காலதாமதமாகியதைத் தொடர்ந்து பேருந்து அங்கிருந்து புறப்பட்டுச் சென்றுவிட்டது.

அத்துடன் விபத்தில் காயமடைந்த சிறுவனை மந்திகை வைத்தியசாலையில் சந்தித்து விபரத்தைப் பெறுவதற்கு முயற்சித்த பொலிஸார் தமிழ்மொழி தெரியாததால் பெரும் சிரமத்தை எதிர்கொண்டதுடன் வைத்தியசாலையில் சிறுவனுடன் இருந்த பெண்களிடம் தகவல் பெறமுயன்றும் உரியமுறையில் தகவலைப் பெற முடியாது திண்டாடியுள்ளனர். (இ-3-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய வீட்டுத் திட்டத்தில் முறைகேடு

## வடமாகாண சுகாதார அமைச்சர் கடிதம்

(கிளிநொச்சி)

**இந்திய வீட்டுத்திட்டத்தின் மூன்றாம் கட்டத்திலும் முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதாக வடமாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர், மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதனுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

"வடக்கு மாகாணத்தில் யுத்தத்தினால் இடம்பெயர்ந்து மீள்குடியேறும் மக்களுக்காக இந்திய அரசினாலும் வேறு சர்வதேச நிறுவனங்களினாலும் வீட்டுத்திட்டங்கள் வழங்கப்பட்டது தாங்கள் அறிந்ததே.

எனினும் துரதிர்ஷ்டவசமாக கடந்த அரசில அங்கம் வகித்த வன்னி மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்திய மத்திய அமைச்சரின் அதீத அரசியல் தலையீட்டின் நிமிர்த்தம் உண்மையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீட்டுத்திட்டம் சென்றடையவில்லை.

மாறாக அமைச்சரினால் நியமிக்கப்பட்ட உள்ளூர் பிரதிநிதிகளின் தலையீட்டினால் பயனாளிகள் தெரிவு பக்கச்சார்பாக நடைபெற்றுள்ளது.

குறிப்பாக இந்திய அரசின் உதவியுடனான வீட்டுத் திடடத்தில் கட்டம்-I 2012 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு அதன் தொடர்ச்சியாக கட்டம்-II, கட்டம்-III என நடைபெற்று வருகின்றது.

ஏற்கனவே இரண்டு கட்டங்கள் முடிவடைந்த நிலையில் பெரும்பாலான வீடுகள் சரியான முறையில் பகிர்ந்தளிக்கப்படாதது கண்டறியப்பட்டுள்ளது.

அதாவது தமிழர்கள்-83.2 வீதமாகவும், இஸ்லாமியர்கள்-10 வீதமாகவும், சிங்களவர்கள் 6.8 வீதமாகவும் உள்ளனர்.

இவர்களில் மீளக்குடியமர்ந்த, வீடு வழங்குவதற்கு பிரதேச செயலகத்தினால் இனங்காணப்பட்ட பயனாளிகள் தமிழர்-10 ஆயிரத்து 209 பேரும், இஸ்லாமியர் ஆயிரத்து 483 பேரும், சிங்களவர் 773 பேருமாகும்.

ஆனாலும் வீட்டுத்திட்டம் வழங்கப்பட்டதோ.தமிழர்-ஆயிரத்து 938 பேருக்கும் இஸ்லாமியர்-ஆயிரத்து 634பேருக்கும், சிங்களவர் 545 பேருக்குமாகும். இந்தவகையில் 83.2 வீதமாகவுள்ள தமிழர்களுக்கு 18.9 வீதமும் 10 வீதமாகவுள்ள இஸ்லாமியர்களுக்கு 110.1 வீதமும் 6.8 வீதமாகவுள்ள சிங்களவர்களுக்கு 70.5 வீதமும் வழங்கப்பட்டுள்ளது.

தற்போது கட்டம்-III இற்கான பயனாளிகள் கடந்த அரசின் ஆட்சிக்காலத்தில் தெரிவுசெய்யப்பட்ட நிலையில் வீடுகள் வழங்கப்படுவதற்கான ஆயத்தவேலைகள் நடைபெற்று வருகின்றன. இதில் முறைகேடுகள் நடைபெற்றுள்ளதாக பொதுமக்களால் முறைப்பாடுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

வடக்கு மாகாணத்தின் புனர்வாழ்வு அமைச்சுக்கு பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் எதிர்வரும் காலங்களில் இவ்வாறான முறைகேடுகள் நடைபெறாது இருக்க எனது அமைச்சினால் பிரேரிக்கப்படுகின்ற பிரதிநிதிகளை வடக்கின் 5 மாவட்டங்களிலும் நடைபெறும் பயனாளிகள் தெரிவில் பார்வையாளர்களாக அல்லது கண்காணிப்பாளர்களாக செயற்படுவதற்கு ஆவன செய்ய வேண்டும். இது தொடர்பில் மாவட்ட செயலாளர்களுக்கு அறுவுறுத்தல் வழங்குமாறு தங்களை தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (2)




## கிளி-உருத்திரபுரம் வரை போக்குவரத்து சீரில்லை

### மக்கள் குற்றச்சாட்டு

(கிளிநொச்சி)

கிளிநொச்சியிலிருந்து உருத்திரபுரம் வரையிலான பேருந்துகளின் போக்குவரத்து சீரின்மை காரணமாக இப்பகுதி மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

உருத்திரபுரத்திலிருந்து காலை 6.30 மணிக்கு பேருந்து சேவை இடம்பெறுமாயின் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் நோயாளர்களைப் பார்வையிடச் செல்வதற்கும் அங்கு கிளினிக் செல்வதற்கும் உதவியாக இருக்கும்.

ஆனால் உருத்திரபுரத்தில் இருந்து காலை 7.30 மணிக்கே பேருந்து சேவை ஆரம்பிக்கப்படுகின்றது.

இதேவேளை இ.போ.ச.பேருந்துகள் சில நாட்களில் மட்டுமே சேவையில் ஈடுபடுகின்றன. அத்துடன் உரிய நேரத்தில் சேவையில் ஈடுபடுவதில்லை எனவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இது தொடர்பில் கிளிநொச்சி இ.போ.ச.முகாமையாளருடன் தொடர்புகொண்டு கேட்டபோது போதியளவு சாரதிகள் இன்மையே இதற்கான காரணம் என தெரிவிக்கப்பட்டது.


ஆயினும் தனியார் பேருந்துகளும் இ.போ.ச.பேருந்துகளும் இணைந்து இந்த சேவையை செய்யக்கூடிய வகையில் கிளிநொச்சி மாவட்ட செயலகம் உரிய ஒழுங்குகளை ஏற்படுத்தவில்லை என குற்றஞ் சாட்டப்படுகின்றது.

எனவே பொதுமக்களுக்கான சேவை என்பதை நோக்கமாகக் கொண்டு தனியார் பேருந்து சங்கம், இ.போ.ச.பகுதினர், பொதுமக்கள் ஆகியோரை உள்ளடக்கியதான ஒழுங்கமைப்பை ஏற்படுத்த வேண்டும்.

அத்துடன் இப்போக்குவரத்திற்கான நேர அட்டவணையை தயாரித்து உருத்திரபுரம் பேருந்து நிலையத்திலும் கிளிநொச்சி பேருந்து நிலையத்திலும் நேர அட்டவணை காட்சிப்படுத்தி அவ் அட்டவணைப்படி பேருந்துகளை சேவையில் ஈடுபடச் செய்து பொதுமக்கள், நோயாளர்கள், மாணவர்கள், நன்மை பெறத்தக்க வகையில் கிளிநொச்சி மாவட்ட செயலகம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொதுமக்கள் கோருகின்றனர்.

இவ்விடயம் தொடர்பாக வடமாகாண போக்குவரத்து அமைச்சருக்கும் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

சிறிய விடயங்களை சிறந்த முறையில் செயற்படுத்தி பொதுமக்களின் நலனிற்கு உதவ முடியாத நிலையில், பிரச்சினைக்குரிய பெரிய விடயங்களை இவர்களால் எப்படி கையாள முடியும் என பொதுமக்கள் கேள்வி எழுப்புகின்றனர். (அ-2-254)



வன்னியூர் செந்தூரன் எழுதிய கற்சிலைமடு நாகம்மாள் ஆலய சரித்திரம் என்னும் வரலாற்று ஆய்வு நூல் வெளியீட்டு நிகழ்வு கடந்த 23 ஆம் திகதி பிற்பகல் 1.30 மணியளவில் ஆலய மண்டபத்தில் நடைபெற்றதை படத்தில் காணலாம்.

## மாடுகளுடன் மோதுண்டு குடும்பஸ்தர் படுகாயம்

(திருவையாறு)

வீதிக்கு குறுக்காக படுத்துறங்கிக் கொண்டிருந்த கட்டாக்காலி மாடுகளுடன் மோதுண்டதில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் மாங்குளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்று வருகின்றார். இச்சம்பவம் நேற்று முன்தினமிரவு 8 மணியளவில் ஒட்டுசுட்டான் கரிப்பட்டமுறிப்பு பகுதியில் நடைபெற்றுள்ளது.இதில் கிளிநொச்சி ஆனந்தபுரத்தைச் சேர்ந்த வை.சுபாஸ்கரன் (வயது-36) என்ற கிளி/மலையாளபுரம் திருவள்ளுவர் மகாவித்தியாலய ஆசிரியரே படுகாயம் அடைந்தவராவார்.

இது தொடர்பில் தெரிய வருவதாவது, மோட்டார் சைக்கிளில் பிரஸ்தாபநபர் மாங்குளத்தில் இருந்து ஒட்டுசுட்டான் நோக்கி பயணித்துக் கொண்டிருந்த வேளை மேற்படி பகுதியை அண்மித்த போது வீதிக்கு குறுக்காக படுத்துறங்கிக் கொண்டிருந்த கட்டாக்காலி மாடுகளுடன் மோதுண்டு விபத்திற்குள்ளாகி படுகாயம் அடைந்தார். இதனை அடுத்து அவர் மாங்குளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

அண்மைக்காலமாக மாங்குளம்-ஒட்டுசுட்டான் வீதியில் வீதிக்குக் குறுக்காக கட்டாக்காலி கால்நடைகள் இரவு வேளைகளில் படுத்துறங்குவதால் அடிக்கடி விபத்துக்கள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-273)

# இந்திய மற்றும் தென்னிலங்கை மீனவர்களை கட்டுப்படுத்துக!

### முல்லை.மீனவர்கள் கோரிக்கை

முல்லைத்தீவு கடற்பரப்பில் அத்துமீறும் இந்திய றோலர்கள் மற்றும் தென்னிலங்கை மீனவர்களை முற்றாக கட்டுப்படுத்துமாறு, முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர்களின் பிரதிநிதிகள், முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர், நா.வேதநாயகனிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் மாவட்டச் செயலர் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்ற கடற்றொழில் மற்றும் நன்னீர் மீன்பிடி அபிவிருத்தி தொடர்பான கூட்டத்தில் கலந்துகொண்ட முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர்களின் பிரதிநிதிகளினால் இந்த கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு கடற்பரப்பில் இந்திய றோலர்களின் அத்துமீறல், தினமும் தொடர்ந்து கொண்டிருக்கின்றது.

இலங்கை கடற்படையினர் இதற்கு ஆதரவாகச் செயற்படுகின்றனர். இதேவேளை கொக்குளாய், கொக்குத்தொடுவாய், நாயாறு போன்ற பகுதிகளில் பெருமளவு தென்னிலங்கை மீனவர்கள் மீன் பிடிக்கின்றனர்.

இதன் காரணமாக மாவட்ட கடற்றொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்திய மீனவர்களால் முல்லைத்தீவு கடற்றொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் கடலட்டைத் தொழிலை கட்டுப்படுத்த வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு விடயங்களை கடற்றொழிலாளர்கள் இதன்போது, முன்வைத்தனர்.

இது தொடர்பில் மாவட்டச் செயலாளர் கூறுகையில், முல்லைத்தீவு மாவட்டத்தில் நடைபெறும் அத்துமீறிய மீன்பிடிகளை கட்டுப்படுத்துவதற்கு எல்லோருடைய ஒத்துழைப்பும் பெறப்படும். பொலிஸாரின் ஒத்துழைப்புடன் நந்திக்கடல் பகுதியில் நடைபெறும் சட்டவிரோத கடற்றொழில் கட்டுப்படுத்தப்படும்.

முல்லைத்தீவு மாவட்ட மீன்பிடித் திணைக்களத்தில் காணப்படும் ஆளணி நெருக்கடி காரணமாக சட்டவிரோத கடற்றொழிலில் ஈடுபடுபவர்களின் மீது நடவடிக்கையெடுப்பதற்கு பொலிஸாரின் ஒத்துழைப்பு பெறப்படவுள்ளது.

நந்திக்கடலில் சட்டவிரோத கடற்றொழிலைக் கட்டுப்படுத்துவதற்கான திடீர் பரிசோதனைகள் பொலிஸாரின் உதவியுடன் மேற்கொள்ளப்படும் என்றார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தவளை இளவரசியும் குரங்கு அரக்கர்களும்!

தென் அமெரிக்காவில் உள்ள அமேசான் காடுகளில் கராயா என்ற பழங்குடி இனத்தைச் சேர்ந்தவர்கள் வாழ்ந்து வந்தனர்.

ஒரு முறை அவர்களுக்குப் பெரிய ஆபத்து வந்தது. எங்கு இருந்தோ பயங்கரமான இரண்டு குரங்குகள் அங்கே வந்தன.

அந்தக் குரங்குகள் கராயார்களைத் தாக்கின. பலரையும் கடித்துக் கொன்றன.

கிராமங்களில் புகுந்து பயிர்களை அழித்தன. குரங்குகளுக்குப் பயந்து மக்கள் வீட்டிலேயே முடங்கிக் கிடந்தார்கள்.



அங்கே ஒரு வீட்டில் மூன்று சகோதரர்கள் இருந்தார்கள். அவர்களில் மூத்தவன் சொன்னான் நான்தான் வீரன்.

வீரர்களுக்கெல்லாம் வீரன். இதைக் கேட்ட இரண்டாமவன் நானும் வீரன். வீரர்களுக்கெல்லாம் வீரன்! என்றான்.

மூன்றாமவன் நான் கோழை. உலகிலேயே மிகப்பெரிய கோழை என்றான். உடனே மூத்தவன் எது வந்தாலும் நாம் இந்த இராட்சதக் குரங்குகளைக் கொன்று நம் மக்களைக் காப்பாற்ற வேண்டும்.

இளையவன் வீட்டிலேயே இருக்கட்டும். அவன் ஒரு பயந்தாங் கொள்ளி அல்லவா... என்றான்.

இருவரும் தம்பியை வீட்டில் இருக்க வைத்தார்கள். வில் அம்புகளையும் மற்ற ஆயுதங்களையும் எடுத்துக் கொண்டு காட்டுக்குச் சென்றார்கள்.

அமேசான் நதிக்கரை வழியாக குரங்குகள் வாழ்கின்ற காட்டினுள் நுழைந்தார்கள். அங்கே ஒரு பெரிய குளம் இருந்தது. அவர்கள் ஏற்கனவே தாகத்தால் தவித்துக் கொண்டு இருந்ததால் நீர் பருகுவதற்காகக் குளத்தை நோக்கிக் குனிந்தார்கள்.

திடீரென்று உரத்த குரலில் குளம் பேசியது ... குடிக்கா தீர் கலக்காதீர் என் தண்ணீரைக் குடிக்காதீர் குளத்தின் உள்ளே ஒரு தவளையும் உண்டே!

திடீரென்று தண்ணீரின் நிறம் மாறியது. குளத்தின் அடியிலிருந்து பெரிய தவளை ஒன்று மேலே வந்தது.

வீரர்களே ...நீங்கள் குரங்குகளைக் கொல்வதற்காகப் புறப்பட்டவர்கள் தானே? குரங்குகள் எங்கே இருக்கின்றன என்று நான் சொல்கிறேன்.

அதற்குப் பதிலாக உங்களில் ஒருவர் என்னைத் திருமணம் செய்து கொள்ள வேண்டும்! என்றது.

ஒரு தவளையைத் திருமணம் செய்து கொள்வதா? எங்களுக்கு விருப்பம் இல்லை! என்ற சகோதரர்கள் தவளையை ஓங்கி உதைத்தார்கள். பாவம் அது... தண்ணீரில் மூழ்கி மறைந்தது.

அவர்கள் காட்டின் உட்பகுதியில் நுழைந்தார்கள். இராட்சதக் குரங்குகளின் கூச்சல் கேட்டது. திடீரென வெளிப்பட்ட அந்தக் குரங்குகள் மரக்கிளைகளை ஒடித்து அவர்களைத் தாக்கின. சகோதரர்கள் இருவரும் ஓடத் தொடங்கினார்கள்.

ஓடி ஓடிக் காட்டில் திசை தவறி விட்டார்கள். சகோதரர்களைக் காணவில்லையே என்று அஞ்சினான் கடைசித் தம்பி. அவர்களைத்தேடிக்கொண்டு பயத்துடன் காட்டுக்கு வந்தான்.

அவனுக்கும் மிகவும் பசித்தது. காட்டுச் செடிகளில் சில செடிகளின் கிழங்குகளைத் தோண்டிச் சாப்பிட நினைத்தான்.

அவன்தான் போதிய பலம் இல்லாதவன் ஆயிற்றே! கிழங்குகளைத் தோண்டி எடுக்க அவனால் முடியவில்லை. பறவைகளை வேட்டையாடுவதைத் தவிர்த்தான்.

அங்கும் இங்கும் நடந்தான். அப்போது ஒரு பொந்திலிருந்து பாம்பு இறங்கி வந்தது. அடேய் கோழைப் பையா இதோ! மந்திர சக்தி வாய்ந்த அம்பு! என்று ஓர் அம்பைக் கொடுத்து விட்டு

"அம்பைக் கொண்டு சென்றிடுவாய் துன்பம் தருவோரை வென்றிடலாம்!" என்று பாடியது. மந்திரசக்தி பெற்ற அம்பை அவன் பணிவுடன் பெற்றுக்கொண்டான்.

பிறகு அந்தப் பாம்பு தன் வாயில் இருந்து கொஞ்சம் விஷமும் எண்ணெயும் எடுத்தது. இரண்டையும் நன்றாகக் குழைத்து அவன் உடலில் பூசியது. உடனே பெரிய பலசாலியாக மாறி விட்டான்.

"அரக்கக் குரங்குகளை நானே அடித்துக் கொள்வேன் நிச்சயம்! காட்டில் தொலைந்த அண்ணன்களைக் கண்டு பிடிப்பேன் கட்டாயம்!"

என்று பாடினான்.

அப்போது பாம்பு அந்தக் குரங்குகள் உண்மையிலேயே குரங்குகள் அல்ல.

இரண்டு அரக்கர்கள் தான் குரங்கு வேடத்தில் திரிகிறார்கள். குறிபார்த்து சரியாக அம்பை எய்தால் இரண்டு அரக்கர்களும் செத்து விழுவார்கள்.

நீ செல்லும் வழியில் குளக் கரையில் ஒரு தவளையை சந்திப்பாய். அந்தத் தவளை சொல்வது போல் செய்! என்றது.

அவன் வில் அம்புடன் குரங்குகளைத் தேடிச் சென்றான். வழியில் பெண் தவளையைப் பார்த்தான்.

அந்தத் தவளை என்னை நீ திருமணம் செய்து கொள்வாயா? என்று கேட்டது.

பாம்பு எவ்வளவு சரியாகச் சொல்லி இருக்கிறது. தவளையைத் திருமணம் செய்து கொள்வோம். அது நன்மை தரும் என்று நினைத்த அவன் ஒரு மலர்க் கொடியைச் சூட்டி தவளையை திருமணம் செய்து கொண்டான். தவளையும் அவனும் காட்டு வழியே நடந்தார்கள். தூரத்தில் ஒரு பெரிய மரம் இருந்தது. அதன் பொந்தும் மிகப்பெரிதாக இருந்தது. பொந்துக்குள் தெரிந்தன குரங்குகளின் தலைகள். உடனே தவளை சொன்னது:

"தலைகள் தெரியுது அஞ்சாதே!
அம்பு தொடுப்பாய் தயங்காதே!"

அவன் அம்பு எய்தான். அது சரியாக ஒரு குரங்கின் நெற்றியில் பதிந்தது. உடனே இரண்டு குரங்குகளும் இறங்கி ஓடின. அவன் மீண்டும் அம்பு எய் தான். குரங்குகளின் மேற்தோல் கழன்று விழுந்தன. குரங்குத் தோலில் இருந்த அரக்கர்கள் மடிந்தார்கள். அரக்கர்களிடம் இருந்து கழன்று விழுந்த குரங்குத்தோலை எடுத்தான் தம்பி. அதை ஒரு கொடி போலக் கம்பில் கட்டி உயர்த்திக் கொண்டு ஆடினான்.



"வென்றேனே நான் வென்றேனே அரக்கக் குரங்குகளை வென்றேனே!"

பிறகு தவளையும் அவனும் காட்டுக்குள் தொலைந்த அண்ணன்களைத் தேடிப்புறப்பட்டார்கள். ஓர் இடத்தில் அவர்களைக் கண்டு பிடித்தார்கள். தம்பியை அணைத்துக்கொண்ட அண்ணன்கள் தம்பி உனது பணிவுதான் உனக்கு வெற்றியைக் கொடுத்து இருக்கிறது. வீரம் இருந்தும் எங்கள் ஆணவமே தோல்வியை கொடுத்தது என்றார்கள்.

பிறகு அவர்கள் வீட்டை அடைந்தார்கள். வீட்டுப்படியில் கால் வைத்ததும் அந்தத் தவளை அழகான இளவரசியாக மாறியது. ஒரு சாபத்தின் காரணமாக நான் தவளையாக மாறிக் குளத்தில் வாழ்ந்தேன். உனது கருணையால் சாபத்தில் இருந்து விடுபட்டு விட்டேன். இனி நாம் மகிழ்ச்சியாக வாழலாம்! என்றாள். பழைய வீடு இருந்த இடத்தில் அழகான அரண்மனையைக் கட்டி அவர்கள் நெடுங்காலம் வாழ்ந்தார்கள்.

02.2015
26

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1606 - டச்சு நாடுகாண்பயணி வில்லெம் ஜான்சூன் ஆஸ்திரேலியாவைக் கண்ட முதலாவது ஐரோப்பியர்.
- 1658 - வடக்குப் போர்களில் (1655-1661) ஏற்பட்ட பெரும் தோல்வியைத் தொடர்ந்து டென் மார்க்-நோர்வே அரசன் கிட்டத்தட்ட அரை பகுதி நிலத்தை சுவீடனுக்கு வழங்கினான்.
- 1748 - "ஜேக்கப் டி ஜொங்" (Jacob de Jong, Jnr) யாழ்ப்பாணத்தின் டச்சுக் கமாண்டராக நியமிக் கப்பட்டான்.
- 1794 - கோப்பன்ஹேகன் நகரில் கிறிஸ்டியன்போர்க் அரண மனை தீயில் எரிந்து அழிந்தது.
- 1815 - நெப்போலியன் பொனபார்ட் எல்பாவிலிருந்து தப்பினான்.
- 1848 - இரண்டாவது பிரெஞ்சு குடியரசு அறிவிக் கப்பட்டது.
- 1936 - இராணுவத்தினர் ஜப்பான் அரசைக் கவிழ்க்க இடம்பெற்ற புரட்சி தோல்வியில் முடிந்தது.
- 1952 - ஐக்கிய இராச்சியப் பிரதமர் வின்ஸ்டன் சர்ச்சில் தனது நாட்டிடம் அணுகுண்டு உள்ளதாக அறிவித்தார்.
- 1984 - பெய்ரூட்டிலிருந்து ஐக்கிய அமெரிக்கப் படை கள் வெளியேறின.
- 1991 - உலகம் பரவிய வலையை (WWW) அறிமுகப் படுத்திய டிம் பெர்னேர்ஸ்-லீ நெக்சஸ் என்ற உலகின் முதலாவது இணைய உலாவியை அறிமுகப்படுத்தினார்.
- 1991 - வளைகுடாப் போர்: குவெய்த்திலிருந்து ஈராக்கியப் படைகள் வெளியேறுவதாக ஜனாதிபதி சதாம் குசேன் அறிவித்தார்.
- 2001 - ஆப்கானிஸ்தானில் தலிபான் அரசு மிகப்பழமையான இரண்டு புத்தர் சிலைகளை அழித்தது.
- 2004 - மக்கெடோனியாவின் ஜனாதிபதி போரிஸ் டிராஜ்கோவ்ஸ்கி பொஸ்னியா, ஹெர்சகோவினாவில் விமான விபத்தில் கொல்லப்பட்டார்.

**பிறப்புகள்**

- 1903 - குயிலியோ நாட்டா, நோபல் பரிசு பெற்ற இத்தாலிய வேதியியலாளர் (இ. 1979)
- 1946 - அகமது செவாயில், நோபல் பரிசு பெற்ற எகிப்திய வேதியியலாளர்
- 1947 - தாராபாரதி தமிழ்க்கவிஞர் (இ.2000)

**இறப்புகள்**

- 1931 - ஓட்டோ வல்லாக், நோபல் பரிசு பெற்ற ஜேர்மானிய வேதியியலாளர், (பி. 1847)
- 1998 - தியோடர் [illegible], நோபல் பரிசு பெற்ற அமெரிக்க பொருளியலாளர், (பி. 1902)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் வாழ்க்கை வரலாறு

குற்றவாளியைக் கண்டுபிடிக்கும் பிரைவேட் "டிடெக்டிவ்" ஆக கௌரவ வேடத்தில் கே.பாக்யராஜ் நடித்தார்.

12-4-1985 இல் வெளியான இப்படம் நூறு நாள் ஓடியது.

### உன் கண்ணில் நீர் வழிந்தால

கலாகேந்திரா மூவிசுக்காக பாலு மகேந்திரா கதை-வசனம் எழுதி இயக்கிய படம் இது.

இப்படத்தில் ரஜினிக்கு ஜோடி மாதவி. மற்றும் சங்கீதா, விஜயலட்சுமி, ஒய்.ஜி.மகேந்திரன், பூரணம் விஸ்வநாதன், செந்தாமரை ஆகியோரும் நடித்தனர். இசை அமைப்பு: இளையராஜா.

20-6-1985இல் வெளியான இந்தப்படம், சிறந்த படமாக சென்னை சினிமா ரசிகர்கள் சங்கத்தால் தேர்ந்தெடுக்கப்பட்டது.

சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்தின் 100ஆவது படமான "ஸ்ரீராக வேந்திரர", ரஜினி அதுவரை நடித்த படங்களில் இருந்து முற்றிலும் மாறுபட்டதாக அமைந்தது. தனக்கே உரித்தான ஸ்டைல்களையும், அதிரடி சண்டைகளையும் ஒதுக்கி வைத்துவிட்டு, ராகவேந்திரராகவே வாழ்ந்து காட்டினார். ரஜினிகாந்த், ராகவேந்திரரின் தீவிர பக்தர். எனவே, ராகவேந்திரரின் வாழ்க்கை வரலாற்றை தனது 100ஆவது படமாகத் தயாரிக்க முடிவு செய்தார்.

இப்படத்தை, கே.பாலசந்தரின் "கவிதாலயா" பேனரில் தயாரிக்க முடிவு செய்யப்பட்டது.

எஸ்.பி.முத்துராமன்

### தயக்கம்

இந்தக் காலக் கட்டத்தில், ரஜினியின் பெரும்பாலான படங்களை எஸ்.பி.முத்துராமன் டைரக்ட் செய்து வந்தார். எனவே, "ஸ்ரீராகவேந்திரர்" படத்தையும் அவரே டைரக்ட் செய்யவேண்டும் என்று, ரஜினி விரும்பினார். இதுகுறித்து, முத்துராமனிடம் பேசினார்.


ரஜினி- அம்பிகா-கே.பாக்யராஜ் படம் -நான் சிகப்பு மனிதன்

டைரக்ஷன் பொறுப்பை ஏற்க முத்துராமன் தயங்கினார். காரணம், இதுவரை அவர் புராணப் படம் எதையும் டைரக்ட் செய்ததில்லை. தவிரவும் அவருடைய தந்தையும், குடும்பத்தினரும் சுயமரியாதை இயக்கத்தில் பற்றுள்ளவர்கள். எனவே, அந்த பாரம்பரியத்தில் வந்த நாம், புராணப் படத்தை இயக்குவது சரியா? என்ற கேள்வி அவர் மனதைக் குடைந்தது.

முத்துராமனின் தயக்கத்தை ரஜினி புரிந்து கொண்டார். எனினும் வேறு டைரக்டரைப் போட அவர் விரும்பவில்லை.

எஸ்.பி.முத்துராமனை நேராக, கே.பாலசந்தரிடம் அழைத்துச் சென்றார். "ராகவேந்திரர்" படத்தை டைரக்ட் செய்ய எஸ்.பி.முத்துராமன் தயங்குகிறார். நீங்கள் அவருக்கு எடுத்துச் சொல்லுங்கள்" என்று கேட்டுக்கொண்டார்.

அதன்படி, முத்துராமனிடம் பாலசந்தர் பேசினார். புராணப் படங்களை இயக்குவதில் தனக்குள்ள சிரமங்களை முத்துராமன் விளக்கினார்.

இருதரப்பு வாதங்களையும கேட்ட பாலசந்தர், இறுதியில் தன் தீர்ப்பை வழங்கினார்.


முத்துராமன்! உங்களுக்குள்ள பிரச்சினை எனக்குப் புரிகிறது. ரஜினியை வைத்து எத்தனையோ மாறுபட்ட படங்களை எடுத்தவர் நீங்கள். இந்தப் படத்தையும் நீங்கள் சிறப்பாக எடுக்க முடியும். ரஜினியின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து, ஒப்புக்கொள்ளுங்கள். இந்தப் படத்தை சிறப்பாக எடுக்க கவிதாலயா எல்லா வசதிகளையும் செய்து கொடுக்கும். உங்கள் விருப்பம் போல் படத்தை எடுக்கலாம். செலவைப்பற்றி கவலை வேண்டாம் என்றார், பாலசந்தர்.

முடிவில், ராகவேந்திரர் படத்தை உருவாக்க சம்மதித்தார், முத்துராமன்.

### வசனம் - இசை

படத்துக்கு வசனம் எழுதும் பொறுப்பை ஏ.எல்.நாராயணன் ஏற்றார். அவர் பக்தி சிரத்தையுடன் வசனத்தை எழுதினார். வாலி எழுதிய பாடல்களுக்கு இளைய ராஜா இசை அமைத்தார். ராக வேந்திரர், குழந்தையாகப் பிறப்பதிலிருந்து படம் தொடங்குகிறது. குழந்தைக்கு வேங்கடநாதன் என்று பெயர் சூட்டுகிறார்கள். வேங்கடநாதன் சிறுவயதிலேயே மிகுந்த புத்திசாலியாகவும், சாஸ்திரங்களில் கரை கண்டவராகவும் விளங்குகிறான்.

(தொடரும்)



# கருவாச்சி காவியம்

## வைரமுத்து- 88

நெஞ்சு நெறபெருக்கா இருப்பதனால விண்ணு விண்ணுன்னு தெறிக்குது விட்டு விட்டு.

பொதுவாப் பேறுகாலம் ஆன பொம்பளைகளுக்கு ரெண்டு வலி வரும்.

வகுத்துல சுண்டுவலி மாருல நெஞ்சு வலி.

சுண்டுவலி வரல கருவாச்சிக்கு; நெஞ்சு வலி வந்திருச்சு இப்ப.

சொல்லிவிட்டதும் கையில இருந்த கஞ்சித் தட்டத் தரையில வச்சுட்டுக் கூடவே ஓடி வந்துட்டா மருத்துவச்சி சீலையம்மா.

எத்தன மார்புக்கு எடுத்து விட்டவ? இது அவளுக்கு லேசு.

அஞ்சாத பயப்படாத செத்த வெடத்துல சொடக்கெடுத்த வெரலு மாதிரி சொகப்படுத்திடறேன் தாயி.


பாதி கிழிஞ்ச பழைய சீல்ய எடுத்தா.

எளம் வெந்நியில நனைச்சா. முறுக்கிப் புழிஞ்சா.

கருவாச்சிய மண்டிபோட்டு ஒக்கார வச்சா.

கனத்த மார்பு ரெண்டையும் துணிக்குள்ள அள்ளிப் போட்டுக் கட்டிப் பின்பக்கம் முதுகுல ஒரு சுத்துச் சுத்தி முடிச்சுப் போட்டா.

மார்பு தரைப்பாக்கக் குனின்னா குனிஞ்சா.



இப்ப மொழங்கால அவ முதுகுல அழுத்தி இறுக்குறா சீலய.

ஈரத்துணி வழியா சாரை சரையா ஒழுகுதய்யா பாலு.

தாய்ப்பாலே சுத்தம் இது வடிகட்ன தாய்ப்பாலு.

மருத்துவச்சி கசக்காமக் கசக்குறா. அழுத்தாம அழுத்துறா.

காம்பு வழியா வீசம்படி பால் வெளியேறுது.

பாலுக்குப் பின்னாலேயே வாரேன் வாரேன்னு வலியும் வெளியேறுது.

இப்ப எப்படி இருக்கு தாயி?

வகுத்துலயிருந்து ஒரு பிள்ளைய எறக்கி வச்ச மாதிரி இப்ப நெஞ்சிலயிருந்து ஒரு பிள்ளைய எறக்கி வைக்கிற மாதிரியிருக்கு.

ரெண்டு பேரும் முதுகுக்காட்டிக்கிட்டு சுவத்துப்பக்கம் நின்னு வைத்தியம் பாத்து முடிச்சாக திரும்பிப் பாத்தா.

பிள்ளையப் போட்டு வச்ச பாய் கெடக்கு.

பாயில போட்டு வச்ச பிள்ளையக் காணோம்.

கருவாச்சிக்குத் தெரியாமப் பிள்ளையத் தூக்கிட்டுப் போன சுப்பஞ் செட்டியாரு நேர வந்து நின்னாரு சடையத்தேவர் வீட்டு வாசல்ல.

யப்பா! சடையத்தேவா பெரிய மனிசா! எங்கையில இருக்கிறது யாருன்னு கண்ணக் கொண்டு பாரப்பா.

ஒன் வம்ச வாரிசு வந்திருக்கப்பா ஒங்குலக் கொழுந்து.

ஒன்னியவே உரிச்சு வச்சிருக்கான் பாரு களவாணிப்பய.

ஒங்கிட்ட சொத்து கேட்டு வரலப்பா. முத்தங்கேட்டு வந்திருக்கான்.


ஏலே பயலே! முழிச்சு பார்ரா ஒன் தாத்தன உரிமை இல்லேன்னு போயிருமா? எங்க ஒரு எத்து எத்தி எச்சியத் துப்பு கெழவன்மேல.

வம்பு புடிச்சவன் உன் தாத்தன்.

அவன் வைராக்கியத்துல எட்டி ஒரு மிதி மிதி!..... (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆங்கில மொழியின் முக்கியத்துவமும் சில நுட்பங்களும்



இக் கட்டுரையின் முக்கிய நோக்கமானது இந்து சமுத்திரத்தின் முத்து என வர்ணிக்கப்படும் எமது நாட்டின் தொடர்பு மொழியொன்றாக விளங்குகின்ற ஆங்கில மொழியினை ஆவலுடன் கற்பதற்கு மாணவர்களை ஊக்குவிப்பதே ஒரு முயற்சியாகும். ஊக்குவித்தல் என்பது சம்பந்தப்பட்டவர்களை சம்பந்தப்பட்ட விடயத்தினை பயிலுவதற்கு தூண்டுவதாகும். அத்துடன் நிகழ்ச்சியின் மற்றைய நோக்கம் செயல் புரியத் தூண்டுதல். அதாவது மாணவர்களை சுறுசுறுப்பாகவும் பயனுறுதியுடனும் வினைத்திறனுடனும் உளமார்ந்த ஆவலுடனும் அவர்களின் வருங்கால நன்மைக்காக ஆங்கில மொழியைக் கற்கத் தூண்டுதலாகும். இதன் மூலம் மாணவர்கள் தனிப்பட்ட ரீதியில் மட்டுமல்லாமல் அவர்களின் குடும்பம் அவர்கள் சார்ந்துள்ள சமூகம் என்பவற்றில் மாற்றங்களை ஏற்படுத்தி பரஸ்பர புரிந்துணர்வுடன் இயற்கை அழகுவாய்ந்த இந் நாட்டில் யாவரும் ஒற்றுமையுடன் வாழ்வதற்காக வழி சமைப்பதாகும்.

மேடைப் பேச்சு தொடர்பாக ஒரு சர்வதேச சஞ்சிகையில் "மேடையில் பேசுவது பலருக்கு பிடித்தமல்லாத விடயம்" எனக் கூறப்படட்டுள்ளது. அதற்கான காரணம் மேடைக்கூச்சம் அது ஒரு தற்காலிக இடர்பாடாக இருப்பதால் உரிய பயிற்சி மூலம் வெற்றியடைய முடியும். "முயற்சி திருவினையாக்கும்" உரை நிகழ்த்துவதானது மூன்று விடயங்களை உள்ளடக்கியது . பேச்சாளர் - பேசப்படும் விடயம் - கேட்போர். அரிஸ்ரோட்டில் என்பவர் பிரசித்தி பெற்ற கிரேக்க தத்துவவியலாளரும் விஞ்ஞானியுமாவார். மேடைப் பேச்சு தொடர்பான 2000 ஆண்டுகளுக்கு மேற்பட்ட அவரது வரைவிலக்கணத்தின்படி மேடைப்பேச்சு என்பது "தூண்டுதல்" எனப் பொருள்படும். இவ்வரைவிலக்கணம் இன்றுவரை யாராலும் திருத்தியமைக்கப்படவில்லை.

ஒருவரிடம் கல்வித் தகைமை இருந்தும்தேவைக்கேறப பயனுறுதியான உரையொன்றினை நிகழ்த்த முடியாவிடின் அத்தகைய கல்வித் தகைமையின் பெறுமதி பூச்சியமாகும். எனவே உரிய பயிற்சியின் மூலம சுய நம்பிக்கையினை வளர்த்து தங்களின் எதிர்காலத்தினை வளமாக்கிக் கொள்ளல் வேண்டும். மேடைக்கூச்சம் காரணமாக அறிஞர் ஒருவர் தமது பெறுமதியான அறிவினை தேவையானவர்களுக்கு வழங்க முடியாமல் போவது வருத்தத்துக்குரியதே. ஒரு கிராமத்தில் அப்படியான ஒரு அறிஞர் வாழ்ந்தார். மேடைப் பேச்சு அவருக்கு பிடிக்காத விடயம். ஆனால் கிராமத்தவர்களின் வற்புறுத்தல் காரணமாக தன்னிடம் மூன்றுமுறைக்குமேல்வேண்டுகோள் விடுக்கப்படல் கூடாது என்ற நிர்ந்தனையுடன்மேடைப் பேச்சுக்கு சம்மதித்தார். தேவையான ஏற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டு பேச்சு ஆரம்பத்தில் வழமையான வணக்கத்தைக் கூறி தலையங்கத்தினைக் குறிப்பிட்டு இன்று என்ன விடயம் பற்றி பேசப் போகின்றேன் எனக் கேட்டார். சபையோரும் ஆமாம் எமக்குத் தெரியும் எனக் கூறினார்கள். அறிஞரோ தெரிந்த உங்களுக்கு எதையும் கூறிப் பயனில்லை என்று மேடையை விட்டு சென்று விடடார். இரண்டாவது முறையும் மேடைக்கு வந்தபோது அதே கேள்வியை அவர்களிடம் கேட்டபோது அவர்கள் எதுவுமே தெரியாதெனக் கூறினார்கள். அறிஞரோ எதுவும் தெரியாத உங்களுக்கு எதனையும் கூறிப் பயனில்லை எனக்கூறி விட்டுச் சென்று விட்டார். கிராமத்தவர்களின் வற்புறுத்தல் காரணமாக மூன்றாவது முறை மேடைக்கு வந்த அறிஞர் முன்பு கேட்ட கேள்வியையே கேட்டபோது சபையோர் எங்களின் அரைவாசிப் பேருக்குத் தெரியும். மிகுதிப் பேருக்குக் தெரியாதெனக் கூறினார்கள். அறிஞரோ தெரிந்த அரைவாசிப் பேரும் தெரியாதவர்களுக்கு சொல்லிக் கொடுங்கள் எனக் கூறிவிட்டுச் சென்று விட்டார். அதற்கான காரணம் மேடைக்கூச்சமாகும். ஆனால் உரிய பயிற்சி தங்களின் அறிவு ஆற்றல்களை மற்றவர்களுக்கும் அறியப்படுத்த உதவும்.

### கல்வி என்ற பதத்தின் அர்த்தம் யாது?

மொழியொன்றினை கற்பது தொடர்பான நான்கு திறன்கள் எவையென்பதுடன் மாணவர்களின் பேச்சுக்கு உதவும் உறுப்புக்கள் எவை?

மொழியொன்றினை கற்பதற்கு மேற்படி திறன்களை எவ்வாறு பொருத்தமான பயனுறுதியான வினைத் திறனுடனான மற்றும் முழு மனதுடன்மேன்மைப்படுத்தலாம்?

### ஆங்கில மொழியினை ஏன் கற்க வேண்டும்?

"Nothing succeeds like success" என ஆங்கிலக் கூற்று உள்ளது. அதாவது ஒருவர் ஒரு விடயத்தில் வெற்றி பெற்றால் வாழ்க்கையில் ஏனைய விடயங்களிலும் வெற்றி பெறுவதற்கு வழி கோல முடியும். அதற்கான முதல் விடயம் கல்வியாகும். அத்துடன் மாணவர்கள் திட சங்கற்பம் உடையவர்களாக இருத்தல் வேண்டும். வெற்றிக்கான விலை உழைப்பு என்று ஒரு கூற்றும் உண்டு. அதாவது கடின உழைப்பின் மூலமே வெற்றி கிட்டும்.

மொழி என்றால் என்ன? குறிப்பிட்ட ஒரு நாட்டில் வாழுகின்ற மக்களினால் ஒருவருக்கொருவர் பேச்சு மூலம் அல்லது எழுத்து மூலம் தொடர்பு கொள்ளும் முறையே மொழி எனப்படும். இவ் உலகிலே ஏறத்தாழ 7000 மொழிகள் இருபபினும் ஆங்கில மொழி சர்வதேச மொழியாக ஏற்றுக் கொள்ளப்பட்டமை நோக்கற்பாலது. அதற்கான காரணம் அநேக நாடுகளில் அது பாவனையில் உள்ளமையாகும். இலங்கையில் மட்டுமல்ல சர்வதேச மட்டத்திலும் ஆங்கிலமொழியானது எல்லா வகையான தொடர்பாடல்களிலும் முக்கிய பங்காற்றுவது நோக்கத்தக்கது.

ஆங்கிலம் உலக மொழியாகவிருப்பதுடன் அம் மொழியினை நன்றாகப் பேச, எழுத இயலுமானால்ஒருவன் உந்து சக்தியைப் பெற்றுக்கொள்ள முடியும். சிறிது காலத்திற்கு முன்பு ஆங்கிலமொழி உயர் அந்தஸ்து உடைய வகுப்பினரின் சொத்தாகவே காணப்பட்டது. எமது நாட்டில் ஆங்கில மொழி தொடர்பு மொழியாக விளங்குவதுடன், தொழில் வாய்ப்பு மற்றும் உயர்கல்வி பெறுதல், பல்வேறு காரணங்களுக்காக வெளிநாடு செல்லவும், வாழவும் வேண்டியிருப்பதால் ஆங்கில மொழியின் தேர்ச்சி இன்றியமையாததாக உள்ளமையுடன் தற்போது கிராமங்களிலும் ஆங்கில மொழிப்போதனை ஆரம்பிக்கப்பட்டிருப்பது கண் கூடு. இன்று ஆங்கிலமொழி பல அபிவிருத்தியடைந்த மற்றும் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் புலமைசார் கருவியாக உபயோகத்தில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. கல்வியில் அபிவிருத்தியடைந்துவரும் இந்நாட்டிலும் ஆங்கிலக் கல்வியினை புகட்டுவதிலும், கற்பதிலும் உகந்த



கல்வித் தரிசனம்

முறைகள் பின்பற்றப்படின், ஏனைய மனித திறமைகள் போன்று ஆங்கிலமொழித் திறனையும் வளர்த்துக் கொள்ள முடியும்.

அறிவு என்ற சக்தி கல்வியின் ஊடாகவே பெறப்படுகின்றது. கல்வி ஒருவருடைய பல்வேறு ஆளுமைகளிலும் முக்கிய பங்காற்றுகின்றது. இலங்கையில் பெற்றோர் பிள்ளைகளுக்கு கல்வியூட்டுவதனை தமது முக்கிய பணியாகக் கருதுகின்றனர். அதன் பயனாக கல்வி மிகவும் போட்டித்தன்மையுடையதாக மாறியுள்ளதுடன் புரிந்துகொள்ளக்கூடிய காரணங்களையிட்டு ஆங்கிலக் கல்வி மிக முக்கியத்துவம் பெறுகின்றது.

1815ஆம் ஆண்டில் ஆங்கிலேயர் இலங்கையில் ஆட்சி அமைத்ததுடன் ஆங்கிலம் உத்தியோக மொழியாகவும் பிரகடனப்படுத்தப்பட்டதுடன் பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகளுடன் பாடசாலைகளும் நிறுவப்பட்டன. இலங்கை 1948இல் சுதந்திரம் அடைந்த பின்னர் 1950இன் நடுப்பகுதிகள் வரையில் ஆங்கிலமொழியின் தனித்துவம் இழக்கப்படவில்லை. பின்பு பொது நிர்வாகம் மற்றும் போதனா மொழிகளாக தாய் மொழிகள் அமுல்படுத்தப்பட்டதனால் ஆங்கிலமொழி புகட்டலிலும், கற்றலிலும் வீழ்ச்சி ஏற்பட்டது. ஆனால் தற்போது வளர்ந்துவரும் விஞ்ஞான மற்றும் தொழில் நுட்ப காரணிகள் மற்றும் எமது சமூகத்தினர் பெருமளவு புலம்பெயர்ந்து வாழ்வதனாலும் ஆங்கில மொழியின் முக்கியத்துவம் உணரப்படுகின்றமை யதார்த்தமே. கடந்த சில வருடங்களாக நாட்டின் பல பாகங்களிலும் சர்வதேச பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை சிந்திக்கத்தக்கது.

விடயங்களை சரியாகக் கணித்து நாட்டில் சமூக, சமய மற்றும் தொடர்பாடல் விடயங்களில் முன்னேற்றம் காணவும் நாட்டில் ஒற்றுமையினை ஏற்படுத்தவும், வெளிநாடுகளுடனான தொடர்புகளைப் பேணவும் கல்வித் துறையில் முன்னேற்றம் அடையவும் ஆங்கிலக் கல்வி அவசியமானது. எனவே இளஞ் சந்ததியினரை ஆர்வமான முறையில் ஆங்கிலக் கல்வியினை பயனுறுதியுடனும், வினைத்திறனுடனும் கற்குமாறு ஊக்குவிப்பது எமது கடமை.

ஒரு மொழியினைப் பொறுத்த வரையில் உன்னிப்பாக செவிமடுத்தல், பேசுதல், வாசித்தல் மற்றும் எழுதுதல் ஆகிய திறன்கள் சம்பந்தப்பட்டுள்ளன, பிள்ளைகள் முதலில் உன்னிப்பாக செவிமடுத்தல் மூலமே மொழியினை அறிந்து பின்னரே பேசவும், வாசிக்கவும், எழுதவும் பயில்கின்றனர். ஆங்கிலமொழி மூலம கல்வி கற்ற குடும்பங்களில் பேசுவதற்கு ஆங்கிலம் பயன்படுத்தப்படுவதால் பிள்ளைகளும்இலகுவாக ஏனையவர்களிலும் பார்க்க கற்றுக் கொள்ள ஏதுவாகின்றது. எனவே மொழி ஆர்வலர்என்ற வகையில் குறிப்பாக அக்கறையுடன் பயில விரும்பும் இளஞ்சந்ததியினருடன் இக் கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன்.

ஆங்கிலமொழியில் சொற்களின் உச்சரிப்பு சில சமயங்களில் ரசனை மிகுந்ததாக அமைவதுண்டு. எனவே பயில்வோர் சரியான உச்சரிப்பினை பயில முயல்வது ஆரோக்கியமானது. எத்தனையோ மாணவர்கள் உச்சரிப்பு பிரச்சினை காரணமாக தங்கள் திறமைகளை வெளிப்படுத்தத் தயங்குவது இயல்பு. அவர்கள் தயக்கத்தினைப் தொடர் பயிற்சி மூலம் இத் தயக்கத்தினை வெற்றிகொள்ள முடியும். உச்சரிப்பினைப் பொறுத்தவரையில் சம்பந்தப்பட்டவரின் பேச்சுக்கு அது உதவும். உறுப்புக்கள் ஒத்துழைக்க வேண்டும். பேசுவதற்கு உதவும் உறுப்புக்கள் நாக்கு, பற்கள், உதடுகள் மற்றும் அண்ணம் என்பனவாகும். இவை உரியமுறையில் இயங்கினால் உரிய உச்சரிப்பினைப் பெற முடியும். அவ்வாறு உச்சரிப்பினை முன்னேற்றுவதற்கு பிள்ளைகள் ஆங்கிலப் பாடங்களை தினமும் அதிகாலையில் உரத்து வாசிக்க வேண்டும். இதனால்இரண்டு பயன்கள் கிடைக்கும். முதலாவதாக உச்சரிப்பு வளம் பெறும். இரண்டாவதாகப் பெற்றோர் மகிழ்ச்சியடைவர். அகராதி உபயோகிக்கும் பழக்கத்தினையும் சிறு வயது முதலே மேற்கொண்டால் பல விடயங்களை அதாவது சொல்லின் வகை, உபயோகிக்கும் பாங்கு என்பவற்றினையும் சுலபமாக அறிய முடியும் மேலும்எழுத்துக் கூட்டல் (Spelling) மிகமிக முக்கியம். ஏனெனில் சரியான கருத்தினைப் பெற சரியான எழுத்துக்கூட்டல் அவசியம். சரியான எழுத்துக் கூட்டலை மாணவர்கள் பிரயோசனமான பொழுதுபோக்காகவும் மேற்கொள்ள முடியும். மாணவர்களை ஊக்குவிப்பதன் பொருட்டே சம்பந்தப்பட்டவர்கள் ஆங்கிலமொழித் தினப் போட்டிகளை எழுத்துக் கூட்டல் (Spelling), ஒப்பவித்தல் (Recitation), கையெழுத்து (Hand Writing) மற்றும் ஆக்கபூர்வமான படைப்பு (Creative writing) ஆகிய விடயங்களை உள்ளடக்கிய போட்டிகளை நடாத்துகின்றனர். சில வருடங்களுக்கு முன்பு காணப்பட்ட வாசித்தல் (Reading) கைவிடப்பட்டுள்ளது. அதனை மீளவும் அமுல்படுத்தல் வரவேற்கத்தக்கது. எனவே ஆங்கில மொழி கற்பதில் மாணவ சமுதாயம் துடிப்பாக, கூர்மையாக கற்க விரும்புபவர்களாக மாறுவதுடன் உரிய வசதி, வாய்ப்புக்களையும் ஏற்படுத்திக் கொடுப்பது பெற்றோர் மற்றும் சம்பந்தப்பட்டோரின் தார்மீகக் கடமை.

கற்றவர்களின் கூற்றுக்கிணங்க ஒரு பிள்ளையின் முன்னேற்றத்தில் பெற்றோரும் ஆசிரியர்களும் முக்கிய பங்காற்றுகின்றனர். அவர்கள் தாங்களும்மாணவர்களாகக் கருதி செயற்பட்டால் பிளளைகளின் தேவை களை நிறைவேற்றமுடியும். Emerson Aptly என்ற அறிஞர் கூறினார் மக்கள் வயது முதிர்வதில்லை. அவர்களின் வளர்ச்சி முடியும் போது வயோதிபம் அடைகின்றார்கள் இளமை என்பது வாழ்க்கையின் ஒரு படிநிலையல்ல. ஆனால் அது மனதின் படிநிலைகளில் ஒன்று. ஒருவர் கல்வி தொடர்பில் விருப்பம் கொள்ளாவிடில் வற்புறுத்தல் மூலம் அவரை மாற்ற முடியாது. எனவே பெற்றோர்கள் அன்பு செலுத்துபவர்களாகவும் ஆசிரியர்கள் கருணையுடன் சகிப்புத் தன்மையுள்ளவர்களாகவும் செயற்படல்வேண்டும். அப்போது மாணவர்கள் ஊக்கத்துடன் முன்னேறமுடியும்.

ஒவ்வொரு பிள்ளையும் இயற்கையின் கொடை, அவர்களுக்கு இயற்கையாகவே அவதானித்தல் கற்கும் ஆற்றல், புரிந்து விளங்கிக் கொள்ளுதல் அமையும். பரீட்சைகள் ஒருவருடைய வாழ்வை தீர்மானிப்பனவல்ல. அவை வாழ்வில் அடுத்தகட்டத்திற்கு முன்னேறும் படிக்கற்கள். மாணவர்கள் தங்கள் கல்வியை மனமார்ந்த விருப்புடன் கற்பதற்கு தாங்களை தயார்படுத்திக்கொள்ளல் வேண்டும். மாணவர்களை பொறுத்தவரையில் அவதானம் செலுத்துதல் முக்கியமானது. அவதானம் என்னும் போது சம்பந்தப்பட்ட விடயத்தினை கூர்மையாக செவிமடுத்தல், அதைப்பற்றி சிந்தித்தல் அத்துடன் தங்களது முழுக் கவனத்தையும் எண்ணங்களை சிதறவிடாது கல்வி மேல் செலுத்துதல்வேண்டும்

மாணவப் பருவமே கற்றலுக்கு உரியது. முதியவர்கள் விடயத்தில் அவர்களின் மனம் வேலை குடும்பம் வேறு பொறுப்புக்கள் தொடர்பாக சிந்திக்க வேண்டியிருக்கும். ஆனால் மாணவர்களின் மனம் பொறுப்புக்களற்றது. எனவே மாணவர்கள் தங்களின் வளமான எதிர்காலத்திற்காக கல்வியில் ஊக்கம் செலுத்தல் வேண்டும். எனவே மாணவர்களாகிய நீங்கள் சுறுசுறுப்பானவர்களாக, உரிய நேரத்தில் உரிய பணிகளை செய்பவர்களாக நேர்ச்சிந்தனை உடையவர்களாக கருமங்களில் கண் செலுத்துபவர்களாக, துடிப்பானவர்களாக, கூர்மையானவர்களாக, உண்மைத தன்மையாக எல்லா வற்றிற்கும் மேலாக முழுமனதாக கல்வியை பற்றியே சிந்திப்பவர்களாக இருந்தால் ஒளிமயமான எதிர்காலம் நிச்சயம்.

மொழியென்பது ஒரு மனிதனிற்குரிய விசேட ஆற்றலாகும். சிறு பிள்ளைகள் மற்றும் வளர்ந்தோரின் வாழவில் அவர்களின் உணர்வுகள் எண்ணங்கள் என்பவற்றைப் பெற்றுக் கொள்ளவும் பரிமாறிக் கொள்ளவும் மொழி முக்கிய பங்காற்றுகின்றது. மொழியானது ஒருவரின் வாழ்வுடன் பின்னிப் பிணைந்துள்ளமையால் மொழியில்லாத உலகினை கற்பனைசெய்யவும்முடியாது.

மொழித் திறன்கள் ஒருவரின் தனிப்பட்ட மற்றும் சமூக அபிவிருத்தியில் முக்கிய பங்காற்றுகின்றன. செவிமடுத்தல் மற்றும் வாசித்தல்மூலம் ஒருவர் விடயங்களைப் பெற்று அனுபவித்து, புரிந்து கொள்ளமுடியும்.


(தொடரும்)

லயன். அம்பலவாணர் துரைசிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போப்பாண்டவர் முற்றாக மறுப்பு

**அன்னை தெரேசாவின் சேவைகள் நல்லதாக இருக்கலாம். ஆனால் சேவை செய்து மத மாற்றம் செய்வதை அவர் நோக்கமாக கொண்டிருந்தார் என்று ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன் பகவத் கூறிய கருத்தை போப் பாண்டவர் பிரான்சிஸ் முற்றாக மறுத்துள்ளார்.**



ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன் பகவத் ராஜஸ்தானில் அண்மையில் நடந்த ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசினார். அப்போது 'அன்னை தெரேசாவின் சேவைகள் நல்லதாக இருக்க லாம். ஆனால். சேவை செய்து மதமாற்றம் செய்வதை அவர் நோக்கமாக கொண்டிருந்தார்" என்று கூறினார்.

அவரது இந்த பேச்சு பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. காங்கிரஸ் உள்ளிட்ட அரசியல் கட்சிகளும் கிறிஸ்தவ அமைப்புகளும் கண்டனம் தெரிவித்து வருகின்றன.

இந்த நிலையில். அன்னை தெரேசா குறித்து ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன் பகவத் பேசிய கருத்தை போப் பாண்டவர் முற்றாக மறுத்துள்ளார். இது தொடர்பாக வாடிகன் செய்தி தொடர்பாளர் தொலைக்காட்சி ஒன்றில் போப் பாண்டவரின் கருத்தை கூறியிருந்தார்.

புனிதமான கிறிஸ்தவ சமய குருவின் சேவையை அரசியலாக்க கூடாது. ஆசீர்வதிக்கப்பட்ட அன்னை தெரசா சமுதாயத்தில் அடக்கி ஒடுக்கப்பட்ட ஏழை. எளிய மக்களின் நம்பிக்கை வழிகாட்டியாகவும். கலங்கரை விளக்கமாகவும் திகழ்ந்தார்.

அவரது வாழ்க்கை உலக மக்களுக்கு ஒரு தூண்டுகோலாக இருந்தது" என்று தெரிவித்தார். (இ-5)

பாரதச் செய்தி

# 66 கோடி ரூபா சொத்துக்குவிப்பு ஆதாரங்கள் எங்கே? நீதிபதி சரமாரி கேள்வி

சொத்து குவிப்பு வழக்கு இறுதி நிலையை அடைந்துள்ள நிலையில். கர்நாடக உயர் நீதிமன்ற நீதிபதி ரூ.66 கோடி சொத்து குவிப்புக்கு ஆதாரங்கள் எங்கே என்று சரமாரி கேள்விகளை எழுப்பியுள்ளார.

சொத்து குவிப்பு வழக்கின் மேல் முறையீட்டு மனு மீதான விசாரணை கர்நாடக நீதிமன்றத்தில் நீதிபதி குமாரசாமி முன்னிலையில் தினமும் நடைபெற்று வருகிறது.

இந்நிலையில் நேற்று முன்தினம் 33ஆவது நாள் விசாரணை தொடங்கியதும் நிறுவனங்கள் தரப்பில் ஆஜரான சட்டத்தரணி ஆதித்யசோதி. மொடோ அக்ரோ மற்றும் ரிவர்வே நிறுவனங்களின் சொத்து பட்டியலை தாக்கல் செய்ததுடன் தனது வாதத்தை நிறைவு செய்தார்.

இதையடுத்து இந்தோ தோகா உள்ளிட்ட நிறுவனங்கள் சார்பில் ஆஜரான மூத்த சட்டத்தரணி உதய் ஹொல்லா. எங்கள் நிறுவனங்களில் ஜெயலலிதா முதலீடு எதுவும் செய்யவில்லை. நாங்கள் ஜெயலலிதாவின் பினாமிகளும் அல்ல.

நாங்கள் முறையாக வங்கியில் கடன் பெற்று நிறுவனங்களை தொடங்கினோம். அதற்குரிய ஆவணங்கள் எங்களிடம் உள்ளன.

எனவே. எங்கள் நிறுவனங்களின் சொத்துகளை முடக்கியது தவறானது என்றும் இந்த சொத்துகளை விடுவிக்க வேண்டும் எனவும் வாதிட்டதை தொடர்ந்து நிறுவனங்களின் இறுதி வாதம் நிறைவடைந்தது.

இதையடுத்து நீதிபதி குமாரசாமி. ஜெயலலிதா மீது கூறப்பட்டுள்ள சட்டவிரோதமாக 66 கோடி சொத்து குவிப்பு குற்றச்சாட்டுக்கு உங்களிடம் ஆவணங்கள் இருக்கிறதா? என்று கேள்வியெழுப்பினார்.

இதற்கு வாதத்தின்போது ஆவணங்களை தாக்கல் செய்வதாக அரசு சட்டத்தரணி பதிலளித்தபோது குறுக்கிட்ட நீதிபதி. ஜெய்லலிதா வருமானத்துக்கு அதிகமாக சொத்து குவித்ததாக வழக்கு தொடரப்பட்டுள்ளது.

அதற்கு ஒவ்வொரு பைசாவுக்கும் ஆவணங்களை தாக்கல் செய்ய வேண்டும். ஆதாரங்கள் எங்கே? என்று கேட்டுள்ளார்.

அப்போது விசாரணை அதிகாரி சம்பந்தம். குற்றப்பத்திரிகையில் குற்றச்சாட்டுகள் குறித்து கூறப்பட்டுள்ளது என்றதற்கு. குற்றப்பத்திரிகையில் இருக்கும் தகவல்களை வைத்து முடிவு செய்ய முடியாது. அதற்கான ஆதாரங்களை நீங்கள் தாக்கல் செய்ய வேண்டும் என்று நீதிபதி கூறியுள்ளார்.

பின்னர் உணவு இடைவேளைக்கு பிறகு அரசு சிறப்பு சட்டத்தரணி பவானிசிங் தனது இறுதி வாதத்தை தொடங்கினார். இந்த வழக்கில் முதல் விசாரணை அதிகாரி நல்ல மநாயுடுவின வாக்குமூலத்தை வாசித்தார.


அப்போது நீதிபதி குறுக்கிட்டு பல வேறு கேள்விகளை எழுப்பிய போது அரசு சட்டத்தரணி அதற்கு பதில் சொல்லாமல் அமைதியாக நின்றுள்ளார். மேலும். ஜெயலலிதா மீது கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டை ஆதாரத்துடன் நிரூபிக்க வேண்டும் என்று அரசு சட்டத்தரணிக்கு நீதிபதி உத்தரவிட்டுள்ளார். (இ-5)

# தெரேசா குறித்து மோகன் பகவத் கூறியது கசப்பான உண்மையென சிவசேனா கருத்து

அன்னை தெரசா சேவை செய்ததன் பின்னணியில் மதமாற்றமே முக்கியமாக இருந்ததாக ஆர். எஸ்.எஸ். தலைவர் மோகன் பகவத் கூறியிருந்தது.கசப்பானஉண்மைஎன்று சிவசேனா கருத்துக் கூறியுள்ளது.

இது குறித்து சிவசேனாவின் சாம்னா பத்திரிகையில் வெளியாகியிருக்கும் தலையங்கத்தில். இந்தியாவில் உள்ளவர்களை கிறிஸ்தவ மதத்துக்கு மாற்றுவதற்காக அனுப்பப்பட்டவர்தான் அன்னை தெரசா. இஸ்லாமியரகள் வாளைக் காட்டி மிரட்டி மதமாற்றம் செய்தனர். கிறிஸ்தவர்கள் பணத்தையும். சேவையை காட்டி மதமாற்றம் செய்தனர் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

மேலும். அன்னை தெரேசாவின் சேவை மதிக்கப்பட வேண்டியது தான். ஆனால். எத்தனையோ சமூக சேவர்கள். அதே சேவையை மத மாற்றம் இல்லாமல் செய்துள்ளனர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-5)



ஊழலுக்கு எதிரான அமைப்பின் தலைவர் அன்னா ஹசாரே தலைமையில் நரேந்திர மோடி அரசின் சர்ச்சைக்குரிய நில சுவீகரிப்பு சட்டத்திற்கு எதிராக நேற்று முன்தினம் இடம் பெற்ற போராட்டத்தில் புதுடில்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் கலந்து கொண்ட போது...

# தொழிற்சாலையில் தீ விபத்து 12 பேர் சம்பவ இடத்தில் பலி!

பஞ்சாபில் உள்ள குழாய் தயாரிப்பு ஆலையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை ஏற்பட்ட தீ விபத்தல் 12 பேர்பலியாகியிருந்தனர்.

இதுகுறித்து பொலிஸ் தரப்பில் கூறப்படுவதாவது.

பஞ்சாப் மாநிலம். ஜலந்தர் நகரில் குழாய் தயாரிப்பு ஆலை ஒன்று இயங்கி வருகிறது. இந்தத் தொழிற்சாலையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அதிகாலை 3 மணியளவில் திடீரென தீ விபத்து ஏற்பட்டது. இதில். தொழிற்சாலைக்குள் உறங்கிக் கொண்டிருந்த 12 பேர் உயிரிழந்தனர். இருவர் பலத்த காயமடைந்தனர். அவர்கள் அருகில் உள்ள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (இ-5)

# ஜம்மூ காஷ்மீர் எல்லையினில் தீவிரவாதிகள் சுட்டுக்கொலை

ஜம்மு காஷ்மீர் மாநிலம் சோபியான் மாவட்டத்தில் இரண்டு தீவிரவாதிகளை பாதுகாப்பு படையினர் சுட்டுக் கொன்றுள்ளனர்.


சோபியான் மாவட்டம் ஹெப் செர்மால் பகுதியில் தீவிரவாதிகள் நடமாட்டம் இருப்பதாக பாதுகாப்பு படைக்கு நேற்று முன்தினம் இரகசிய தகவல்கள் கிடைத்தது. இதனையடுத்து நேற்று முன்தினம் பாதுகாப்பு படையினர் தீவிரவாதிகள் தேடும் வேட்டையில் இறங்கினர். பாதுகாப்பு படையினர் மற்றும் மாநில பொலிஸார் தீவிரவாதிகளை தேடும் வேட்டையில் ஈடுபட்டபோது. மறைந்திருந்த தீவிரவாதிகள் அவர்களை நோக்கி துப்பாக்கியால் சுட்டனர். இதனையடுத்து பாதுகாப்பு படையினரும் பதிலடி கொடுத்தனர். இந்த துப்பாக்கி சண்டையில் இரண்டு தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். நேற்று இரவு முதல் காலைவரையில் இரு தரப்பு இடையே துப்பாக்கி சண்டை நடைபெற்றது.

இதுதொடர்பாக பொலிஸ் அதிகாரி அல்தாப் கான் கூறுகையில் ,

"இரண்டு தீவிரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். தொடர்ந்து தீவிரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கை நடைபெற்று வருகிறது என்று கூறினார். தொடர்ந்து ஒரு தீவிரவாதி தலைமறைவாக உள்ளார் என்றும் பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து அங்கு தீவிரவாதிக்கும். பாதுகாப்பு படையினருக்கும் இடையே துப்பாக்கி சண்டை நடைபெற்று வருகிறது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் புதிய அரசாங்கம்



வடக்கு மாகாண சபை ஏகமனதாக நிறைவேற்றிய தீர்மானத்தில் 'இனப் படுகொலை' என்கின்ற பதத்தை பயன்படுத்தியது புதிய அரசாங்கத்திலுள்ள பலருக்கும் கோபத்தை ஏற்படுத்தியுள்ளது.

***இவ்வாறு 'நியூயோர்க் டைம்ஸ்' நாளிதழில், GARDINER HARRIS எழுதியுள்ள செய்திக் கட்டுரை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.***

தேர்தலின் மூலம் இலங்கை ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேன தேர்ந்தெடுக்கப்பட்டு ஒரு மாதம் கடந்த நிலையில் இலங்கைப் பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லமான அலரி மாளிகையில் தனது பணிகளை பிரதமர் ரணில் விக்ரமசிங்க ஆரம்பித்துள்ளார். இவர் தற்போது பல்வேறு பணிகளில் மும்முரமாக ஈடுபட்டுள்ளார்.

அமெரிக்கா, இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகளுடன் இராஜதந்திர உறவுகளை மீளக்கட்டியெழுப்புவதற்கு உதவும் நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகவும், நூற்றுக்கணக்கான அரசியற் கைதிகளை விடுவிப்பதற்கும், உள்நாட்டு யுத்தத்தின் போது ஆக்கிரமிக்கப்பட்ட சிறுபான்மைத் தமிழ் மக்களின் பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை உரிமையாளர்களிடம் கையளிப்பது தொடர்பான விவகாரங்களைத் தற்போது தான் கையில் எடுத்துள்ளதாக கடந்த சனிக்கிழமையன்று பிரதமர் ரணில் விக்ரமசிங்க அலரி மாளிகையில் வைத்து வழங்கிய நேர்காணலில் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை ஜனாதிபதி திரு.சிறிசேனவால் பிரதமராக நியமிக்கப்பட்ட திரு.ரணில் விக்ரமசிங்க, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அலரி மாளிகையை விட்டு வெளியேறிய பின்னர் தனது பணிகளை அங்கு ஆரம்பித்தார்.

இலங்கைக்கு பாப்பரசர் வருகை தந்திருந்த போது தனது பதவியை ஏற்றுக்கொண்டதாகவும் முதல் இரு வாரங்களும் வரவு செலவுத் திட்டம் ஒன்றைத் தயாரிப்பதற்கான பணிகளில் ஈடுபட்டதாக ரணில் விக்ரமசிங்க குறிப்பிட்டார். 'அதன் பின்னர் தற்போது மூன்று வாரங்கள் மட்டுமே கடந்துள்ளன. தற்போது தான் நாங்கள் பிற பணிகள் தொடர்பாக ஆராய்ந்து வருகிறோம்' என தனது நேர்காணலில் பிரதமர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன் காரணமாக இலங்கையின் சிறைகளில் தற்போது எத்தனை அரசியற் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்பது தொடர்பாகவும் இலங்கை இராணுவத்தால் கையகப்படுத்தப்பட்டுள்ள மக்களுக்குச் சொந்தமான நிலங்களில் எத்தனை ஏக்கர் நிலங்களை இலகுவாக மீண்டும் மக்களிடம் கையளிக்க முடியும் என்பது தொடர்பாகவும் தன்னிடம் தெளிவான புள்ளி விபரங்கள் தற்போது இல்லை என பிரதமர் மேலும் தெரிவித்தார்.

கைதிகள் தொடர்பான பரீட்சார்த்தப் பட்டியல் ஒன்று ஏற்கனவே தயாரிக்கப்பட்டுள்ளதாக பிரதமர் ரணில் விக்ரமசிங்க குறிப்பிட்டார்.

'அரசியற் கைதிகள் தொடர்பான இறுதிப் பட்டியலைத் தயாரிப்பதற்கு முன்னர் இதனை இரண்டு தடவைகள் மீளாய்வு செய்து உறுதிப்படுத்த விரும்புகிறேன். இதனை மார்ச் மாதத்திற்குள் இது இறுதி வடிவமாக்கப்படும்.

இரகசிய முகாம்களில் கைதிகள் வைக்கப்பட்டிருந்தால் அந்த முகாங்களை மூடி விட்டு அங்குள்ளவர்களை நீங்கள் கூட்டிச் செல்ல முடியும்' என இவர் குறிப்பிட்டார்.

2009 இல் உள்நாட்டு யுத்தம் முடிவடைந்த போது பல பத்தாயிரக்கணக்கான மக்கள் காணாமற் போயினர். இவர்களுள் போர்க்களங்களில் கொல்லப்பட்டவர்களும், தடுத்து வைக்கப்பட்டபோது சுட்டுப் படுகொலை செய்யப்பட்டவர்களும் அடங்குவர்.

ஆனால் ஆயிரக்கணக்கானவர்கள் தற்போதும் இரகசிய முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக நீண்டகாலமாக வதந்தி ஒன்று நிலவுவதாகவும், ஆனால் இதில் எவ்வித உண்மையில்லை எனவும் திரு.விக்ரமசிங்க சுட்டிக்காட்டினார். 'ஆனால் இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கையும் சில நூறு வரையிலாகும். ஆயிரக்கணக்கானவர்கள் தடுத்து வைக்கப்படவில்லை.

காணாமற்போன மக்களின் பெயர்கள் வேறெங்கும் காணப்படவில்லை. அதாவது இவர்கள் தற்போது நாட்டில் உயிருடன் வாழ்பவர்கள் மத்தியிலோ அல்லது நாட்டை விட்டு வெளியேறியவர்களின் பெயர்ப் பட்டியலிலோ காணாமற் போனவர்களின் பெயர்கள் காணப்படவில்லை' எனவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

சிறைக்கைதிகளை விடுவித்தல் மற்றும் கையகப்படுத்தப்பட்ட நிலங்களை விடுவித்தல் போன்றன தாமதமாகுவது குறித்து அண்மைய வாரங்களில் தமிழ் செயற்பாட்டாளர்கள் சிலர் அதிருப்தியடைந்து வருகின்றனர். உள்நாட்டுப் போரின் போது தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட இனப்படுகொலை குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக அனைத்துலக விசாரணை ஒன்றை மேற்கொள்ளுமாறு கோரி இம்மாதம் வடக்கு மாகாண சபை ஏகமனதாக தீர்மானம் ஒனறை நிறைவேற்றியது. 'இனப்படுகொலை' என்கின்ற பதத்தை இத்தீர்மானத்தில் பயன்படுத்தியதானது புதிய அரசாங்கத்திலுள்ள பலருக்கு கோபத்தை ஏற்படுத்தியது.

போரின் போதான மனித உரிமை மீறல்கள் தொடர்பான அறிக்கையை வெளியிடுவதற்கு காலதாமதம் ஏற்படும் என இலங்கை அரசாங்கம் தெரிவித்த் போது அதனை ஐ.நா மனித உரிமைகள் பேரவை ஏற்றுக்கொள்வதற்கு முன்னரேயே வடக்கு மாகாண சபை தனது தீர்மானத்தை நிறைவேற்றியிருந்தது.

இக்கோடை காலத்தின் போது நடத்தத் திட்டமிடப்பட்டுள்ள நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னர் பெரும்பான்மை சிங்களவர்களின் கோபத்தைச் சம்பாதிப்பதற்கு ரணில் விக்ரமசிங்க விரும்பாததன் காரணத்தாலேயே இவர் அரசியற் கைதிகள் தொடர்பான விபரத்தை வெளியிட மறுக்கிறாரோ எனத் தான் அச்சப்படுவதாக வடக்கு மாகாண சபை முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தனது கொழும்பு இல்லத்தில் வைத்து வழங்கிய நேர்காணலில் குறிப்பிட்டுள்ளார்.

'கடந்த காலத்தில் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் எவையும் நிறைவேற்றப்படவில்லை என்பது வரலாறாக உள்ளது. தேர்தல் நெருங்கி வருவதன் காரணத்தால் காலத்திற்கேற்ப நடந்துகொள்ளப் பிரதமர் விரும்புகிறார்' என திரு.விக்னேஸ்வரன் தெரிவித்தார். அரசியற் கைதிகளின் விபரங்கள் உறுதிப்படுத்தப்படாவிட்டாலும் கூட, அரசியற் காரணங்களுக்காகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகள் பலர் உடனடியாக விடுவிக்கப்பட முடியும் என திரு.விக்னேஸ்வரன் குறிப்பிட்டார். 'இத்தாமதத்திற்கான காரணத்தை விளங கிக் கொள்ள முடியும். இவர்கள் யார் என்பதை எவரும் அறிய முற்படவில்லை. இவர்கள் தொடர்பாக அறியவேண்டிய கேள்விகள் தொடர்பாக அதிகாரிகள் தம்மிடையே அச் சுறுத்தப்படலாம்' என வெளியுறவு அமைச்சர் மங்கள சமரவீர பிறிதொரு நேர்காணலில் தெரிவித்தார்.

திரு.ராஜபக்ச எதேச்சதிகார ஆட்சியை மேற்கொண்டிருந்தார். உயர் வர்த்தகத் தலைவர்கள் உட்பட கொழும்பின் முக்கிய தரப்பினர் மத்தியில் ராஜபக்ச ஆட்சி கவிழ்க்கப்பட்டமை மிகவும் மன நிம்மதியைக் கொடுத்துள்ளது. ராஜபக்ச அரசாங்கத்தால் எதிர்ப்புக்களைச் சந்தித்த மேற்குலக நாடுகளின் பிரதிநிதிகள் மற்றும் இராஜதந்திரிகள் போன்றோர் இலங்கையில் இடம்பெற்ற ஆட்சிமாற்றத்தால் மிகவும் மகிழ்ச்சியுற்றனர்.

இதற்கு முன்னர் அதாவது 1990 களிலும் 2000 ஆம் ஆண்டின் முற்பகுதியிலும் இரண்டு தடவைகள் இலங்கைப் பிரதமராகப் பணியாற்றிய திரு.விக்ரமசிங்க மேற்குலக நாடுகளுடன் நல்லுறவைக் கட்டியெழுப்புவதை முன்னுரிமைப்படுத்தியிருந்தார். 'நான் இறுதியாக பிரதமராகப் பதவி வகித்த போது, அமெரிக்கா, இந்தியா மற்றும் சீனாவுடன் நல்லுறவைக் கட்டியெழுப்பியிருந்தோம். இதனை ராஜபக்ச அரசாங்கம் அழித்துள்ளது: இவர்கள் மேற்குலகை எதிர்த்தனர். இந்தியாவுடனான உறவையும் விரிசலாக்கினர்.. சீனாதான் தமது மீட்பர் என ராஜபக்ச அரசாங்கம் கருதியது' என பிரதமர் ரணில் விக்ரமசிங்க குறிப்பிட்டார்.

சீன ஒப்பந்தகாரரர்கள் ராஜபக்ச ஆட்சியின் போது வீதிகளை நிர்மாணித்ததுடன், துறைமுகங்களை விரிவாக்கினர். இதற்காக மிகப் பெரிய தொகையில் கடன்கள் பெறப்பட்டன. இலங்கையின் தலைநகரான கொழும்பில் இரண்டு தடவைகள் சீன நீர்மூழ்கிக்கப்பல்கள் தரித்து நிற்பதற்கான அனுமதியை ராஜபக்ச அரசாங்கம் வழங்கிய போது இது இந்திய பாதுகாப்பு அதிகாரிகளுக்கு ஆத்திரத்தை உண்டு பண்ணியது.

இத்திட்டங்களை மீளாய்வு செய்வதாக புதிய அரசாங்கம் வாக்குறுதி வழங்கியுள்ளது. சீனாவின் திட்டங்கள் சில ஊழல் நிறைந்தது என இலங்கையின் நெடுஞ்சாலைகள் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு பிரதி அமைச்சர் எரன் விக்ரமட்ன குறிப்பிட்டுள்ளார்.

ஒரு மில்லியன் டொலருக்கும் குறைவான வீதிகள் ஒவ்வொரு அரை மைல் தூரத்திற்குமான அதன் உண்மையான செலவின் ஆறு மடங்கு செலவாகக் காண்பிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார். ளஅரசாங்க நிதியை முன்னாள் அரசா ங்க உறுப்பினர்கள் தமது சொந்தத் தேவைக்காகப் பயன்படுத்தியதாகவும் திரு.சமரவீர தனது நேர்காணலில் குறிப்பிட்டுள்ளார்.

'நாங்கள் ஏற்கனவே 2 மில்லியன் டொலர்கள் ஊழல் செய்யப்பட்டுள்ளதை உறுதிப்படுத்தியுள்ளோம். இது தொடர்பாக நாங்கள் தற்போது உலகவங்கி மற்றும் சில நாடுகளின் நிதிப் புலனாய்வு அமைப்புக்கள் போன்றவற்றுடன் கலந்துரையாடி வருகிறோம்' என திரு.சமரவீர தெரிவித்தார்.

7000 இருக்கைகளைக் கொண்ட கேட்போர் கூடம், மூன்று உயர் மட்ட அமைச்சரவைக் கூட்டங்களை நடத்தக்கூடிய அறைகள், சிறிய நீச்சல் தடாகம் உட்பட அலரி மாளிகையை விரிவுபடுத்துவதற்காக முன்னைய அரசாங்கம் பல மில்லியன் டொலர்களைச் செலவிட்டுள்ளது. திரு.ராஜபக்சவின் ஆட்சியில் இடம் பெற்ற பல்வேறு மோசடிகளை வெளியிட முடியும் என்கின்ற நம்பிக்கையுடன் பிரதமர் தற்போது ஊடகவியலாளர்களை அலரி மாளிகைக்குள் அனுமதிக்கிறார்.

கடந்த வாரம் மிகப் பெரிய ஆர்ப்பாட்டத்தில் ராஜபக்சவின் ஆதரவாளர்கள் ஈடுபட்டிருந்தனர். வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடப் போகிறாரா அல்லது இல்லையா என்பது தொடர்பாக இதுவரை திரு.ராஜபக்ச தெளிவானதொரு அறிவித்தலை விடுக்கவில்லை.


திரு.ராஜபக்சவின் எதிர்கால அரசியற் பிரவேசம் தொடர்பாக திரு.விக்ரமசிங்க நிச்சயம் கொள்ளவில்லை. 'திரு.ராஜபக்ச தேர்தலில் போட்டியிடுவார் என நான் நினைக்கவில்லை. எனக்கு அவரை நன்றாகத் தெரியும்' என திரு.விக்ரமசிங்க தனது நேர்காணலில் குறிப்பிட்டுள்ளார்..

-நித்யபாரதி-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரின் உணர்வுகளும் மதிக்கப்பட வேண்டும்

## அமைச்சர் சம்பிக்க தெரிவிப்பு



(கொழும்பு)

**தேசிய பிரச்சினைகளை தாண்டி ஒன்றுபட்ட இலங்கையினை கட்டியெழுப்பும் ஒரே நோக்கத்திற்காகவே தேசிய அரசாங்கத்தினை அமைத்து ஆட்சி நடத்துகின்றோம். சிங்கள பௌத்த உரிமைகளைப் போல் தமிழரின் உரிமைகளுக்கும் உணர்வுகளுக்கும் மதிப்பளிக்கப்பட வேண்டும் என ஜாதிக ஹெல உறுமய கட்சியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.**

கிடைத்திருக்கும் வாய்ப்பினை மீண்டும் சர்வாதிகாரிகளின் கைகளில் கொடுத்து நல்லாட்சியின் பாதையினை மாற்றியமைக்க நாம் தயாராகவுள்ளோம் எனவும் அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,


கடந்த காலங்களில் நாடு சர்வாதிகாரத்தின் பக்கம் சென்று கொண்டிருந்தது. ஒரு குடும்பத்திற்கு எதிரான மாற்று கருத்துக்களுக்கு இடம் இருக்கவில்லை. எனினும் யுத்தத்தினை வெற்றி கொள்ளவும் நாட்டை சரியான பாதையில் கொண்டு செல்ல வேண்டிய தேவை இருந்தது. ஆனால், இன்று நாட்டில் குழப்பகரமானதொரு சூழ்நிலை இல்லை. பயங்கரவாதத்திற்கு இடம்இல்லை. பிரிவினையினை எதிர்பார்த்து செயற்பட்டவர்கள் பலர் இன்று நல்லாட்சியினை விரும்புகின்றனர்.

பிரிவினைவாதிகளே ஒன்றுபட்ட நாட்டினை விரும்பும் நேரத்தில் பௌத்த சிங்கள உரிமைகளை மதிக்கும் நாம் பிரிவினைவாதத்தினை தோற்றுவிக்கும் வகையில் அல்லது இறுக்கமான போக்கினை கையாள்வது அர்த்தமற்ற செயற்பாடாகும். எனவே தேசிய அரசாங்கத்தினை பலப்படுத்தியமையும் தேசிய அரசாங்கத்தினை தொடர்ந்து கொண்டு செல்ல முயற்சிப்பதும் தேசிய நல்லிணக்கத்தினை ஏற்படுத்துவதற்காகவே. எனவே, மூவின மக்களையும் ஒன்றிணைத்து ஆட்சி நடத்துவதையே பெரும்பான்மையின மக்கள் விரும்புகின்றனர்.

மேலும், இந்த நாட்டில் சிங்கள பௌத்த உரிமைகளுக்கு எவ்வித பங்கமும் ஏற்படக்கூடாது. சிங்கள கொள்கைகள் அழிக்கப்படுவதை ஒருபோதும் நாம் அனுமதிக்கப் போவதில்லை. ஆனால், ஏனைய மதங்களினதும் இனத்தவரினதும் உரிமைகள் அழிக்கப்படக்கூடாது. தமிழர்களும் முஸ்லிம்களும் சுதந்திரமாக வாழ வேண்டும்.

வடக்கிலும் கிழக்கிலும் தெற்கிலும் மக்கள் சுதந்திரமாக வாழும் ஆட்சி அமைந்துள்ளது. இவ்வாறானதொரு நிலையில் மீண்டும் இனவாதிகளின் கைகளில் ஆட்சியினை கொடுத்து விட்டு வேடிக்கை பார்க்கமாட்டோம். அதற்கான சந்தர்ப்பம் இனி ஒருபோதும் வராது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# வழக்கை நிறைவுக்கு கொண்டுவர முன்னாள் பிரதம நீதியரசர் எதிர்ப்பு



(கொழும்பு)

சொத்து விபரங்களை வெளியிடவில்லை என்ற குற்றச்சாட்டில் முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டார நாயக்கவுக்கு எதிராக இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை, வாபஸ் பெற்றுக்கொள்வதற்கு முறைப்பாட்டாளர்கள் விருப்பம் தெரிவித்த போதிலும் வழக்கின் பிரதிவாதி அதற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளார்.

முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டார நாயக்கவின் சார்பில் ஆஜரான சிரேஷ்ட சட்டத்தரணி நளின் லதுஹெட்டி, கொழும்பு பிரதான நீதவான் கிஹான் பிலபிட்டி முன்னிலையிலேயே, இந்த வழக்கை நிறைவுக்கு கொண்டு வருவதனை தான் எதிர்ப்பதாக தெரிவித்தார். இந்த வழக்கு ஏப்ரல் மாதம் 28 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. (இ-5)

# இந்து சமய நூல்கள் கொள்வனவு

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் கடந்த பல ஆண்டுகளாக இலங்கைத் தமிழ் எழுத்தாளர்களின் சுய ஆக்கங்களான நூல்களைக் கொள்வனவு செய்யும் செயற்றிட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தி வருகின்றது. இச்செயற்பாட்டின் பிரதான நோக்கம் இலங்கைத் தமிழ் எழுத்தாளர்களின் படைப்பிலக்கிய ஆர்வத்தை ஊக்குவிப்பதாகும்.

இத் திட்டத்தின் கீழ் கடந்த ஆண்டு முதல் இந்து சமய நூல்களை எழுதுகின்ற எழுத்தாளர்களின் ஆர்வத்தை மேம்படுத்தும் வகையில் இந்து சமயம், இந்து கலாசார பண்பாடு, இந்து சமய சடங்கு முறைகள், ஆலய வரலாற்று நூல்கள் போன்றவற்றை சுயமாக எழுதி வெளியிடுகின்ற எழுத்தாளர்களின் நூல்களைக் கொள்வனவு செய்வதற்கு திணைக்களத்தால் முன்னுரிமை வழங்கப்படுகின்றது.

அதற்கமைய கடந்த இரண்டு ஆண்டுகளில் (2013-2014) இந்து சமயம் சார்ந்த நூல்களை எழுதி வெளியிட்டுள்ள எழுத்தாளர்கள் தமது நூலின் ஒரு பிரதியினையும் கோரிக்கை கடிதத்தையும் சமர்ப்பிக்குமாறு திணைக்களம் வேண்டிக் கொள்கின்றது திணைக்கள மதிப்பீட்டுக்குழுவின் தீர்மானத்திற்கு அமைய நூல் கொள்வனவு தொடர்பான விபரம் எழுத்தாளர்களுக்கு அறிவிக்கப்படும்.

இத்திட்டத்தின் கீழ் ஒரு வருடத்தில் ஒரு எழுத்தாளர் அச்சிட்டு வெளியிட்ட இருநூல்கள் மட்டுமே கொள்வனவு செய்யப்படும் என்பது இத்திட்டத்தின் பிரதான நிபந்தனையாகும். எழுத்தாளர்கள் நூலின் ஒரு பிரதியையும் கடிதத்தையும் கீழ் குறித்த முகவரிக்கு அனுப்பி வைக்கலாம். பணிப்பாளர், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் , 248, 1/1, காலி வீதி, கொழும்பு- 04 நூலை உள்ளடக்கும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் இந்து சமய நூல்கள் கொள்வனவு - 2015 எனக் குறிப்பிடல் வேண்டும் என திணைக்களம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

## இன்று ஒரு தகவல்

### ஆஞ்சநேயர்

இராமாயணத்தில் வருகின்ற ஆஞ்சநேயர் இராமனுக்கு அணுக்கத் தொண்டர். இராமபிரானைப் பார்த்த பின்னர் அவரே எல்லாமென்று வாழ்ந்தவர். அவர் ஸ்ரீராம பக்தர் என்பது எல்லோருக்கும் தெரிந்த செய்தி. ஆனால் அவர் இராமபிரானுக்குத் தம்பி உறவு ஆகிறார் என்பது ஓர் அபூர்வமான செய்தியாக இருக்கின்றது. ஆஞ்சநேயர் புராணத்தில் வருகின்ற ஒரு வரலாறு இதைச் சொல்கிறது. தனக்கு பிள்ளை இல்லை என்று தசரத மகாராஜா கவலையோடு இருக்கும்போது புத்திர காமேஷ்டி யாகம் செய்தால் பலன் கிடைக்குமென்று பெரியவர்கள் சொல்கிறார்கள். அதற்கு ஏற்பாடு நடந்து கொண்டு இருக்கிறது.

அதேநேரத்தில் இன்னொரு இடத்தில் அஞ்சனை என்ற ஒரு பெண் தனக்கு பிள்ளை இல்லையென்று கவலையோடு இருக்கின்றாள்.பிள்ளை வரம் வேண்டி தெய்வத்திடம் அவர் பிரார்த்தனை செய்கிறார். தசரதர் நடத்திய புத்திரகாமேஷ் யாகத்திலிருந்து அக்கினி பகவான் மூலமாக பாற் பாயசத்தோடு ஒரு கிண்ணம் வந்ததாம்.

தசரத சக்கரவர்த்தியினுடைய மூன்று மனைவியரும் அதைச் சாப்பிட்டார்களாம். அந்தக் கிண்ணத்தில் பாயாசம் இன்னும் கொஞ்சம் மீதமிருந்தது. கருடன் அந்தக் கிண்ணத்தை தூக்கிக் கொண்டு பறக்க ஆரம்பித்தது. வாயு பகவான் அதை வழிநடத்திக் கொண்டு போனார். வேறு ஒரு இடத்தில் அஞ்சனை என்ற ஒரு பெண் தவம் செய்து கொண்டு இருந்தாள். அவள் கையில் கருடன் இந்தக் கிண்ணத்தைக் கொண்டு போய்ச் சேர்த்தது.

அவளும் தெய்வ அனுக்கிரகமென்று நினைத்து அந்தப் பாயாசத்தை குடித்தாள். தசரத மகாராஜாவினுடைய மூன்று மனைவிமாரும் கர்ப்பம் தரித்து இராமர் உட்பட நான்கு பிள்ளைகளைப் பெற்றெடுத்தபோது அஞ்சனையும் ஒரு பிள்ளையைப் பெற்றெடுத்தாள். அதற்கு அனுமான் என்று பெயர் வைத்தாள்.

ஒரே பாயாசத்தைப் சாப்பிட்டு இந்தப் பிள்ளைகளெல்லாம் பிறந்ததால் ஆஞ்சநேயர் இராமபிரானுக்கு தம்பி உறவு ஆகிறார் என்று அந்த வரலாறு சொல்கிறது. இராமநாமத்தினுடைய மகிமையை நல்லா உணர்ந்தவர் ஆஞ்சநேயர். அதைப் பற்றி ஒரு சுவையான கதை இருக்கின்றது.

இலங்கைக்கு போகிறதற்கு கடலில் பாலம் கட்ட வேண்டி இருந்தது. அதற்காகக் குரங்கெல்லாம் பெரிய பெரிய கற்களைத் தூக்கி கடலில் போட்டது. இராமபிரான் இவற்றையெல்லாம் கண்காணித்தபடியே அங்கேயும் இங்கேயும் நடந்துகொண்டிருந்தார். ஒரு கல்லுக்கு மேல் ஒரு கல் உட்கார்ந்து அந்தப் பாலம் உயர்ந்து கொண்டு இருந்தது.

குரங்குகளெல்லாம் கல்லைத் தூக்கிப் போடுகிறதே நாமும் ஒரு கல்லைத் தூக்கிப் போடவேண்டுமென்று ஒரு கல்லைத் தூக்கிப் போட்டார் இராமர். அந்தக் கல்லை அலை அடித்துக் கொண்டு போய்விட்டது. திகைத்துப் போய் விட்டார் இராம பிரான்.

ஏனைய குரங்குகளெல்லாம் போடுகின்ற கல்லுகள் ஒன்றுக்கு மேல் ஒன்று சரியாக உட்காருகின்றது. நான் போட்டதை மட்டுமே அலை அடித்துக்கொண்டு போகின்றதே என்று ஆஞ்சநேயரிடம் அவர் கேட்டாராம்.

இராமா! உனக்கு தெரியாததில்லை. ஆனால் என் வாக்கு மூலமாக அதை நீ கேட்க வேண்டும் என்று ஆசைப்படுகின்றாய். அந்தக் குரங்குகளெல்லாம் எப்படிச் செயற்படுகின்றது என்று பார். கல்லைத் தூக்கும் போது ராமா ராமா என்று சொல்கின்றது. தூக்கிக்கொண்டு வரும்போதும் ராமநாமத்தை சொல்கின்றது. போடும் போதும் அவைகள் ராமா ராமா என்று சொல்லித்தான் அதைப் போடுக்கின்றது.

"ஆனால் இராமா நீயே அந்த இராமனாய் இருந்தாலும், நீயும் இராம நாமத்தைச் சொல்லித்தான் கல்லைப் போடவேண்டும். நீ அப்படிச் செய்யாததால் கல்லை அலை அடித்துக் கொண்டு போய்விட்டது" என்றாராம். அந்த அளவுக்கு ராமநாமத்தின் மகிமையை புரிந்து கொண்டவர் ஆஞ்சநேயர்.

*கலைமாமணி முனைவர் இளசை சுந்தரம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிக்கை தாமதம்: என்ன பயன்?

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புக்கும் பாதுகாப்புப் படையினருக்கும் இடையிலான போரின் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக விசாரணை செய்வதற்காக ஐ.நா. மனித உரிமை பேரவையினால் நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கையை தாமதப்படுத்துமாறு இலங்கை அரசாங்கம் அப்பேரவையிடம் விடுத்த கோரிக்கையை பேரவை ஏற்றுக் கொண்டுள்ளது.

இது இலங்கை அரசாங்கம் பெற்ற மாபெரும் வெற்றியாகும் என வெளியுறவுத் துறை பிரதி அமைச்சர் அஜித் பி. பெரேரா கூறியிருக்கிறார். ஆனால், அது எவ்வாறு நாட்டுக்கு வெற்றியாகப் போகிறது என்பது தெளிவாகவில்லை.

மேற்படி குழு, அந்த விசாரணையை ஏற்கனவே நடத்தியிருந்தால் அதேவேளை அந்த விசாரணையின் அறிக்கை, அடுத்த மாதம் நடைபெறவிருக்கும் மனித உரிமை பேரவையின் கூட்டத்தின் போது சமர்ப்பிக்கப்படும் நிலையில் இருந்தால் அதனை இரத்துச் செய்விக்க இலங்கை அரசாங்கத்தால் முடியாமல் போகும். செய்ய முடிந்தது அதனை பேரவையில் சமர்ப்பிப்பதை தாமதப்படுத்திக் கொள்வது மட்டுமே.

அதனைத்தான் இப்போது அரசாங்கம் செய்து கொண்டுள்ளது. அது ஒரு வெற்றியோ அல்லது தோல்வியோ அல்ல. ஏனெனில், அறிக்கை சமர்ப்பிக்கப்படும் நாள் ஒத்தி வைக்கப்பட்ட போதிலும் அறிக்கையின் உள்ளடக்கம் அதனால் மாறப் போவதில்லை. உள்ளடக்கம் என்னவென்று இன்னமும் இலங்கையில் எவருக்கும் தெரியாது. அவ்வாறிருக்க அறிக்கையின் தாமதம் வெற்றியாவது எவ்வாறு?

இது ஒரு வழக்கின் தீர்ப்பை தாமதப்படுத்திக் கொண்டதற்கு சமமாகும். தாமதமானாலும் தீர்ப்பு மாறப்போவதில்லை. ஒன்றில் பிரதிவாதி குற்றவாளியாவார். அல்லது நிரபராதியாக விடுதலை செய்யப்படுவார். எனவே, தீர்ப்பு தாமதமாவதில் எவ்வித பயனும் இல்லை. தாம் எதிர்பார்க்கும் தீர்ப்பை பெற்றுக் கொள்ள முடியுமானால் மட்டுமே அது வெற்றியாகும்.


இந்த அறிக்கை தாமதமாவது இலங்கைக்கு பாதகமாக அமையும் என ஐ.நா.வுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவர் கலாநிதி தயான் ஜயதிலக்க கூறியிருக்கிறார். அறிக்கை தாமதமானதால் அது அடுத்த முறை மனித உரிமை பேரவையில் சமர்ப்பிக்கப்படும் வரையிலான காலத்திலும் இலங்கைக்கு எதிரான சாட்சியங்கள் சேகரிக்கப்படும் என அவர் வாதிட்டு இருக்கிறார்.

இது சரியான வாதமல்ல. அடுத்த மாதம் மனித உரிமை பேரவையில் சமர்ப்பிக்கப்படும் நிலையில் அறிக்கை இருக்குமானால் அதனை சமர்ப்பிக்கும் நாள் ஒத்திப் போடப்பட்டதன் காரணமாக விசாரணைக் குழு மீண்டும் விசாரணைகளை தொடரும் என்று கூற முடியாது. விசாரணை முடிவுற்றிருக்காவிட்டால் அக்குழு பூரண அறிக்கை ஒன்றை அடுத்த மாதம் பேரவையில் சமர்ப்பிக்காது. தற்போது தம்மிடம் கிடைத்துள்ள தகவல்களினால் குழு திருப்தியடைந்தால் மட்டுமே அறிக்கை இப்போது தயார் நிலையில் இருக்கும்.

எவ்வாறாயினும் அறிக்கையை மனித உரிமை பேரவையில் சமர்ப்பிப்பதை தாமதப்படுத்திக் கொள்வதால் அரசாங்கம் என்ன எதிர்ப்பார்க்கிறது என்பது தெளிவில்லை. சிலவேளை அரசாங்கத்தின் 100 நாட்கள் முடிவடைந்து அடுத்த பொதுத் தேர்தல் நடைபெறும் வரை அதனை தாமதப்படுத்திக் கொள்வதே அரசாங்கத்தின் நோக்கமாக இருக்கலாம்.

ஏனெனில், தேர்தலுக்கு முன்னர் அவ்வறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு அதன் மூலம் முன்னாள் அரசாங்கத்தில் சில தலைவர்களும் இராணுவ அதிகாரிகளும் குற்றச்சாட்டப்பட்டு இருந்தால் அவர்கள் மீது மக்களுக்கு அனுதாபம் ஏற்படும். அவர்கள், தென் பகுதியில் மக்கள் மத்தியில் வீரர்களாக மாறிவிடுவார்கள். அவர்களுக்காக பரிந்து பேசும் அவசியம் அரசாங்கத்துக்கு ஏற்படும்.

இது பொதுத் தேர்தலின் போது அரசாங்கத்தை பாதிக்கலாம். எனவே தான் அரசாங்கம் இந்த அறிக்கையை தாமதப்படுத்துமாறு மனித உரிமை பேரவையிடம் கோரிக்கை விடுத்துள்ளது என ஊகிக்கலாம். அவ்வாறான ஊகம் தவிர அறிக்கையை தாமதப்படுத்திக் கொண்டதற்கான வேறு காரணத்தை அனுமானிக்க முடியாமல் இருக்கிறது. அதேவேளை இது "அந்த நேரத்துக்கு ஏதாவது செய்யும்" கடந்த அரசாங்கத்தின் கொள்கையே.



குறிப்பாக மனித உரிமை விடயத்திலும் அதிகார பரவலாக்கல் விடயத்திலும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம் "அந்த நேரத்துக்கு ஏதாவது செய்வதே" தமது கொள்கையாகக் கொண்டிருந்தது. வரலாற்றை சற்று புறட்டிப் பார்த்தால் அது தெளிவாகும்.

போர் முடிவடைந்து ஒரு வாரத்தில் ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூன் இலங்கைக்கு விஜயம் செய்தார். அவரது விஜயத்தின் போது போரின் இறுதிக் கட்டத்தின் போது இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்களைப் பற்றியும் அவற்றுக்கு பொறுப்புக் கூறலைப் பற்றியும் அவர், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் பேச்சுவார்த்தை நடத்தினார். பின்னர் இரு தலைவர்களும் விடுத்த கூட்டறிக்கையிலும் இந்தப் பொறுப்புக்கூறல் குறிப்பிட்ப்பட்டு இருந்தது. இலங்கை அரசாங்கம் பொறுப்புக் கூறலுக்கான பொறிமுறையொன்றை உருவாக்குவதாக அப்போது ராஜபக்ஷ கூறியிருந்தார்.

ஆனால், அது "அந்த நேரத்துக்கு ஏதாவது செய்யும்" அரசாங்கத்தின் கொள்கையே என்பது ஒரு வருடம் சென்றும் அரசாங்கம் ஜனாதிபதியின் வாக்குறுதியை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்காததன் மூலம் தெளிவாகியது. ஐ.நா. செயலாளர் நாயகத்துக்கு வழங்கும் வாக்குறுதியானது இந்நாட்டு மக்களுக்கு தேர்தல்களின் போது வாக்குறுதிகளை வழங்குவதைப் போல் வழங்கலாம் என ராஜபக்ஷ நினைத்தார் போலும். தாம் ஐ.நா. செயலாளர் நாயகத்துக்கு வழங்கிய வாக்குறுதியின் பாரதூரத்தன்மையை அவர் புரிந்து கொள்ளவில்லை.

ஒரு வருடம் ராஜபக்ஷ என்ன செய்வார் என்று பார்த்துக் கொண்டிருந்த ஐ.நா. செயலாளர் நாயகம் 2010 ஆம் ஆண்டு இலங்கை தொடர்பாக தமக்கு ஆலோசனை வழங்குவதற்காக இந்தோனேசியாவின் முன்னாள் சட்ட மா அதிபர் மர்சூகி தருஸ்மான் தலைமையில் குழுவொன்றை நியமித்தார். தருஸ்மான் குழு நியமிக்கப்படப் போவதை அறிந்த ராஜபக்ஷ வழமைப் போல் "அந்த நேரத்துக்கு ஏதாவது செய்ய" வேண்டும் என நினைத்து கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை நியமித்தார்.

ஆனால், பான் கீ மூன் தமது ஆலோசனைக் குழுவை நியமிப்பதை கைவிடவில்லை. அதேவேளை ராஜபக்ஷ நியமித்த நல்லிணக்க ஆணைக்குழுவும் அரசாங்கத்தின் சுபாவத்தின் படி நிறைவேற்ற முடியாத பல சிபாரிசுகளைக் கொண்ட அறிக்கையொன்றை தயாரித்து முன்வைத்தது.

இலங்கையில் மனித உரிமைகள் தொடர்பாக 2012 ஆம் ஆண்டு மனித உரிமை பேரவையில் அமெரிக்கா ஒரு பிரேரணையை சமர்ப்பித்தது. அதனை தமக்கு எதிரான பிரேரணையாக இலங்கை அரசாங்கம் கருதினாலும் இலங்கை அரசாங்கத்தின் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகளை நிறைவேற்ற வேண்டும் என்றே அந்தப் பிரேரணையின் மூலம் கூறப்பட்டது.

ஆனால், ராஜபக்ஷ அரசாங்கம் அதனை பொருட்படுத்தவில்லை. அதேவேளை போரின் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்ற சம்பவங்களைப் பற்றியே மேற்கத்திய தலைவர்கள் அக்கறை செலுத்தினர். அக்காலகட்டம் எதுவென அவர்கள் நிர்ணயித்து இருக்கவில்லை. ஆனால் ராஜபக்ஷ 2002 ஆம் ஆண்டிலிருந்தே இடம்பெற்ற சம்பவங்களைப் பற்றி விசாரணை செய்யும் வகையில் தான் நல்லிணக்க ஆணைக்குழுவை நியமித்தார். அதுவும் சிந்தித்து செயலாற்றும் கொள்கையல்ல. "அந்த நேரத்துக்கு ஏதாவது செய்யும்" கொள்கையே.

அரசாங்கத்தின் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகளை நிறைவேற்ற வேண்டும் என்று அமெரிக்கப் பிரேரணை கூறிய போதிலும் அரசாங்கம் அதைப் பற்றி அக்கறை செலுத்தவில்லை. எனவே, அமெரிக்கா 2013 ஆம் ஆண்டு மற்றுமொரு பிரேரணையை மனித உரிமை பேரவையில் சமர்ப்பித்தது. அதன்மூலம் இலங்கையில் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக சர்வதேச விசாரணை நடத்த வேண்டி வரும் என எச்சரிக்கப்பட்டது.

அப்போதும் "அந்த நேரத்துக்கு ஏதாவது செய்ய" வேண்டும் என நினைத்த ராஜபக்ஷ அரசாங்கம் 2006 ஆம் ஆண்டு மூதூரில் கொல்லப்பட்ட தொண்டர் நிறுவன ஊழியர்களின் மரணங்களைப் பற்றியும் திருகோணமலையில் கொல்லப்பட்ட ஐந்து மாணவர்களின் மரணங்களைப் பற்றியும் விசாரணைகளை மீண்டும் ஆரம்பித்தது. ஆனால், ஆரம்பித்த ஆர்வத்துடன் அதனை தொடரவில்லை.

அதேவேளை, அதுவரை காலமும் போரின் போது எவரும் காணாமற்போகவில்லை என கூறிக் கொண்டு இருந்த அரசாங்கம், காணாமற்போனோரைப் பற்றி விசாரணை செய்வதற்காக ஆணைக்குழுவொன்றையும் நியமித்தது. ஆனால், இவற்றால் மேற்கத்தேய நாடுகளை திருப்திப்படுத்த முடியவில்லை. எனவே, முன்னாள் ஐ.நா. மனித உரிமை உயர்ஸ்தானிகர் நவநீதம்பிள்ளை மேற்படி சர்வதேச விசாரணைக்கான குழுவையும் நியமித்து அதற்கு ஆலோசனை வழங்குவதற்காக உலகப் புகழ் பெற்ற மூன்று நபர்களையும் நியமித்தார்.

பின்லாந்தின் முன்னாள் ஜனாதிபதி மார்ட்டி ஆட்டிசாரி, நியூஸிலாந்தின் முன்னாள் மகா தேசாதிபதி சில்வியா கார்ட்ரைட் மற்றும் பாகிஸ்தானின் மனித உரிமை ஆணைக்குழுவின் முன்னாள் தலைவி அஸ்மா ஜஹாங்கீர் அம் மூவராவர். அப்போது மஹிந்த ராஜபக்ஷ தாமும் போரின் போது இடம்பெற்றதாக கூறப்படும் மனித உரிமைகளைப் பற்றி விசாரணை செய்வதற்கு காணாமற்போனோர் தொடர்பான ஆணைக்குழுவுக்கு அதிகாரம் வழங்கினார். அக்குழுவுக்கு ஆலோசனை வழங்குவதற்காக நான்கு சர்வதேச நிபுணர்களையும் நியமித்தார்.

பிரிட்டனைச் சேர்ந்த சேர் டெஸ்மன்ட் டி சில்வா (கியூ சி), சேர் ஜெப்ரி நைஸ் (கியூ சி), ரொட்னி டிக்சன் (கியூ சி) மற்றும் அமெரிக்காவைச் சேர்ந்த டேவிட் எம் கிரேன் அந் நால்வராவர். அவர்களுக்கும் அவர்களோடு கடமையாற்றும் மேலும் சிலருக்கும் அரசாங்கம் இதுவரை 135 மில்லியன் ரூபாய் செலவிட்டுள்ளது. ஆனால், அவர்கள் ஆணைக்குழுவின் தலைவரை ஒருமுறை மட்டுமே சந்தித்துள்ளனர். அதேவேளை ஆணைக்குழு மனித உரிமை மீறல்களைப் பற்றி விசாரணை செய்வதாகவும் தெரியவும் இல்லை.

போரின்போது இடம்பெற்றதாக கூறப்படும் மனித உரிமை மீறல்களைப் பற்றி உள்ளக விசாரணை பொறிமுறையொன்றை உருவாக்குவதாக வாக்குறுதியளித்தே அரசாங்கம் ஐ.நா. அறிக்கையை தாமதப்படுத்தக் கோரியிருக்கிறது. ஆனால், அந்த உள்ளக பொறிமுறையானது காணாமற்போனோர் தொடர்பான ஆணைக்குழு மூலமாக ராஜபக்ஷ அரசாங்கம் ஆரம்பித்த பொறிமுறையே தானா, அல்லது புதிய ஒன்றா என்பது தெளிவில்லை. அரசாங்கம் அதற்காக கால அவகாசமும் கேட்டுள்ளது. ஆனால், செப்டெம்பர் மாதம் ஐ.நா. அறிக்கை நிச்சயமாக மனித உரிமை பேரவையில் சமர்ப்பிக்கப்படும் என கூறப்படுகிறது.

அதாவது, உள்ளக விசாரணை பொறிமுறை அமைக்கப்பட்டாலும் ஐ.நா.வினால் நடத்தப்பட்ட விசாரணையின் அறிக்கை, இரத்துச் செய்யப்படப் போவதில்லை. எனவே, அதன் அறிக்கை தாமதப்படுவதனால் நாட்டுக்கு எவ்வித நன்மையோ அல்லது தீமையோ புதிதாக ஏற்படப் போவதில்லை.

உள்ளக விசாரணை பொறிமுறையொன்றை ஆரம்பிப்பதாக கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது தற்போதைய ஆளும் கட்சி கூறிய போது, ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பினர் அதனை விமர்சித்தனர். ஆனால், ராஜபக்ஷ அரசாங்கமே காணாமற்போனோர் தொடர்பான ஆணைக்குழு மூலம் உள்ளக பொறிமுறையொன்றை ஆரம்பித்திருந்ததை அமைச்சர் சம்பிக்க ரணவக்க நினைவூட்டினார். இப்போது அரசாங்கம் உள்ளக பொறிமுறையொன்றைப் பற்றிய வாக்குறுதியை மனித உரிமை பேரவைக்கு வழங்கியும் ஐ.ம.சு.கூ. அதனை விமர்சிக்கவில்லை. விமர்சிக்கவும் முடியாது.

ஐ.நா. அறிக்கை தாமதப்படுத்தப்பட்டதனால் இலங்கைக்கு கிடைத்த வெற்றி எதுவும் இல்லையாயினும் அது உள்நாட்டில் தமிழ் தலைவர்களை அதிருப்தியடையச் செய்துள்ளது. அதாவது, அரசாங்கம் தென்பகுதியை திருப்திப்படுத்தினால் வடபகுதி அதிருப்தியடைகிறது. வடபகுதி திருபதியடைந்தால் தென்பகுதி அதிருப்தியடைகிறது. அதாவது, எந்தப் பொறிமுறை வந்தாலும் வராவிட்டாலும் அரசாங்கத்துக்கு அது பொறியாகவே அமைகிறது.

-எம்.எஸ்.எம்ஐயூப்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடர் குண்டுத் தாக்குதலில் ஈராக்கில் 40 பேர் உயிரிழப்பு!

**(பக்தாத்)**

**ஈராக்கில் எப்போதும் மிகவும் பரபரப்பாக இருக்கும் சந்தைப் பகுதியில் இரட்டை வெடிகுண்டு தாக்குதல் மற்றும் பிறபகுதிகளில் தொடர் வெடிகுண்டு தாக்குதல்கள் நடத்தப்பட்டது. இச்சம்பவங்களில் 40 பேர் உயிரிழந்தனர் என்று அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**



பக்தாத்தின் தென்கிழக்கில் உள்ள தியாலா புறநகர் பகுதியில் நேற்று முன்தினம் மாலை வெடிகுண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் சிக்கியவர்களை காப்பாற்றும் பணியில் பொதுமக்கள் ஈடுபட்டபோது அப்பகுதியில் கார்க் குண்டு வெடித்தது. இந்த குண்டு வெடிப்புகளில் 25 பேர் உயிரிழந்தனர் என்று வைத்தியசாலை மற்றும் பொலிஸ் தரப்பு தகவல்கள் தெரிவித்துள்ளன. காயம் அடைந்த 50இற்கும் மேறப்பட்டோர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர. பலரது நிலைமை மிகவும் கவலைக்கிடமாகவுள்ளது. எனவே பலி எண்ணிக்கை அதிகரிக்கக் கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குண்டு வெடிப்புகளில் பாடசாலை மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். குண்டு வெடிப்பு சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு அருகே பாடசாலை உள்ளது.

பாடசாலையை விட்டு வெளியே வந்தபோது வெடிகுண்டுகள் வெடித்தது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த குண்டு வெடிப்புக்கு எந்தவொரு தீவிரவாத இயக்கமும் பொறுப்பேற்கவில்லை. நாட்டில் உள்ள ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் சித்திக் இஸ்லாமிய பிரிவினர் மற்றும் பாதுகாப்பு படையினரை குறிவைத்து தாக்குதல் நடத்தி வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக மிஷாதா பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த காரில் இருந்த குண்டு வெடித்தது. இதில் 4 பேர் உயிரிழந்தனர். 12 பேர் காயம் அடைந்தனர் என்று பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பக்தாத்தின் வடமேற்காக உள்ள சுலா பகுதி யிலும் வெடிகுண்டு வெடித்தது. இதில் 3 பேர் உயிழந்தனர். 8 பேர் காயம் அடைந்தனர்.

இதேபோன்று நாட்டின் பல்வேறு பகுதிகளில் வெடிகுண்டு தாக்குதல் மக்களை குறிவைத்து நடத்தப்பட்டது.

நேற்று முன்தினம் மட்டும் ஈராக்கில் நடந்த தொடர் வெடிகுண்டு தாக்குதலில் 40 பேர் பலியாகினர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. காயம் அடைந்தோர் பலர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அவர்களில் பலரது நிலைமை மிகவும் மோசமாக இருப்பதால் உயிரிழப்பு அதிகரிக்கக் கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

## பேருந்தில் பயணித்த 30 பேரை தீவிரவாதிகள் கடத்திச்சென்றனர்

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் ஒரு பேருந்தை வழிமறித்த தீவிரவாதிகள் அதில் இருந்த 30 பயணிகளை சிறைபிடித்துச் சென்றனர்.

சாபுல் மாகாணத்தின் ஷாஜோய் பகுதி வழியாக நேற்று முன்தினம் வந்த பேருந்தை ஆயுதமேந்திய கும்பல் வழிமறித்தது. அதில் இருந்த பயணிகளை வரிசையாக கீழே இறக்கிய அந்த கும்பல் 30இற்கும் மேற்பட்ட பயணிகளை பிடித்து சென்றதாக உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கடத்தப்பட்டவர்களை தீவிரவாதிகள் எங்கே அடைத்து வைத்துள்ளனர்? என்பதை கண்டுபிடிக்க பொலிஸாருடன் இராணுவமும் தீவிர தேடுதல் வேட்டை நடத்தி வருகின்றது. (இ-5)




## தீவிரவாதிகளைத் திருமணம் செய்ய சிரியா சென்ற பிரிட்டன் மாணவிகள்


சிரியா மற்றும் ஈராக்கில் ஆதிக்கம் செலுத்திவரும் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளை திருமணம் செய்து கொள்ளும் ஆசையில் பிரிட்டனைச சேர்ந்த 8 மாணவிகள் சிரியாவுக்கு சென்றுள்ள திடுக்கிடும் தகவல் வெளியாகியுள்ளது.

இவர்களில், லண்டன் பாடசாலையல் படிக்கும் ஷமிமா பேகம்(15), கதிஜா சுல்தானா(16), அமிரா அபாஸி(15) ஆகிய மூன்று சிறுமிகள் லண்டனில் இருந்து இந்த மாதத்தில் சிரியாவுக்கு சென்றுள்ளதாகவும், மற்றொரு மாணவி கடந்த டிசெம்பர் மாதம் சென்றதாகவும் அதிகாரபூர்வ தகவல் வெளியாகியுள்ளது.

இது மட்டுமின்றி ஐ.எஸ். ஐ.எஸ. தீவிரவாதிகளுக்காக மணமகள் தேடும் வலைத்தளங்களில் நூற்றுக்கணக்கான பிரிட்டன் பெண்கள் தங்கள் பெயர்களை பதிவு செய்துள்ளதாக தெரியவந்துள்ளது. இதில், குறிப்பிட்ட ஒரு தீவிரவாதியை திருமணம் செய்து கொள்ள மட்டும் உலகெங்கிலும் இருந்து ஆயிரக்கணக்கான பெண்கள் போட்டி போட்டுக்கொண்டு விண்ணப்பித்துள்ளதாக பிரிட்டன் ஊடகங்கள் செய்தி வெளியிட்டு ள்ளன.

கடந்த ஆண்டு ஜூன் மாதம் பிரிட்டனின் மான்செஸ்டர் பகுதியை சேர்ந்த இரட்டையர்களான சல்மா மற்றும் சாரா ஹலானே ஆகியோர் இதேபோல் தீவிரவாதிகளை திருமணம் செய்து கொள்ளும் ஆசையில் சிரியாவுக்கு சென்றனர். தங்களுக்கு பிடித்த, பொருத்தமான துணைவரை திருமணம் செய்தும் கொண்டனர்.

குர்தீஷ் மற்றும் தீவிரவாதத்துக்கு எதிரான சர்வதேச படைகளின் குண்டு வீச்சில் இவர்களின் கணவர்கள் பலியாகிவிட, தற்போது இந்த இரு பெண்களும் சிரியாவில் கணவனை இழந்தவர்களாக இருக்கும் அதிர்ச்சி தகவலையும் அந்த செய்திகள சுட்டிக்காட்டியுள்ளன. (இ-5)



அவுஸ்திரேலியாவின் அவலோன் பகுதியில் நேற்று முன்தினம் 24 ஆம் திகதி ஆரம்பமான சர்வதேச விமான சாகசத்தில் தீப் புகைமண்டலத்திற்கு மேலாக விமானிகள் புரியும் சாகசங்களை படத்தில் காணலாம். தொடர்ந்து 6 நாட்கள் இடம்பெறும் இந்த சாகச நிகழ்வில் 8 இலட்சத்துக்கும் அதிகமான பார்வையாளர்கள் வருகை தருவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

## மாயமான மலேசிய விமானத்தின் மர்மம் நீங்குமா?




கடந்த ஆண்டு மார்ச் 8 ஆம் திகதி மலேசிய தலைநகர் கோலாலம் பூரிலிருந்து பீஜிங் சென்ற எம்.எச்.370 விமானம் திடீரென காணாமற் போனது.

அந்த விமானத்தை தேடும் பணி எதிர்வரும் மே மாதத்துடன் முடிவடைய உள்ள நிலையில், விமானம் குறித்த பரபரப்பு தகவல் தற்போது வெளியாகியுள்ளது. விமானம் காணாமற போன போது என்ன நடந்தது என்பது குறித்து ஆவணப்படம் ஒன்று தயாராகி வருகிறது. அதன்படி காணாமற் போன விமானம் பற்றிய செயற்கைகோள் தகவல் திரட்டுகளை ஆராய்ந்த உலகின் பிரபலமான வானூர்தி பேரழிவு நிபுணர்கள், விமான கட்டுப்பாட்டு மையத்துடனான தொடர்பு துண்டிக்கப்பட்ட பின், வமானம் சில மணி நேரம் வானில பறந்ததை கண்டுபிடித்துள் ளனர்.

கிடைத்துள்ள ஆதாரங்களை மிகவும் கவனமாக ஆராய்ந்ததில், கடைசி ரேடியோ தொடர்புக்கு பின் விமானம் மூன்று முறை திரும்பியது தெரியவந்துள்ளது. முதல் முறை இடது பக்கமாக திரும்பிய விமானம், பின்னர் மீண்டும் மீண்டும் 2 முறை இடது பக்கமாகவே திரும்பி மேற்கு நோக்கி பயணித்து, பின்னர் தெற்கு புறமாக அண்டார்டிகாவை நோக்கி சென்றது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. வானூர்த்தி பேரழிவு குறித்து ஆராயும் உலகின் முன்னணி ஆய்வாளரான மால்கம் பிரன்னர் இது குறித்து கூறுகையில், விமானத்தின் பாதை மூன்று முறை மாற்றப்பட்டதன் மூலம் காக்பிட்டில் இருந்த யாரோ ஒருவர் திட்டமிட்டு விமானத்தின் போக்கை மாற்றியது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்றார். தனது 40 வருட அனுபவத்தில் இதுபோன்ற நிகழ்வை பார்த்ததில்லை என்று பிரன்னர் மேலும் தெரிவித்தார். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெற்றோர் பிள்ளைகளின் கல்வியில் அக்கறை செலுத்தும் காலம் மலர்ந்துள்ளது

## சந்திரகுமார் எம்.பி. தெரிவிப்பு



(கிளிநொச்சி)

நாட்டில் முன்னர் ஏற்பட்ட யுத்த சூழ்நிலை காரணமாக தமது பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளில் பெற்றோர் அதிக அக்கறை செலுத்த முடியாது போய்விட்டது. ஆனால் தற்போது அந்த நிலைமை மாறி தமது பிள்ளைகளின் கல்வியில் அதிக ஆர்வத்தோடு செயற்படுகின்ற காலம் உருவாகியுள்ளது என பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி சாந்தபுரம் கலைமகள் வித்தியாலயத்திற்கு தனது ஒன்றரை இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டிலிருந்து தமிழ் இன்னிய இசை அணிக்கான கருவிகள் உள்ளிட்ட உபகரணங்களை நேற்று முன்தினம் வழங்கி வைத்து உரையாற்றும் போதே அவர் மேற்கொண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில், மீள்குடியேற்றத்திற்குப் பின்னர் கிளிநொச்சி மாவட்டத்தின் கல்வி அபிவிருத்தியில் நாம் முன்னேற்றத்தைக் கண்டுள்ளோம். நகரமும் அதனை அண்டிய பகுதிகளும் மட்டும்தான் கல்வியில் முன்னேற வேண்டும் என்ற நிலை முன்னர் காணப்பட்டது.

ஆனால் நாம் அந்த நிலையை மாற்றி கிராமப் புற மாணவர்களின் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து அவர்களையும் நகரத்தில் வசிக்கும் மாணவர்களின் கல்வி நிலைக்கு நிகராக வளர்த்து சமமான வளப்பங்கீடுகளை வழங்கி வளர்ச்சிப்பாதையில் கொண்டு சென்றிருக்கின்றோம்.

தற்போது கிளிநொச்சி மாவட்டத்தின் கல்வி நிலைகளின் பெறுபேறுகளின் அடிப்படையில் கிராமப்புற மாணவர்களின் பெறுபேறுகள் தான் சிறப்பாக காணப்பட்டு வருகிறது.

இந்த விடயமெல்லாம் நம் கிராமப் புற மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு முக்கியத்துவமாகவே கருதுகின்றோம்.

கிளிநொச்சி மாவட்டம் கடந்த ஐந்து வருடங்களில் கல்வியில் முன்னேற்றமடைந்தமைக்கான காரணம் நாம் கல்வியில் அரசியலுக்கு அப்பால் கல்வித் துறையின் செயற்பாடுகளை முன்னெடுத்தமையேயாகும் என்றார்.

இந் நிகழ்வின் போது சாந்தபுரம் கிராம அமைப்புக்கான இரண்டு இலட்சத்து 25 ஆயிரம் ரூபா பெறுமதியான நகர பந்தல் கதிரைகள் ஒலிபெருக்கி தொகுதிகள் என்பன பாராளுமன்ற உறுப்பினரால் வழங்கி வைக்கப்பட்டது. (2)

# சிறுகதைத் தொகுதி நூல் வெளியீடு

யாழ்.தர்மினி பத்மநாதனின் "விபச்சாரி 80 ரூபா" சிறுகதைத்தொகுதி நூல் வெளியீட்டு நிகழ்வு நாளை மறுதினம் சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வவுனியா சுத்தானந்தா இந்து இளைஞர் சங்க கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

கலாநிதி தமிழ்மணி அகளங்கன் தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்விற்கு தமிழ்மொழி வாழ்த்து மற்றும் வரவேற்புரையை ஆசிரியை கஜறதி பாண்டித்துரை ஆற்றுவார். வாழ்த்துரையை வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத் தலைவர் சேனாதிராசா மற்றும் வவுனியா மாவட்ட கலாசார உத்தியோகத்தர் நித்தியானந்தன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

நிகழ்வில் கலை இலக்கிய ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு ஏற்பட்டாளர்கள் கேட்டுள்ளனர். (2-250)




# 16 வர்த்தகர்களுக்கு அபராதம் விதிப்பு

வன்னி மாவட்ட நுகர்வோர் அலுவலகை அதிகார சபையினரால் மன்னார் நகரப் பகுதியிலுள்ள வர்த்தக நிலையங்களில் மேற்கொள்ளப்பட்ட திடீர் பரிசோதனைகளில் காலாவதியான மற்றும் விலைகள் காட்சி படுத்தாமல் கூடிய விலையில் பொருட்கள் விற்றமை தொடர்பாக 16 வர்த்தகர்கள் கண்டு பிடிக்கப்பட்டு நேற்று முன்தினம் மன்னார் மாவட்ட, நீதவான் நீதிமன்ற நீதிபதி அலெக்ஸ்ராஜா ஆசீர்வாதம் கிறேசியன் முன் ஆஜர்படுத்தப்பட்டனர்.

விலைகளைக் காட்சிப்படுத்தாது அரிசி, சீனி விற்றமை, பனடோல் கூடிய விலைக்கு விற்றமை, காலாவதியான ஷம்போ போத்தல் காட்சிப்படுத்தியமை, கூடிய விலைக்கு மைலோ பானம் விற்றமை, விலை காட்சிப் படுத்தாது பாண் விற்றமை ஆகிய குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்பட்டே இந்த வர்த்தகர்கள் நீதவான் முன்னிலையில் வன்னி மாவட்ட நுகர்வோர் அலுவலக அதிகார சபை அதிகாரிகளால் முற்படுத்தப்பட்டனர். இந்த வர்த்தகர்கள் நீதவான் முன்னிலையில் தங்கள் குற்றங்களை ஒப்புக்கொண்டதையடுத்து ஒவ்வொருவருக்கும் தலா 3 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (2)

# மாணிக்கபுரம் பிரதான வீதியை போக்குவரத்துக்கு இலகுபடுத்துங்கள்

நாற்பதுவருடங்களாக புனரமைக்கப் படாது காணப்படும் மாணிக்கபுரம் பிரதான வீதியை திருத்தம் செய்து தடுமாறு அப்பகுதி மக்கள் வடமாகாண சபை உறுப்பினர் து.ரவிகரனிடம் முறையிட்டுள்ளனர்.


வடமாகாண சபை உறுப்பினர்களுக்கு அம்மக்கள் அண்மையில் விடுத்த வேண்டுகோளுக்கு இணங்க குறித்த பகுதியை பார்வையிடச் சென்ற போதே மேற்படி முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டன.

இது தொடர்பில் அம் மக்கள் தெரிவிக்கையில்,

விசுவமடு பாரதி வித்தியாலயம் முன்பாக அரை ஏக்கர் திட்ட குடியிருப்புக்கு செல்லும் சுமார் அரை கிலோமீற்றர் நீளமான பிரதான வீதியானது 1977ஆம் ஆண்டு தொடக்கம் திருத்தம் செய்யப்படாது இருப்பதாக மக்கள் முறையிட்டனர்.

சுமார் 450 குடும்பங்களுக்கும் மேலாக இவ்வீதியை நாளாந்தம் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் பயன்படுத்தி வருவதாகவும் இப்பாதையில் உள்ள மரப்பலகை பாலத்தினால் பாடசாலை சிறார்கள் மிகுந்த சிரமத்தை எதிர்நோக்குவதாகவும் அம்மக்கள் தெரிவித்தனர்.


மேலும் ஒரு தடவை மாணவர் ஒருவர்



அப்பலகை பாலத்தில் இருந்து தவறி வீழ்ந்து காப்பாற்றப்பட்ட சம்பவமும் உள்ளதென குறிப்பிட்ட மக்கள், தமது பிரதான வீதியும் அபாயகரமான பாலமாக காணப்படும் மேற்படி பலகைப் பாலத்தையும் சீர்செய்து மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு வழிகோலுமாறு வடமாகாண சபை உறுப்பினரிடம் மக்கள் கோரியுள்ளனர்.

மேற்படி கோரிக்கை தொடர்பிலான தகவல்களை சேகரித்த அவர், வீதி திருத்தம் தொடர்பிலும் பலகைப்பாலம் சீர்செய்தல் தொடர்பிலும் எடுக்கக்கூடிய நட வடிக்கைகளை தாம் எடுப்பதாக, கிராம மக்களிடம் உறுதியளித்திருந்தார். (2)

# குடிநீர் பிரச்சினையை தீர்க்க குழாய்க்கிணறு அமைப்பு



முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிர தேசத்தின் புதிய குடியிருப்பு பகுதி மக்களின் வேண்டுகோளுக்கு அமைய மனித நேயம என்ற அமைப்பினரால் குழாய்க் கிணறு அமைக்கப்பட்டு மக்களிடம் கையளிக்கப் பட்டுள்ளது.

குறித்த அமைப்பினரால் இரண்டு இலட்சத்து 90 ஆயிரம் ரூபா செலவில் குழாய்க் கிணறு அமைக்கப்பட்டு நேற்று முன்தினம் மாலை மனித நேயம் அமைப்பின் தொண்டாளர் சுவாமி ரிஷி தொண்டுநாதர் மக்களிடம் கையளித்தார்.

புதிய குடியிருப்பு பகுதியில் கடந்த ஒன்பது வருடகாலமாக மக்கள் தண்ணீர் பிரச்சினையை எதிர்கொண்டு வந்தனர்.

இந்நிலையில் குடிநீர் உட்பட அனைத்து தேவைகளுக்குமான நீரைப் பெறுவதற்கு இம்மக்கள் ஒரு கிலோமீற்றர் தூரத்தில் உள்ள இடங்களுக்குச் சென்றே பூர்த்தி செய்து வந்தனர். இந்நதப்பகுதியில் உள்ள எந்தக் காணிகளிலும் கிணறுகள் இல்லை.

இந்நிலையிலேயே மக்களின் வேண்டுகோளுக்கு அமைய மனிதநேயம் அமைப்பினரால் குழாய்க்கிணறு அமைக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் இந்தப் பகுதியில் இரண்டு இலட்சத்து தொண்ணூறு ஆயிரம் ரூபாய் பெறுமதியான 2 குழாய்க்கிணறுகள் மனிதநேயம் அமைப்பினரால் அமைத்துக் கொடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2)

# மன்னாரில் பெரும்போக நெற்செய்கை அறுவடை ஆரம்பம்

மன்னார் மாவட்டத்தில் இம்முறை பெரும்போக நெற்செய்கை 18 ஆயிரத்து 100 ஹெக்டேயர் நிலப்பரப்பில் செய்கை பண்ணப்பட்டது. இதற்கான அறுவடை தற்போது விவசாயிகளால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இம்முறை பெரிய சிறிய நீர்ப்பாசனம் மற்றும் மானாவாரி ஆகிய 3 முறையில் நெற்பயிர் செய்கை பண்ணப்பட்டுள்ளது.

இதன்படி 18 ஆயிரத்து 100 ஹெக்டேயரில் 60 சதவீதத்திற்கு மேல் வீ. ஜி360 (கீரிசம்பா) செய்கை பண்ணப்பட்டுள்ளது. அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தால் சுமார் 5 ஆயிரம் நிலப்பரப்பில் செய்கை பண்ணப்பட்ட நெற்பயிர் 100 வீதம் அழிவடைந்திருந்தது.

அதனை அடுத்து விவசாய திணைக் களத்தினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கப்பட்டு மீண்டும் விவசாயிகளால நெல் விதைக்கப்பட்டு அறுவடை நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளக விசாரணைப் பொறிமுறையை வடக்குவாழ் மக்கள் ஏற்கமாட்டார்கள்

## மாற்றுக் கொள்கைகளுக்கான நிறைவேற்றுப் பணிப்பாளர் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

**சர்வதேச பரிமாணமின்றி முற்றுமுழுதாக உள்ளக விசாரணைப் பொறிமுறையை அரசு நிறுவுமிடத்தில் அதனை வடக்கில் வாழும் மக்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்று மாற்றுக் கொள்கைகளுக்கான ஆய்வு நிலையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து தெரிவித்தார்.**

அடுத்த ஆறு மாத காலப்பகுதியில் உள்ளகப் பொறிமுறைக்கான கட்டமைப்புக்களை அரசு நிறுவினாலும் நிச்சயமாக எவ்வித மாற்றங்களும் இன்றி செப்டெம்பர் மாதத்தில் ஐ.நா. விசாரணை அறிக்கை வெளியாகும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு அவர் வழங்கிய நேர்காணலில்

**கேள்வி:** ஐ.நா. மனித உரிமைகள் பேரவைஇலங்கை மீதான விசாரணை அறிக்கையை ஆறுமாத காலப் பகுதிக்கு ஒத்திவைத்துள்ளது. இலங்கை அரசு வழங்கிய உறுதி மொழிகளுக்கு அமைவாகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. எந்தவிதமான உறுதிமொழிகளை அரசு வழங்கியுள்ளது?

**பதில்:** ஐ.நா. ஆணையாளரிடம் வேண்டுகோள் விடுத்து வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர அனுப்பியிருந்த கடிதமே பொதுத் தளத்தில் எமக்குத் தெரிந்த விடயமாக இருக்கின்றது. அந்தக் கடிதத்தில் புதிய அரசு ஏற்கனவே குறிப்பாக புதிய ஆளுநர் நியமனம், காணிகளை விடுவிப்பதற்கான உறுதிமொழி, சாட்சியங்களைப் பாதுகாப்பதற்கான சட்ட மூலம் போன்ற விடயங்களைக் குறிப்பிட்டுள்ளது. இதன் மூலமாக இன்னமும் அதிகமாக விடயங்களை இலங்கை அரசு மேற்கொள்ளும் என ஆணையாளரும் சர்வதேச சமூகமும் எதிர்பார்ப்பர் என நான் நினைக்கின்றேன். விசேட ஆணைகொண்ட தூதுவர்களின் விஜயங்களுக்கு அனுமதியளித்தல் போன்று சட்டங்களை மாற்றியமைத்தல் ஆகியவற்றையும் எதிர்பார்க்கலாம். போர்க்குற்றங்கள் மற்றும் மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் குறித்த விடயத்தில் முறையான சட்ட நடவடிக்கையை எடுப்பதற்கு எவ்வித தடங்கல்களும் இல்லாதிருப்பதை உறுதிசெய்வதற்காகவே இந்தச் சட்டமாற்றங்கள் முன்னெடுத்திருக்கவேண்டும்.

சில குற்றங்கள் இலங்கையில் குற்றங்களாக சட்டத்தில் உள்ளடங்கப்படவில்லை. குறிப்பாக காணாமல்போதல் இலங்கையைப் பொறுத்த வரையில் ஒரு குற்றமாக சட்டத்தில் உள்வாங்கப்படவில்லை. இவற்றை சட்ட திருத்தங்களின் ஊடாக குற்றங்களாக உள்ளடக்க அரசு நடவடிக்கை எடுக்கும் என்ற எதிர்பார்ப்பு காணப்படுகின்றது. அந்த வகையில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவை எதிர்பார்ப்புக்களைத் தாங்கிய நிபந்தனைகளின் அடிப்படையிலேயே அறிக்கை வெளியீட்டைப் பிற்போட்டுள்ளது.

அறிக்கை நிச்சயமாக செப்டெம்பரில் வெளியிடப்படும்.

**கேள்வி:** இலங்கை அரசு நியாயமானதொரு உள்ளக விசாரணையை மேற்கொள்ளும் நிலையில்கூட செப்டெம்பரில் எவ்வித மாற்றங்களுமின்றி ஐ.நாவின் அறிக்கை வெளிவருமா?

**பதில்:** ஆம். எந்தவிதமான மாற்றங்களுமின்றியே ஐ.நா. அறிக்கை வெளிவரும் என நான் எதிர்பார்க்கின்றேன்.

**கேள்வி:** ஐ.நா. அரசிடமிருந்து ஒத்துழைப்பை நாடிநிற்கின்றது. ஆனால், வெளிநாட்டவர்களின் உதவி தேவையில்லை, நம்பகரமான உள்ளக விசாரணையை தம்மால் நடத்தமுடியும் என அரசு கூறுகின்றது. அரசின் நிலைப்பாடு இப்படி இருக்கும்போது ஒத்துழைப்பு எப்படிச் சாத்தியம்?

**பதில்:** சர்வதேச விசாரணை தேவையில்லை என அரசு கூறுகின்றது. நம்பகரமான உள்ளக பொறிமுறையை முன்னெடுக்கும் என அரசு கூறுகின்றது. ஆனால், போர்க்குற்ற விசாரணை போன்ற விடயங்களைக் கையாள வேண்டுமாயின் அரசு சில நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும் என ஐ.நா. கூறுகின்றது.

உள்ளக விசாரணைப் பொறிமுறை நிறுவப்பட்டாலும் அதிலே சர்வதேச பரிமாணமொன்று இருக்கவேண்டும் என்ற கோரிக்கைகள் நிச்சயமாக எழும்.

அப்படியில்லாத நிலையில் வடக்கிலுள்ள மக்கள் முற்றுமுழுதான உள்ளக விசாரணைப் பொறிமுறையொன்றை ஏற்றுக் கொள்வார்கள் என நான் நினைக்கவில்லை. ஆகவே, சர்வதேச தொழில்நுட்ப உதவிகள் வெளியிலிருந்து பெறப்படும்.

அது ஐ.நாவுக்கூடாக வரும். இது உள்ளக விசாரணைப் பொறிமுறையின் நம்பகத்தன்மையை வலுப்படுத்த உதவும் என நான் கருதுகின்றேன்.

**கேள்வி:** உள்ளக விசாரணையில் குற்றவாளிகளாக இனங்காணப்படுகின்றவர்களை இலங்கை அரசு தண்டிக்க வேண்டியது அவசியமானதா?

**பதில்:** ஆம் போதுமான ஆதாரங்கள் இருப்பின் தண்டிக்கப்பட வேண்டும். நம்பகரமான உள்ளக விசாரணைப் பொறிமுறை சர்வதேச தராதரங்களைக் கொண்டிருப்பது அவசியமானது.

**கேள்வி:** போருடன் நேரடியாக சம்பந்தப்பட்ட அனைவரையும் பாதுகாப்பேன் என அரசு பகிரங்க உறுதியளித்துள்ள நிலையில் குற்றவாளிகளாக இனங்காணுவோரைத் தண்டிப்பதற்கான திராணியை இந்த அரசு கொண்டிருக்குமா? இதனை எப்படி சர்வதேச சமூகம் நம்பமுடியும்?

**பதில்:** நீங்கள் காலஅவகாசம் கோரியபோது. உங்களுக்கு செப்டெம்பர் வரை காலஅவகாசம் வழங்கபபட்டுள்ளது என சர்வதேச சமூகம் கூறுகின்றது.

இந்தக் காலப்பகுதியல் சில விடயங்களை சர்வதேச சமூகம் எதிர்பார்க்கின்றது. இதன்பின்னர் நாம் அறிக்கையை வெளியிடுவோம். அதன்பின்னர் அறிக்கையை அடியொற்றி நடவடிக்கை எடுக்கும் பொறுப்பு மனித உரிமைப் பேரவைக்குண்டு. அரசு எந்த வொரு பொறிமுறை யையேனும் நிறுவிவிட்டு தப்பிக் கொண்டு விடமுடியாது. மாறாக அரசின் பொறிமுறை குறிப்பிட்ட தராதரங்களை உடையதாக இருக்க வேண்டியது அவசியமாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-11)

# அபிவிருத்தி என்ற பேரில் பணத்தை தின்றுதீர்த்தனர்

மக்களின் அத்தியாவசிய பொருட்களில் ஒன்று தான் கொத்தமல்லி. அதனாலேயே இடைக்கால வரவு செலவு திட்டத்தில் அதன் விலையை குறைத்தோம் என ஐக்கிய தேசிய கட்சியின் மாகாணசபை உறுப்பினர் ரஞ்சித் அலுவிஹாரே தெரிவித்துள்ளார்.

மாத்தளையில் நேற்று முன்தினம் இடம் பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் எங்களது வரவு செலவுத் திட்டத்தினை கொத்தமல்லி வர்வு செலவு திட்டம் என்றே மக்கள் கூறினார்கள்.

கொத்தமல்லியும் அத்தியாவசிய பொருட்களில் ஒன்று தான். இவ்வாறான நிவாரணங்கள் வழங்கும் போது ஒவ்வொருவரும் அவமரியாதையாக பேசுகின்றார்கள். முன்னாள் அமைச்சர்கள் நிவாரணங்கள் குறித்து பேசியதே இல்லை.

மகிந்த ராஜபக்சவின் அரசாங்கத்தில் மக்களின் அத்தியாவசிய பொருட்கள் குறித்து யோசிக்கவில்லை.

அபிவிருத்தி என்ற பேரில் பணத்தை தின்று தீர்த்தார்கள். நாட்டு பணத்தை வீணடித்த அமைச்சர்கள், உறுப்பினர்கள் இன்று நாட்டை விட்டு ஓடிவிட்டார்கள் என ரஞ்சித் அலுவிஹாரே மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 140 | 100 | 100 |
| உருளைக்கிழங்கு | 60 | 90 | 70 | 80 |
| பச்சைமிளகாய் | 100 | 120 | 130 | 120 |
| தக்காளி | 100 | 140 | 200 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 40 | 40 | 50 |
| கோவா | 80 | 100 | 70 | 80 |
| கரட் | 200 | 120 | 150 | 200 |
| பூசணி | 110 | 100 | 80 | 120 |
| புடோல் | 60 | 80 | 60 | 100 |
| வாழைக்காய் | 100 | 100 | 70 | 80 |
| சின்ன வெங்காயம் | 100 | 80 | 90 | 80 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 | 80 | 80 |
| பாகற்காய் | 120 | 140 | 100 | 120 |
| வெண்டிக்காய் | 60 | 100 | 90 | 100 |
| கருணைக் கிழங்கு | 60 | 50 | 50 | 80 |
| பயற்றங்காய் | 100 | 120 | 100 | 120 |
| லீக்ஸ் | 200 | 200 | 150 | 200 |
| பீற்றூட் | 60 | 80 | — | 100 |
| கறிமிளகாய் | 200 | 180 | 150 | 200 |
| முருங்கைக்காய் | — | 400 | — | 240 |
| போஞ்சி | — | 180 | 270 | 200 |
| கத்தரிதம்புள்ள | — | 100 | 60 | — |
| கீரை - 1 பிடி | 10 | 30 | 20 | 20 |
| தேசிக்காய் | 20 | 30 | 40 | 40 |
| தேங்காய் (ஒன்று) | 25-60 | 50 | 50 | 40-60 |
| இராசவள்ளி | 100 | 140 | 100 | 120 |
| வெங்காயப்பூ | 40-90 | 150 | — | 140 |

# பிரிவுத்துயர் பகிர்வு



### கந்தசாமி. அருளானந்தம்

நல்லூர் வீரகாளி அம்மன் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் சுவிசை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி அருளானந்தம் கடந்த 23 ஆம் திகதி திங்கட்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 2 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு Krematorium Ruti, Krematoriumstrasse 15, 8630 Ruti Switzerland என்னும் முகவரியில் நடைபெறும்.



### ஐயாத்துரை ஜோசப்சபாரட்ணம்

சங்கானையைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை ஜோசப்சபாரட்ணம் கடந்த 21 ஆம் திகதி சனிக்கிழமை அன்று காலமானார். அன்னாரின் பூதவுடலுக்கு எதிர்வரும் மார்ச் மாதம் 3 ஆம் திகதி முற்பகல் 10.30 மணியளவில் Sudbury Methodist Church, 809, Harrow Road, Sud bury, Wembley, Middlesex Hao 2LP, UK என்னும் முகவரியில் இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### திருமதி ஜெயராசா றெஜினாலில்லிமலர்

பிரதான வீதி , சுண்டுக்குளியைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட ஜெயராசா றெஜினாலில்லிம்லர் கடந்த 23 ஆம் திகதி திங்கட்கிழமை அன்று காலமானார். அன்னாரின் பூதவுடல் A.F றேமன்ட் மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதி ஆராதனையின் பின்னர் பொறளை சேமக்காலையில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் தகனம் செய்யப்படும்.



### ராஜரட்ணம் யோகேஸ்வரன்

தாவடி வடக்கைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட ராஜரட்ணம் யோகேஸ்வரன் கடந்த 23 ஆம் திகதி திங்கட்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு Chapel Ridge Funeral Home, 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### நல்லதம்பி கணபதிப்பிள்ளை

மீசாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நல்லதம்பி கணபதிப்பிள்ளை கடந்த 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணிளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் வேம்பிராய் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதிமன்றில் விமல்!



(கொழும்பு)

கைது செய்யப்பட்ட தனது மனைவியான சசி வீரவனசவை பார்வையிடுவதற்காக முன்னாள் அமைச்சரும் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவருமான விமல் வீரவன்ச நீதிமன்றுக்கு சமுகமளித்திருந்தார். சசி வீர வன்ச, கொழும்பு பிரதான நீத வான் கிஹான் பிலபிட்டிய முன் னிலையில் நேற்று புதன்கிழமை ஆஜர்படுத்தப்பட்டார். நாடாளு மன்ற உறுப்பினர் விமல் வீரவ ன்சவுடன் அவரது மகள் மற்றும் மேல் மாகாணசபை உறுப்பினர் உதயன்கம்மன்பில ஆகியோர் இதன் போது வருகை தந்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# கல்வியமைச்சரின் தொலைபேசி குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன

(கொழும்பு)

கல்வியமைச்சர் அகில விராஜ் காரியவசத்தின் பெயரில் தொலை பேசி அழைப்பை எடுத்த நபரை கண்டறிய விசாரணைகள் ஆரம் பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்ப டுகிறது.

கல்வியமைச்சர் என்று தன்னை அறிமுகம் செய்து கொண்ட ஒருவர் அண்மையில் மேல் மாகாண கல்வி பணிப்பாளர் விமல் குண ரத்னவுக்கு தொலைபேசி அழைப் பொன்றை எடுத்திருந்ததாக கூறப்ப டுகிறது.

இது குறித்து விமல் குணரத்ன, கல்வியமைச்சை தொடர்பு கொணடு விசாரித்துள்ளதுடன் அது போலி யான நபர் ஒருவர் மேற்கொண்ட அழைப்பு என்பது தெரியவந்து ள்ளது.

இப்படியான போலியான தொலை பேசி அழைப்புகளை எடுக்கும் நபர்களுக்கு எதிராக சட்டத்தை கடுமையாக அமுல்படுத்துமாறும், பாடசாலைகளுக்கு இப்படியான அழைப்புகள் வந்தால், அதனை உடனடியாக உறுதிப்படுத்துமாறும் கல்வியமைச்சர் அகில விராஜ் காரியவசம் கேட்டுக்கொண்டு ள்ளார். (இ-5)

## சத்சங்க நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். இராமகிருஷ்ண மிஷன் நலன்புரி நிலையத்தின் சத்ச ங்க நிகழ்வு நாளை மறுதினம் சனிக்கிழமை முற்பகல் 9 மணி தொட்கம் நண்பகல் 12 மணி வரை உரும்பிராயிலு ள்ள இராமகிருஷ்ண மிஷன் நலன்புரி நிலைய பிரார்த் தனை மண்டபத்தில் இடம் பெற வுள்ளது.

இந்நிகழ்வில் ஆன்மீக அறி வுரைகளை மலேஷிய இராம கிருஷ்ண மிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி சுப்பிரியானந் தஜி மகராஜ் வழங்கவுள் ளார். (இ-3-5)

## நகரசபை ஊழியர் மீது சாவகச்சேரியில் வாள்வெட்டு

கரவெட்டியிலிருந்து சாவகச்சேரிக்குச் சென்று கொண்டிருந்த நபர் ஒருவரை வாளால் வெட்டி அவரிடம் இருந்த நகைகள் கொள்ளைய டிக்கப்பட்டுள்ளன. கடந்த திங்கட்கிழமைஇரவு கப்பூதுப் பகுதியில் இச்சம் பவம் இடம் பெற்றுள்ளது.

சம்பவத்தில் நகரசபை ஊழியரான சாவகச்சேரியைச் சேர்ந்த எஸ். உதயகுமார் என்பவரே வாள் வெட்டுக்கு இலக்கானதுடன் தனது மோதிரம் சங்கிலி என்பவற்றைப் பறிகொடுத்துள்ளார். சம்பவம் தொடர்பாக நெல்லி யடி பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளதுடன் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-3-60)

## மாசிமக இலட்சார்ச்சனை

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை துர்க்காபுரம் அருள்மிகு ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான மாசிமக இலட்சார்ச் சனை விஞ்ஞாபனம் கடந்த 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகியது.

இதேவேளை எதிர்வரும் மார்ச மாதம் 3 ஆம் திகதி வரை இலட்சார்ச்சனை நடைபெற்று 4 ஆம் திகதி கலச அபிஷேகம், ஸ்வர்ணபத்ம புஸ்பார்ச்சனை , உள்வீதியுலா என்பன இடம்பெ றவுள்ளன. (இ-5)

# ஆத்ம ஞானத்தைத் தேடி

நேரடி உரையாடல்; ஒரு அற்புதமான தனிப்பட்ட பேட்டி யின் வெளிப்பாடு.

ஆன்மீகம் 154

# பயத்தை எதிர்கொள்ளல்



நீங்கள் இந்தக் கருத்தின் செயற் பாட்டை தெளிவாக மக்களின் நடத்தையில் காணலாம். இந்தியா வில் ஒரு நிகழ்ச்சி 6 மணிக்குத் தொடங்குவதாக திட்டமிடப்பட்டி ருந்தால், அது 7.30 இற்கு முன்னால் தொடங்காது என்பதை உறுதியாகச் சொல்ல முடியும். ஏனெனில், அவர் களுக்கு முன் அழிவற்ற தன்மை இருக்கிறது!

நமது முழு மன அமைப்பு நமது வாழ்வின் போக்கு, நமது சமூகம், நமது கலாசாரம், நமது மதம் அனை த்துமே மரணம் பற்றிய நமது கருத் தின் அடிப்படையிலேயே அமைந்தி ருக்கிறது.

நாம் மரணத்தைப் பற்றி நினைக் காமல் இருக்க முயற்சி செய்கி றோம்- ஆனால், மரணம் நமது வாழ்வின் ஒவ்வொரு கணத் திலும் வியாபித்திருக்கிறது!

நாம் மரணத்தின் ஆழங்களையும் இரகசியங்களையும் புதிரையும் புரிந்து கொண்டால் வாழ்வின் இரக சியங்களைப் புரிந்து கொள்வோம். நாம் மரணத்தின் புதிரை விடுவித்து, அது வேறு ஒரு வடிவத்தில் ஒரு வெறும் தொடர்ச்சியே என்பதைக் காண வேண்டும். இல்லையெனில் நாம் வாழ்வையே தவறவிட்டு விடு வோம்!

நாம் மரணம் என்பது வேறொரு வடிவத்தில்; ஒரு தொடர்ச்சியைத் தவிர வேறில்லை என்பதைப் புரிந்து கொண்டால் மரணத்தைக் கண்டு அஞ்சமாட்டோம். மரணத்தைக் கண்டு அஞ்சுவதை நிறுத்தும் பொழுது எவ்வளவு தூரம் வாழ்க்கையைத் தவற விட்டுக் கொண்டு இருக்கிறோம் என்பதைத் தெரிந்து கொள்வோம்.

நாம் வாழ்க்கையைச் சாதாரண மாக எடுத்துக் கொள்கிறோம். மிகவும் மேலோட்டமாக வாழ்கிறோம். வாழ் க்கையில் பல அம்சங்களைத் தவற விட்டு விடுகிறோம். இறப்பு, வாழ்க் கையை மிகுந்த விழிப்புணர்வுடன் பார்க்கக் கற்றுக் கொடுக்கும். மரணம் எப்பொழுதும் ஒரு மிகச் சிறந்த குரு வாக இருக்கிறது.

நமக்கு ஏதேனும் ஒரு விடயத்தில் நம்பிக்கை வரவேண்டுமென்றால், அதை இரண்டு விதங்களில் செய்ய லாம். ஒன்று உண்மை என்னவென்று நாமே பரிசோதனை செய்து பார்த்து விடுவது. இரண்டு, அதை ஏற்கனவே அனுபவித்தவர்களின் குறிப்பை எடுத் துக்கொள்வது. நான் இப்பொழுது உங்களுக்கு உபநிடத்துக்களில் இருந்து ஒரு குறிப்பைக் கொடுக்கிறேன்.

கடோபநிடத் என்று ஒரு உபநிடதம் இருக்கிறது. அது மரணத்தின் கடவு ளான எமனுடன் ஒரு குழந்தையின்

ஹிந்து புராணங்களில், எமனே இறப்பின் பிரதான கடவுள் என்று சொல லப்படுகிறது.

அவன் மரண த்தைக் குறிக்கி றான். உச்சை சிர வஸ் என்றொரு பெரிய மன்னன் இருந்தான். அவனு க்கு திடீரென்று இந்த உலகம் முழுவதையும் தன் கட்டுப்பாட்டிற் குள் கொண்டு வரவேண்டும் என்று ஆசை வந்துவிட்டது. அதனால், வாஜபேய யாகம் (உலகம் முழுவ தும் ஆள விருப்பம் உள்ளவன் செய்ய வேண்டிய ஒரு அக்னி வழிபாடு) செய்தான்.

இந்த வழிபாட்டின் விதிமுறை களின்படி ஒருவர் தனக்குப் பிடித்த மான மிக விலையுயர்ந்த பொருட் களையெல்லாம் தானமாகக் கொடு த்துவிட வேண்டும். அப்பொழுது தான் அவரால் உலகத்திற்கே கட வுள் என்கிற பதவியை அடைய முடியும். மன்னர்கள் எல்லாம் எப்பொழுதுமே சிறந்த வியா பாரிகள்; அவர்கள் அப்படித்தான் இருக்க வேண்டும்; இல்லாவிடில் அவர்களால் மன்னர்களாக இருக்க முடியாது. மிகப்பெரிய சொத்துக் களை அடக்கி ஆளவும் முடியாது. அவர்கள் குறைந்தபட்சம் கொடுத்து விட்டு அதிகபட்சம் அடைய முடி யுமா என்று பார்ப்பவர்கள்.

(தொடரும்)

பரமஹம்ஸ சுவாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லல் பட்டு ஆற்றாது அழுத கண்ணீர்அன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை
– திருவள்ளுவர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# அழுகண்ணீர் விடுபவர் துயரம் தீர்வது எந்நாளோ?

தமிழ் அன்னையர் விடும் கண்ணீர் கணக்கின்றிப் போகிறது. காணாமல்போன தங்கள் பிள்ளைகளுக்காக–குடும்பத் தலைவர்களுக்காக ஆண்டுக்கணக்கில் அழுவதென்பது சாதாரணமானதன்று.

கண்ணீரோடு உறங்கி கண்ணீரோடு விழிக்கின்ற பரிதாபத்துக்கு என்றுதான் முடிவு கிட்டும்?

பிரிட்டிஷ் பிரதமர் கமரூன் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தபோது எங்கள் அன்னையர் நிலத்தில் வீழ்ந்து நீரூமோ எங்கள் துயர்! என்று அழுது புரண்டனர். இது மட்டுமல்ல; யாழ்ப்பாணத்துக்கு யார் வந்தாலும் காணாமல் போனவர்களின் உறவுகள் விடுகின்ற கண்ணீர் கண்டு இன்னமும் எவரும் இரங்காமை ஏன்? காணாமல் போனவர்கள் இருக்கிறார்களா? இல்லையா? இருக்கிறார்கள் என்றால் அவர்கள் எங்கே என்பதைக் கூற வேண்டும்.

காணாமல் போனவர்கள் எவரும் இல்லை என்றால் அவர்களுக்கு நடந்தது என்ன? அவர்களை என்ன செய்தீர்கள்? எங்கே வைத்துச் செய்தீர்கள் என்பதைத் தெளிவுபடுத்த வேண்டும்.

இதை விடுத்து எதையும் சொல்லாமல் விடுவதால், காணாமல் போனவர்களின் உறவுகள் கண்ணீரும் சோறும் அல்லவா உண்கிறார்கள். இந்த அவலநிலை இன்னும் எத்தனை ஆண்டுகளுக்கு நிலைக்கப் போகிறது?

2009ஆம் ஆண்டு மே மாதத்தில் உயிர் இழந்த ஒருவரின் குடும்பம் ஏதோ எம் தலைவிதி என்று இறந்தவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையோடு ஆறுதல் கொள்கிறது.

ஆனால் காணாமல் போனவர்களின் உறவுகள் எங்கெல்லாம் சென்று கண்ணீர் விட முடியுமோ அங்கெல்லாம் சென்று கண்ணீர் விடுகின்றனர். ஒரு சில தினங்களுக்கு முன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமூகம் நடத்திய ஆர்ப்பாட்டப் பேரணியின் முடிவில் காணாமல்போனவர்களின் உறவுகள் விட்ட கண்ணீர், கடவுளே! இதற்கு ஒரு முடிவு இல்லையா? என்று மனம் நோகிறது.

ஓ! சில வேளையில் எங்கள் அன்னையர் விடும் கண்ணீரால்தான் இந்த நாட்டின் பேரினவாதம் அழிய வேண்டும் என்பது நியதியாயிற்றோ என்று நினைக்கவும் தோன்றுகிறது. இந்த நினைப்பிற்கு ஆதாரமும் இருக்கவே செய்கிறது.

ஆம், இன்னும் இரண்டு ஆண்டுகள் ஆட்சிப் பீடத்தில் இருக்க வேண்டியவர் ஜனாதிபதித் தேர்தலை நடத்தியது ஏன்?

தேர்தலை நடத்து... தேர்தலை நடத்து... நீயே! இந்த நாட்டின் ஆயுட்கால ஜனாதிபதி என்று மகிந்த ராஜபக்ஷவின் மனதை மாற்றியது எது? அந்த மாற்றத்தோடு கூட இருந்தவரை ஜனாதிபதி வேட்பாளராக்கியது எது? உடன் இருந்தவர்கள் மெல்ல மெல்ல நழுவியது ஏன்? மிகப்பெரிய போராட்ட அமைப்பான விடுதலைப் புலிகளை போரில் வென்ற ஜனாதிபதியை பௌத்த சிங்கள மக்கள் மறந்தது ஏன்? அவ்வாறு மறக்கச் செய்தது எது? என்றெல்லாம் கேள்வி எழும் போது...

காணாமல் போனவர்களின் உறவுகள் விட்ட கண்ணீர் தான் இதற்கெல்லாம் காரணம் என்று சொல்லலாம் அல்லவா?

அதேநேரம் காணாமல்போனவர்கள் விடும் கண்ணீர் மகிந்தவை மட்டுமல்ல; தமிழ் இனத்தை ஏமாற்றிச் சுயலாபம் தேடும் அரசியல்வாதிகளையும் அது சும்மா விடாது என்பதைப் புரிதல் வேண்டும்.

எது எப்படியாயினும் காணாமல் போனவர்களின் உறவுகள் விடுகின்ற கண்ணீர்தான் பேரினவாதிகளை; மத வெறியர்களை அழித்தொழிக்கும் பெரும்படை என்றால், அதுவும் நடந்தேயாகும். அதைத் தடுக்க வல்லார் எவரும் இல்லை.

# குற்றங்களை மறைத்து அனுதாபம் தேட இனவாதத்தை தூண்டுகிறார் வீரவன்ஸ

## சரத்தின் சிறைவாசம் மறந்துவிட்டதா?–மனோ

(கொழும்பு)

உலகத்திலேயே மிக சிறந்த இராணுவத் தளபதி என்று பாராட்டியவர்களே சரத் பொன்சேகாவை கழுத்தை பிடித்து, இழுத்து சென்று, சீருடையை கழற்றி, சிறையிட்டது மறந்து விட்டதா? என ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் கேள்வி எழுப்பியுள்ளார்.

அதிகாரத்தை பகிர்ந்து ஐக்கியப்படும் இயக்கத்தின் ஊடக மாநாடு நேற்று புதன்கிழமை கொழும்பில் இடம்பெற்றது. இம்மாநாட்டில் சிங்கள, தமிழ் மொழிகளில் உரையாற்றிய போதே அவர் இதனை தெரிவித்தார்.

அங்கு மேலும் கூறியதாவது,

பிறப்பு சான்றிதழில் சொந்த பெயரை மாற்றலாம். அதற்கு சட்ட வழிமுறைகள் உள்ளன. ஆனால், பிறந்த திகதி, பிறந்த இடம், பெற்றோர் பெயர்கள் ஆகியவற்றை ஒருபோதும் மாற்ற முடியாது. அவற்றை மாற்றுவது மோசடியாகும். இது சட்டப்படி குற்றம்.

ஆகவே அது தொடர்பாக பொலிஸ் நடவடிக்கை உண்டு. இத்தகைய குற்றச் செயலை செய்ததாக முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸவின் மனைவி நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

ஆனால், இந்த குற்ற செயலை மறைத்து சிங்கள மக்கள் மத்தியில் அனுதாபம் தேட வீரவன்ஸ முயல்கின்றார். அது மட்டுமல்ல, பயங்கரவாதத்தை ஒழித்தவர்கள் இன்று சிறை செல்ல வேண்டியுள்ளது என்று கூறி இனவாதத்தையும் தூண்ட இவர் முயல்கிறார்.

பயங்கரவாதத்தை ஒழித்தோர் இன்று சிறை செல்ல வேண்டியுள்ளது என்று ஒப்பாரி வைக்கும் இவருக்கு சரத் பொன்சேகாவை பிடித்து சிறைக்கு அனுப்பியது ஞாபகம் இல்லையா?

மகிந்த மீண்டும் அரசியலுக்கு வரலாம். அதற்கு அவருக்கு உரிமை உள்ளது. அதை யாரும் பறிக்கவில்லை. மகிந்தவுடன் எனக்கு தனிப்பட்ட கோபம் கிடையாது. நான் எப்போதும் அவருடன் கொள்கை முரண்பாடு கொண்டவன். அவரை கவிழ்த்து விட்டவர்கள் அவருடன்கூட இருந்தவர்கள்தான்.

ஆகவே அவர் மீண்டும் வருவதில் எனக்கு எந்த பிரச்சினையும் இல்லை. என்னை பொறுத்தவரையில் அவர் மீண்டும் வரலாம். மீண்டும் வந்து இன்று இந்த நாட்டில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை அவர் பார்க்கட்டும்.

ஆனால், அவரை மீண்டும் அழைத்து வரும் பாதை இனவாத பாதையாக இருக்க முடியாது.

மகிந்தவை பயன்படுத்தி கோட்டையை பிடிக்க நினைக்கும் வீரவன்ஸ, தினேஷ் குணவர்தன, கம்மன்பில மற்றும் முன்னாள் சிவப்பு சட்டை வாசுதேவ உள்ளடங்கிய நுகே கொடை குழு நினைவில் நிறுத்திக்கொள்ள வேண்டும்.

இன்றைய அரசின் பொருளாதாரம், கல்வி, சுகாதாரம் உட்பட அனைத்து கொள்கைகள் பற்றியும் இவர்கள் விமர்சிக்கலாம். அதற்கு அவர்களுக்கு உரிமை உண்டு. ஆனால், இனவாதம், மதவாதம் இவற்றை கிளப்ப உரிமை இல்லை.

இன்று இந்த நாட்டில் புலிகள் இயக்கம் இல்லை. ஆயுத போராட்டம் இல்லை. ஆனால், நுகேகொடை குழு, இப் போது இந்த நாட்டில் புலிகளை தேடி திரிகிறது. புலிகள் எழுந்து வரமாட்டார்களா என்று ஏங்குகிறது.

இதனால் இவர்கள் நால்வரும் பங்குதாரர்களாக இணைந்து புலிகளை தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை இன்று அமைத்துள்ளார்கள். ஷ

இந்த புலித் தொழிற்சாலையை இயக்குவது தான் இவர்களது இன்றைய முழு நேரத் தொழில் என மனோ கணேசன் தெரிவித்தார். (செ-11)

# சுதந்திரக் கட்சியினர் 65 பேர் ஐ.தே.கவில் இணைய ஆர்வம்

## அமைச்சர் லக்ஸ்மன் தெரிவிப்பு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதிநிதிகள் 65 பேர் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொள்ள ஆர்வம் காட்டி வருகின்றனர் என பெருந்தோட்ட அமைச்சர் லக்ஸ்மன் கிரியல்ல தெரிவித்துள்ளார்.

இவர்களால் நாடாளுமன்றிற்குள் கூட எம்மால் நிம்மதியாக இருக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

எப்படியாவது ஆளும் கட்சியில் இணைந்து கொள்ள முயற்சித்து வருகின்றனர் என அவர் தெரிவித்தார்.

இதேவேளை, நுகேகொடையில் நடைபெற்ற கூட்டத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களே பதற்றமடைந்துள்ளதாக ஐக்கிய தேசியக கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் புத்திக்க பத்திரண தெரிவித்துள்ளார். இந்த அரசாங்கம் 100 நாள் அரசாங்கம் அல்ல.

கூட்டத்தைப் பார்த்த ஐக்கிய தேசியக் கட்சியினர் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

எனினும், சுதந்திரக் கட்சியினருக்கு வயிறு கலங்கி பேதி ஏற்பட்டுள்ளது.

கட்சி பிளவடைந்து விடுமோ என்ற அச்சம் காரணமாகவே இவ்வாறான ஓர் நிலைமை ஏற்பட்டுள்ளதாக புத்திக்க பத்திரண தெரிவித்துள்ளார்.

ஊடகங்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளித்த போது ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்கள் இதனைக் குறிப்பிட்டுள்ளனர். (செ-11)

## சத்திய தரிசனம்



### நல்ல நண்பர்கள்

❖ நல்லதைச் சொல்வதால் மட்டுமே பயன் உண்டாகி விடாது. அதைச் செயலில் வெளிப்படுத்துவது அவசியம்.


❖ மனிதப்பிறவி கிடைப்பது அரிது. அதைப் பயனுள்ளதாக்கிக் கொள்வது உங்கள் கையில் தான் இருக்கிறது.

❖ இளமை நிரந்தரமானது அல்ல. வானில் நகர்ந்து செல்லும் மேகம் போல காணாமல் போய் விடும்.

❖ சத்தியம், தர்மம் இரண்டும் தான் நன்மை வழங்கும் உண்மையான நண்பர்கள்.

❖ தீய குணத்தைக் கூட கடவுளிடம் சமர்ப்பித்து விடுங்கள். அதை நல்லதாக்குவது அவர் பொறுப்பு.

## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்



### நமசிவாய என்பதன் சிறப்பு தெரியுமா?

நமசிவாய என்பதற்கு சிவனை வணங்குகிறேன் என்பது பொருள். நமசிவாய என்று ஜெபித்து வர, சிவனருளால் வாழ்வில் எல்லா நன்மைகளும் உண்டாகும். இறைவனின் திருவருளைப் பெறுவதற்கு உறுதுணையாக இருப்பவை திருநீறு, ருத்திராட்சம், திருவைந்தெழுத்து ஆகிய சாதனங்கள். திருநீறும், ருத்திராட்சமும் புறச்

காற்றில் கலந் துவருவதால் நம்முள் இருந்தே நமக்குப் பயன்தருவதாக இருக்கும். மந்திரங்கள் பல இருந்தாலும் அவற்றில் தலையாயது பஞ்சாக்கர மந்திரம் என்பர்.


வேத ஆகமங்களில் நடுநாயகமாக நிலைபெற்றிருப்பது பஞ்சாக்கர மந்திரமே. ரிக், யஜுர், சாம என்ற மூன்றில் நடுவாகிய யஜுர் வேதத்திலுள்ள ஏழு காண்டங்களில், நடுக்காண்டத்தின் மையமாகிய நான்காவது சம்ஹிதையில் நடுநாயகமாக இருப்பது ருத்ராத்யாயம். அதன் நடுநாயகமாக இருப்பது ருத்திர ஜெபம். ருத்திரத்தின் நடுவில் வரும் மந்திரம் நம சோமாயச நமசிவாய என்பது இம்மந்திரத்தை தனி வாக்கியமாக ஒருமுறை ஓதும்போது நமசிவாய என்றும், பலமுறை உச்சரிக்கும்போது சிவாய நம என்றும் ஒலிக்கும்.

மூவர் அருளிய திருமுறைகளுள் 4, 5, 6-ஆவது திருமுறைகள் அப்பர் அருளியவை அவற்றில் நடுவில் அமைந்துள்ளது. ஐந்தாவது திருமுறை. அதன் நடுவில் இடம்பெற்றிருக்கும் திருப்பாலைத்துறைத் திருப்ப திகத்தில் 11 பாடல்கள் உள்ளன. அவற்றுள் நடுவான ஆறாவது பாடலில் சிவாய நம என்ற பஞ்சாக்கர மந்திரம் நடு நாயகமாக வைத்துப் போற்றப்படுகிறது. ஓம் எனும் பிரணவத்தின் விரிவே சிவாய நம ஓம் என்ற பிரணவம் மூல மந்திரம் ஆகும். அவ்வொலியிலிருந்தே அண்ட சராசரங்கள் தோன்றின. அனைத்திற்கும் ஆதாரமாகத் திகழ்வது பஞ்சாக்கர மந்திரமே. உயிர்கள் என்று துன்புற்றனவோ, அன்றே இறைவன் உயிர்கள் துன்பத்திலிருந்து விடுபடும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சர்வதேச சோட்டோக்கன் கராத்தே போட்டி; மகாதேவா ஆச்சிரம மாணவர்கள் சாதனை



சர்வதேச சோட்டோக்கன்கராத்தே சங்கத்தினரால் பேராதனை, கண்டியில்நடத்தப்பட்ட (International Shotokan Karate Association) 14 ஆவது சர்வதேச கராத்தே சுற்றுப்போட்டியில் (21,22 பெப்ரவரி) மகாதேவா ஆச்சிர மச சிறுவர் இல்லத்தைச் சேர்ந்த இல்லக் குழந்தைகள் பங்குபற்றி பல பதக்கங்களையும் சான்றிதழ் களையும் பெற்றுள்ளனர். பதக்கங்களின் விபரம்,

ந.ஷர்மிளா -02 தங்கப்பதக்கங்கள், ஆ.கமலினி -01 தங்கப்பதக்கம்,செ.நிருஷா-02 வெளிப்பதக்கங்கள்,டிலாஜினி -01 வெள்ளிப்பதக்கம்,த.தட்சாயினி -01 வெள் ளிப்பதக்கம், த.சாரங்கி -01 வெள் ளிப் பதக் கம் , ம.சௌமியா-02 வெண கலப்பதக்கங்கள, த. கேசாளினி-01 வெண கலப்பதக்கம், க. பானுசா -01 வெண் கலப்பதக்கம் எஸ.சங்கீதன்-01 வெண கலப்பதக்கம்

இடமிருந்துவலமாக (மேல் வரிசை)

த.கேசாளினி, விளையாட்டுப் பொறுப்பாளர் சு.கோமளாதேவி, த. தட்சாயினி, இல்லத் தலைவர் தி. இராசநாய கம், கராத்தே ஆசிரியர் எஸ்.விஜயராஜ், த. சாரங்கி, ம. சௌமியா, வடுதிப் பொறுப்பாளர் சி.ஜீவப்பிரியா, க. பானுசா, செ. நிருஷா, ஆ.கமலினி, ந.ஷர்மிலா, ரு.டிலாஜினி, எஸ். சங்கீதன் ஆகியோரைப் படத்தில் காணலாம். (க)




# கெய்ல் சாதனைப் பட்டியல்



அவுஸ்திரேலியாவின் தலைநகரான கான்பெராவில் சிம்பாவேக்கு எதிரான லீக் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள' அதிரடி வீரர் கெய்ல் இரட்டை சதம் (215) அடித்ததையடுத்து பல்வேறு சாதனைக்கு சொந்தக்காரர் ஆனார்.

❖ உலகக்கோப்பையில் ஒரு வீரர் எடுத்த அதிகபட்ச ஓட்ட எண்ணிக்கை இதுவாகும். இதற்கு முன் தென்ஆபிரிக்க வீரர் கிரிஸ் டன் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணிக்கு எதிராக 188 ரன்கள் எடுத்ததே இதுவரை அதிகபட்சமாக இருந்தது.

❖ ஒட்டுமொத்த ஒரு நாள் போட்டியில் அதிக ரன்கள் அடித்த வீரர் கள் பட்டியலில் ரோகித் சர்மா, சேவாக்குக்கு அடுத்தப டியாக உள்ளார்.

❖ ஒருநாள் போட்டிகளில் 5 வருடங்களில் 5 இரட்டை சதங்கள் அடிக்கப்பட்டுள்ளன. முதன்முறையாக சச்சின் டெண்டுல்கர் கடந்த 2010ஆம் ஆண்டு இரட்டை சதம் அடித்தார். அவர் 147 பந்தில் இந்த ரன்னை எடுத்தார். கெய்ல்தற்போது 147 பந்தில் 215 ரன்கள் எடுத்து ள்ளார்.

❖ குறைந்த பந்தில் இரட்டை சதம் அடித்து சாதனையும் கெய்ல் படைத்துள்ளார். இவர் 138 பந்தில் இந்த சாதனையை ஏற்படுத்தியுள்ளார். இதற்கு முன் சேவாக் 140 பந்திலும், சச்சின் 147 பந்திலும், சர்மா 151 மற்றும் 156 பந்திலும் இரட்டை சதம் அடித்தனர்.

❖ 16 சிக்சர்கள் அடித்து டி வில்லியர்ஸ், ரோகித் சர்மாவுடன் சாதனையை பகிர்ந்துள்ளார்.

❖ ஒருநாள் போட்டியில் 9136 ரன்கள் குவித்துள்ளார். பிரையன் லாராவைத் தவிர மேற்கிந்தியத் தீவுகள் வீரர்களில் 9 ஆயிரம் ரன்னை கடந்த வீரர் கெய்ல் மட்டுமே.

❖ அதிக சதங்கள் அடித்த மேற்கிந்தியத் தீவுகள்வீரர்கள் பட்டியலில் 22 சதங்களுடன் முதல் இடத்தில் உள்ளார். மேலும், கங்குலி, கோலி ஆகியோருடன் சர்வதேச அளவில் 4ஆவது இடத்தை பகிர்ந்துள்ளார்.

❖ கடந்த 2013ஆம் ஆண்டு இலங்கைக்கு எதிராக சதம் அடித்தபின் 20 இன்னிங்ஸ் கழித்து தற்போது சதம் அடித்துள்ளார்.(க)

# விமர்சனங்களுக்கு அஸ்வின்,ஜடேஜா தக்க பதிலடி; விராட் கோலி பெருமிதம்



இந்திய கிரிக்கெட் அணியின் துணை கப்டன் விராட்கோலி அளித்த ஒரு பேட்டியில் கூறியதாவது.

வெளிநாட்டு மண்ணில் இந்திய சுழற்பந்து வீச்சாளர்கள் அஸ்வின், ரவீந்திர ஜடேஜா ஆகியோரால் துடுப்பாட்ட வீரர்களு[illegible] நெருக்கடி அளிக்க முடியாது என்று விமர்சிக் கப்பட்டது தவறானது என்று இரு வரும் நிரூபித்துள்ளனர். உலக கோப்பை போட்டியில் பாகிஸ்தான் மற்றும் தென்னாபிரிக்காவுக்கு எதிரான ஆட்டத்தில் இந்திய அணி வெற்றி கண்டதில் அஸ்வின், ரவீந் திர ஜடேஜா ஆகியோர் முக்கிய பங்கு வகித்தார்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது.

இந்த ஆட்டங்களில் இருவரும் சேர்ந்து 6 விக்கெட்டுகளை வீழ்த்தியதுடன், ஒரு ஓவருக்கு 5 ரன்களுக்கு குறைவாக விட்டுக் கொடுத்துள்ளனர். இங்கிலாந்தில் நடந்த சம்பியன்ஸ் கோப்பை போட்டியில் ரவீந்திர ஜடேஜா சிறந்த பந்து வீச்சாளராக தேர்வு செய்யப் பட்டார்.

அவுஸ்திரேலியாவில் நடைபெறும் உலக கோப்பை போட்டியில் நமது சுழற்பந்து வீச்சாளர்கள் முக்கிய பந்துவீச்சாளராக விளங்குவார்கள் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை.

அவுஸ்திரேலியாவில் சிறப்பாக பந்து வீசி அனைவரது விமர்சனமும் தவறு என்பதை நிரூபித்து உள்ளனர். இவ்வாறு கோலி கூறினார். (க)



## உலகக்கிண்ண

# இலங்கை அணியில் உப்புல் தரங்க இணைவு

நடைபெற்று வரும் உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் விளையாட இலங்கை அணி வீரர் உப்புல் தரங்கவுக்கு வாய்ப்பு கிடைத்துள்ளது.

தற்போது இலங்கை சார்பில உலகக்கிண்ண போட்டியில் பங்கு பெற்றுள்ள ஜீவன் மென்டிஸ் காயமடைந்துள்ளதால் அவருக்கு பதிலாக உப்புல் தரங்க அணியுடன் இணையவுள்ளார்.

உப்புல் தரங்க அவுஸ்திரேலியா செல்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஜீவன் மென்டிஸ் குணமடைய காலதாமதம் எடுக்கும் என வைத்தியர் அறிவித்துள்ளதை அடுத்தே உப்புல் தரங்க அணிக்கு அழைக் கப்பட்டுள்ளார். இவர் ஆப்கானிஸ்தான் அணிக்கு எதிரான ஆட்டத்தில் திசர பெரேரா வுடன் இணைந்து வெற்றிக்கு வித்திட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்வர் சதம்

# ஐக்கிய அரபு எமிரேட்ஸை போராடி வென்றது அயர்லாந்து



ஐக்கிய அரபு எமிரேட்ஸ்க்கு எதிரான ஆட்டத்தில் அயர்லாந்து அணி போராடி 2 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

உலகக் கிண்ண தொடரின் 16 ஆவது லீக் ஆட்டம் பி பிரிவைச் சேர்ந்த அயர்லாந்து - ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணிகளுக்கு இடையில நடைபெற்றது.

போட்டியின் நாணயசுழற்சியில் வென்ற அயர்லாந்து களத்தடுப்பை தெரிவு செய்தது. இதையடுத்து எமிரேட்ஸ் அணியின் தொடக்க ஆட்டக்காரர்களாக பெரெங்கரும், அம்ஜத் அலியும் களமிறங்கினர்.

இருவரும் நிதானமான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். 12ஆவது ஓவரின் போது ஸ்ரேர்லிங் பந்தில் பெரெங்கர் ஆட்டமிழந்தார். இதைத் தொடர்ந்து 14ஆவது ஓவரில் கிருஷ்ண சந்திரன் டக் ஆனார்.

தொடக்கத்திலிருந்து பொறுமையாக விளையாடி வந்த அம்ஜட் அலியும் 45 ஓட்டங்களில் ஆட்டமிழந்து வெளியேறினார்.

அடுத்து வந்த எஸ்.பி.பாட்டீல் 2 ஓட்டங்களில் நடையை கட்டினார். 32ஆவது ஓவரின் போது குர்ரம் கான் 36 ஓட்டங்களில் எல்.பி. டபிள்யூ முறையில் ஆட்ட மிழந்தார்.

35ஆவது ஓவரில் முஸ்தபா 2 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். இதனால் 131 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுகளை இழந்து எமிரேட்ஸ் அணி சிக்கலான நிலையில் இருந்தது.

இந்நிலையில் அன்வருடன், ஜாவேத் ஜோடி சேர்ந்தார். சிறப்பாக விளையாடிய ஜாவேத் 47ஆவது ஓவரில் 42 ஓட்டங்களில் ஆட்டமிழுந்தார்.

எனினும் தொடர்ந்து அதிரடியாக விளையாடிய அன்வர் 106 ஓட்டங்களை எடுத்து வெளியேறினார். கடைசி 10 ஓவரில் மட்டும் எமிரேட்ஸ் அணி 100 ஓட்டங் களை எடுத்தது.

50 ஓவர் முடிவில் அந்த அணி 9 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 278 ஓட்டங்களை எடுத்தது.

தொடர்ந்து 279 ஓட்டங்கள் என்ற ஓட்ட இலக்குடன் துடுப்பெடுத்தாடிய அயர்லாந்து 49.2 ஓவர் முடிவில் 8 விக்கெட்களை இழப்பிற்கு 279 ஓட்டங்களை பெற்று 2 விக் கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

நேற்றைய போட்டியானது இரு அணியினருக்கும் கடுமையான போட்டியாக விளங்கிய நிலையில் அயர்லாந்து மிகுந்த சிரமத்தின் மத்தியில் வெற்றி பெற்றது.

துடுப்பாட்டத்தில் அயர்லாந்து அணியின் சார்பில் வில்சன் 80 ஓட்டங்களையும் கெவின் ஓ பிரையன் 50 ஓட்டங்களையும் பெற்றுக் கொள்ள ஜோய்ஸ் 37, போல்பிரினே 30 மற்றும் நியால் ஓ பிரையன் 17 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

இதன்படி இரு போட்டிகளை எதிர்கொண்டு இரண்டிலும் வெற்றி பெற்று 4 புள்ளிகளுடன் அயர்லாந்து பிரிவு பி யில் 3ஆவது இடத்தில் உள்ளது. (க)

## உள்ளக விசாரணை...

லாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை அடிப்படையாகக்கொண்டே உள்ளக நடவடிக்கைகள் இடம்பெறும் என்றும், குற்றச சாட்டுகளை ஆராய்ந்து வழக்குத் தாக்கல் செய்வதற்கு குழுவொன்று அமைக்கப்படவுள்ளது என்றும் அறியமுடிகின்றது.

இதற்காக சட்டத்தில் விசேட ஏற்பாடுகள் செய்வதற்குரிய பிரேரணையை நிதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ அமைச்சரவையில் சமர்ப்பிக்கவுள்ளார்.

உள்ளக விசாரணை என்ற உறுதிமொழி நூறு நாள் வேலைத் திட்டத்துக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளதால், அதற்கு எதிர்க்கட்சி களும் ஆதரவு வழங்கவுள்ளன. அத்துடன் உள்ளக விசாரணைக்கு ஐ.நா சார்ந்த அமைப்புகளின் ஒத்துழைப்பும் பெறப்படவுள்ளது.

உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக் குழுவில படையினர்மற்றும்துணைக் குழுக்களுக்கு எதிராக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகளை ஆராய்வதற்கு முன்னைய அரசாங்கம் தயக்கம் காட்டியதுடன், இராணுவ விசாரணைக்குழுவொன்றை அமைத்து விசாரணைகளை இழுத்தடித்து வந்தது.

எனவே, இவை பற்றி விசாரித்து வழக்குத் தாக்கல் செய்து, உள்நாட்டு சட்டத்தின் பிரகாரம் தண்டனை வழங்குவதற்கு புதிய அரசாங்கம் தயாராகி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

புதிய அரசாங்கம் இவ்வாறு உறுதியளித்துள்ளதாலேயே அனைத்துலக சமூகமும், ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழுவும் ஆறுமாத கால அவகாசம் வழங்கியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

மேற்படி விடயம் தொடர்பில் நாடாளுமன்றில் விவாதம் நடத்தப்பட்டு சபையின் அனுமதியை பெற்றால், அது பயனுறுதிமிக்கதாக அமையும்என புதிய அரசாங்கத்துக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

எனவே, நீதி அமைச்சரின் யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கிய பின்னர், அது சபைக்கு சமர்ப்பிக்கப்படவுள்ளது என அரச வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது. உள்ளக விசாரணைக்குரிய ஆரம்பகட்ட நடவடிக்கைகளே தற்போது இடம்பெறும். இதன்படி செப்டெம்பர் மாத ஜெனிவாத் தொடருக்கு அது பற்றி அறிக்கை சமர்ப்பிக்க முடியாது. எனவே, 2016 மார்ச்சில் நடைபெறவுள்ள தொடரிலேயே அறிக்கை சமர்ப்பிக்கக்கூடியதாக இருக்கும்.

அதேவேளை, படையினருக்கு எதிராக புதிய அரசாங்கம் விசாரணைகளை ஆரம்பிக்கும் பட்சத்தில். அதற்கு எதிராக ஆர்ப்பாட்டங்களை நடத்துவதற்கு சில சிங்கள தேசியவாத அமைப்புகளும் கட்சிகளும் தயாராகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## பொதுத் தேர்தல்...

யிலான புதிய அரசாங்கத்தின் 100 நாட்கள் வேலைத்திட்டத்தின் பிரகாரம் நாடாளுமன்றம் ஏப்ரல் 23 ஆம் திகதி வியாழக்கிழமை கலைக்கப்படும் என்று ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருந்தது.

இருப்பினும் தேசிய அரசாங்கம் அமைப்பதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக கட்சி ஆதரவளிப்பதாக தீர்மானித்துள்ளது. இதனையடுத்தே பொதுத் தேர்தல் ஒத்திவைக்கப்படலாம் என்று தகவல்கள்வெளியாகியுள்ளன.

அண்மையில்இலங்கை சுதந்திரக கட்சியின் தலைவரும் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தலைமையில் இடம்பெற்ற செயல மர்வின் போது தேசிய அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்குவதற்கு தீர்மானித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## சம்பூர்...

கம்பனிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. அங்கு வாழ்ந்த மக்கள் தமது சொந்த மண்ணில் மீள்குடியேற்றப்படாமல் இடம் பெயர்ந்தவர்களுக்கான அகதி முகாம்களில் வைக்கப்பட்டுள்ளார்கள் என்றார்.

சம்பூர் பிரதேச மக்கள் 2005-ம் ஆண்டு போர் காலத்தில் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறியிருந்தார்கள்.

போர் முடிவடைந்திருந்தாலும் அவர்களது மீள் குடியேற்றம் தொடர்ந்தும் தடைப்பட்டுள்ள நிலையில் கடந்த 10 வருடங்களாக அகதி முகாம்களிலே அவர்கள் தொடர்ந்தும் தங்கியுள்ளார்கள்.

தமது பாரம்பரிய மண்ணில் மீள்குடியேற்றத்திற்காக 10 வருடங்களாக போராட்டம் நடத்திவரும் சம்பூர்பிரதேச மக்களை பொறுத்த வரை இந்த தீர்மானம் அவர்களுக்கு தமது மீள் குடியேற்றம் தொடர்பில் நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது என கூறப்படுகின்றது. (செ-11)

# விரைவில் கடல்நீர் மருதங்கேணியிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு குடிநீராக விநியோகம்

## வட மாகாண முதலமைச்சர் தெரிவிப்பு

(வவுனியா)

வெகு விரைவில் மருதங்கேணியில் இருந்து யாழ்ப்பாண மக்களுக்கு குடிநீர் வழங்கப்படவுள்ளது என வட மாகாண முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

வவுனியா பொது வைத்தியசாலையல் 37 லட்சம் ரூபாய் பெறுமதியில் தியாகி அறக்கட்டளை அமைப்பால் உருவாக்கப்பட்ட நீர் சுத்திகரிப்பு நிலையத்தினை நேற்று திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் அங்கு உரையாற்றிய அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

நிலத்தடி நீர் போதாது என்பது ஒருபுறம் போதும் என்றால் கூட நீர் மாசடைந்திருப் பது இன்னொரு புறம். இதனால்தான் மேலும் மேலும் இயந்திரங் களின் உதவியை நாட வேண்டிய நிலைமை உதயமாகியுள்ளது. வெகுவிரைவில் யாழ் மக்களுக்கு நீரானது கடலில் இருந்து மருதங்கேணியூடாக பளைக்கு கொண்டு வந்து அங்கிருந்த குழாய்களின் மூலமாக யாழ்ப்பாண்த்திற்கு அனுப் பப்படவிருக்கின்றது. கடல் நீரை நன்நீராக்க மருதங்கேணியிலும் பளையிலும் இயந்திரங்கள் பொருத்தபடவிருககின்றன. எனவே இயந்திர யுகம் இப்பொழுது அண்டியுள்ளது. அப்பேற்பட்ட இயந்திர யுகத்தை பிரதிபலிப்பதாய் அமைந்துள்ளது இன்றைய திறப்புவிழா. 35 இலட்சம ரூபா செலவில் 5 வருட பராமரிப்பு பொறுப்பையும் ஏற்று தியாகி அறக்கட்டளை நிறுவனம் இந்த கைகாரியத்தில் ஈடுபட்டுள்ளது.

வறுமையுற்ற மாணவர்களின் கல்விக்கு உதவி வளமுள்ள குடிமக்களாக மாற்றவும், நாதியற்று வாழும் குடும்பங்களுக்கு நன்மைகளைப் பெற்றுத்தரவும் ஊனமுற்றோரைப் பராமரித்து உதவிகளைச செய்யவும் பாதிப்புற்றோரை வைத்தியம் மூலம் வளமுடையவர்களாக மாற்றி வாழ்க்கையில் வளம் பெற ஆவன செய்யவும் வேறுபல கைகரியங்களில் ஈடுபடவும் தியாகி அறக்கட்டளை நிறுவனத்தார் முயன்று வருகின்றனர். அவர்களின் சேவைகளை பாராட்டுகின்றோம். வாழ்க்கையில் வசதி படைத்த எமது ச்கோதர சகோதரிகள் அவர்கள் போன்று மேலும் மேலும் பாதிப்புற்ற எமது மக்களுக்கு உதவ முன்வர்வேண்டும் என்று கேட்டு கொள்கின்றேன் என முதலமைச்சர் தெரிவித்தார். (செ-250)

## நீதியை...

சபை வெளியிட்டுள்ளது. இலங்கையில் காரணமற்ற கைதுகள், சித்திரவதைகள், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழான நடவடிக்கைகள், காணாமற்போனோரின் உறவுகளை அச்சுறுத்துதல், மதச் சிறுபான்மையினர் மீதான அபாயகரமான தாக்குதல்கள் போன்றன இடம்பெற்றவண்ணமே உள்ளன. ஆனால் அந்த சம்பவங்களோடு தொடர்புபட்ட அதிகாரக் குழுக்கள் மீது எந்தவிதமான, வலுவான நடவடிக்கைகள் எவையும் முன்னெடுக்கப்படவில்லை. மோதலின் போது இடம்பெற்றன என்று கூறப்படும் போர்க் குற்றங்கள் மற்றும் மனிதாபிமானத்துக்குஎதிரான குற்றங்களை விசாரிக்க ஐ.நா தலைமையிலான விசாரணை குழு நியமிக்கப்பட்டபோது பாதிக்கப்பட்ட மக்கள் தமக்கு நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கையை கொண்டிருந்தனர். எனவே இலங்கையின் புதிய அரசாங்கம் ஐ.நா. விசாரணைக்குப் பூரண ஒத்துழைப்பு வழங்கவேண்டும். புதிய அரசின் நடவடிக்கைகள் சில திருப்தியளிக்கின்றன. குறிப்பாக நீதித்துறையின் சுதந்திரத்தை நிலைநாட்டுதல், கருத்துச் சுதந்திரத்தை ஏற்படுத்துதல் போன்ற நடவடிக்கைகள் நம்பிக்கைகளை ஏற்படுத்தியுள்ளன. எனவே இந்தப் புதிய அரசு மனித உரிமைகள் விடயத்திலும் பொறுப்புக்கூறும் என்று மன்னிப்புச்சபை நம்புகிறது. இலங்கையில் நீண்டகாலமாக இடம்பெற்ற போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. எனவே அங்கு இடம்பெற்ற மனித உரிமை மீறல்களை ஒரே இரவில் சீர்செய்து விடமுடியாது. அதற்கான கால அவகாசம் தேவை. பல தசாப்தங்கள் நீடித்த போர் காரணமாகவே போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் குறித்த குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன. இந்த குற்றச்சாட்டுக்களை தீர்க்க பல்வேறு நடவடிக்கைகள் தேவை. பரஸ்பர கலந்துரையாடல்களும் முக்கியமானவை. இலங்கையில் பெண்களுக் கெதிரான வன்முறைகளைத் தடுக்க, அதுகுறித்த கொள்கைளாக்கத்தில் சீர்திருத்தங்கள் தேவையாகவுள்ளன. சமீபத்தில் கூட சந்தேக த்திநபராக தடுத்துவைக்கப்பட்ட ஒருவர் சிறையில் மரணமானார் என்று ஓர் அறிக்கை கூறுகிறது.

காரணமே இன்றி கைது செய்யப்படுபவர்கள் வருடக்கண க்கில் சிறைகளில் அடைக்கப்படுவ தால் அவர்கள் மன ரீதியாகப் பாதிக்கப்படுகின்றனர். எனவே இவ்வாறான பிரச்சினைகளைத் தீர்க்க அமைப்பு ரீதியான மீள் கட்டுமானங்களும், வெளிப்படைத் தன்மையுமே முக்கியமானவை. சிறந்த விவாதங்கள் மூலம் இலங்கையில் இருக்கக்கூடிய பல பிரச்சினைகளுக்கத் தீர்வு காணமுடியும் என்று மன்னிப்புச்சபை தனது அறிக்கையில் சுட்டிக்காட்டி யுள்ளது. (செ-11)

## தேசிய அரசில்...

தினால் நேற்று முன்தினம் காலை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த காலையுணவுச் சந்திப்பின் போதே அவர் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் குறிப்பிடுகையில், ஏற்கெனவே தேசிய அரசாங்கம் ஒன்றுதான் உள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், ஜேவிபியும் எதிர்க்கட்சியில் உள்ள போதிலும், அவர்கள் தேசிய நிறைவேற்றுப் பேரவையில் இடம் பெற்றுள்ளனர்.

முன்னதாக தாம் எதிர்க்கட்சி யிலஇருந்து கொண்டு 100 நாள் செயற் திட்டத்துக்கு ஆதரவளிப்பதாக சிறிலங்கா சுதந்திரக் கட்சி தெரிவித்தது.

இதையடுத்து நடத்தப்பட்ட கலந்துரையாடல்களின் முடிவில், 10 நிபந்தனைகளின் அடிப்படை யில் தேசிய அரசாங்கத்தில் இணைவதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இணங்கியுள்ளதாக [illegible] மேலும் தெரிவித்துள்ளார். (செ-11)

## தேசிய அரசாங்கம்...

இந்த தேசிய அரசாங்கம் எனும யோசனையினால் மக்களுக்கு அரசாங்கம் அழிவை ஏற்படுத்துகின்றது.

ஐக்கிய மக்கள்சுதந்திர முன்னணி அரசாங்கத்துடன்இணைந்து கொண்டு அதிலுள்ளவர்களுக்கு சலுகைகளை வழங்கி, அரசாங்கம் செய்யும் தவறுகளை மறைக்க மேற்கொள்ளும் முயற்சியே இதுவாகும்.

அத்துடன், பிரதான இரு கட்சிகளும இணைந்து அரசாங்கம் அமைத்தால், பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியாக தலைதூக்குவது தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஆகும் எனவும் அவர் தெரிவித்தார். (செ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உண்மையை...

சுட்டிக்காட்டியுள்ளார்.

வடமாகாணசபையில் அண்மையில் நிறைவேற்றப்பட்ட இனப்படுகொலை தீர்மானம் குறித்து. "நல்லாட்சிமிக்க அரசாங்கத்துடன் விளையாட வேண்டாம்.

இதுவே இனவாதிகளுக்கான எனது இறுதிஎச்சரிக்கை என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் இந்தக் கூற்றுத் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே, வடமாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது.

எம் மக்களுக்கு நடந்ததை வெளியிடுவதை இனவாதம் என்று பிரதமர்ரணில விக்கிரமசிங்க சொலலியிருப்பது வருத்தத்தைத் தருகின்றது.

உண்மை கூறுவது ஒருபோதும் இனவாதமாக முடியாது. இனவாதத்தை வேண்டுமானால் உண்மை இதுதான்என்று குறிப்பிட்டுக்காட்டலாம்.

அதனைத்தான் வடமாகாண சபையில் கொண்டுவரப்பட்ட எமது பிரேரணை எடுத்துக்காட்டியது.

உண்மை தெரிந்தால்தான் நல்லெண்ணம் பிறக்க உதவி புரியலாம். தென்னாபிரிக்காவில் Truth And Reconciliation Commission என்ற ஆணைக்குழு உண்மைக்கும் நல்லெண்ணத்துக்குமான ஆணைக்குழுஎன்றே அழைக்கப்பட்டது. முதலில்உண்மையை அறிந்தால் தான் நல்லெண்ணம் பிறக்க வழி வகுக்கலாம்.

ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தீர்மானத்தின் அடிப்படையிலான விசாரணை அறிக்கை வெளியிடப்படுவதை காலதாமதம் செய்வதற்கு உங்களுக்கு சார்பாக சர்வதேசம் முற்படுகின்றது என்பதை அமெரிக்க பிரதிநிதியிடம் இருந்து அறிந்து கொண்டதன் பின்னர் தான், எமதுபிரேரணையை நாங்கள் கொண்டு வந்தோம்.

எமது மனோநிலையை எல்லோருக்கும் தெரியப்படுத்தவே அந்தப் பிரேரணை கொண்டுவரப்பட்டது.

வண்டிலை முன் வைத்து குதிரையை பின்வைப்பது போல் ஜக்கிய நாடுகள் தீர்மானத்தை முன்னரே அறிந்து அந்த நேரத்தில் கொண்டுவந்த பிரேரணைக்கு, உலக நாடுகள் கன்னத்தில் அடித்தது என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறியது வியப்பாக இருக்கின்றது.

அரசியல் கலாசாரத்தை மாற்றுங்கள் என்று நான்கோரியதற்கு எமக்களிக்கப்பட்ட பிரதமரின் பதில் இது என்று தெரிகின்றது. எங்கள்மக்கள் உண்மையான நல்லெண்ணத்தை தெற்கில் இருக்கும் எவரிடமும் எதிர்பார்க்க முடியாது என்று சொல்வதனை உண்மையாக்கப் பார்க்கிறார் பிரதமர். ஆனால் நான் அப்படி நினைக்கவில்லை. சிங்கள மக்கள் நல்லவர்கள். அவர்களின் அரசியல்வாதிகள்தான் இதுவரை காலமும் அவர்களை பிழையான விதத்தில் வழி நடத்தி வந்துள்ளார்கள்.

உதாரணத்துக்கு 2000ஆம் ஆண்டு சந்திரிகா அம்மையார் நல்லதொரு அரசியல் யாப்பு நகலைக் கொண்டு வந்த போது நாட்டைப் பற்றிச் சிந்திக்காது அதனை எதிர்த்து நாடாளு மன்றத்தில் அந்த நகலை யார் எரித்தார்கள் என்பது நான் சொல்லி பிரதமருக்கு தெரிய வேண்டியதில்லை. குறுகிய கால சுய நன்மைக்கே அதை செய்தார்கள். நாட்டு நலம் கருதி அல்ல.

தயவுசெய்து இனவாதம் வேண்டாம் என்று கோரி விட்டு நீங்களே இனவாதத்தை எழுப்பாது பார்த்துக் கொள்ளுங்கள். கடந்த ஜனாதிபதித் தேர்தலில் எமது மக்கள் பெருவாரியாக உங்களுக்கு ஆதரவளித்ததை மறந்து விடமாட்டீர்கள் என்று நம்புகிறேன் என்று வடமாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் மேலும தெரிவித்துள்ளார். (செ-11)




Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்ட International Diploma in French
FRANCE, CANADA, SWISS, BELGIUM செல்வோர் கற்கிறார்கள்..
விரிவுரையாளர் : MR. V. JEGAN (Trained teacher in France - 2007, University இல் French விரிவுரைகளை மேற் கொண்டவரும்)
இதுவரையில் எமது ஆசிரியரிடம் 895 பேர் கற்று சென்றுள்ளனர்
Register now : 0779 789 456 / 021 320 2973 (C-234)
ஆரம்பம்: 28.02.15 @2pm No. 40, Palaly Road, Jaffna.(ஆரியகுளம்)
ஆரம்பம்: 28.02.15 @3.30pm No.181, 1st Floor, Main Street, நெல்லியடி.
சாவகச்சேரியில் விரைவில் எம் கிளை



### பதவி வெற்றிடங்கள்

**வேலையின்றி இருப்பவர்களுக்கு அரிய சந்தர்ப்பம்...**

எம்முடன் இணைந்து நீங்களும் உலகளாவிய ரீதியில் எப்பாகத்திலும் பணிபுரியலாம்.

- யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பிரதேசத்தினைச் சேர்ந்தோர் விரும்பத்தக்கது.
- O/L தகைமையுடன் இணையலாம்
- வயதெல்லை 18 -30
- தங்குமிடம் & உணவு வசதிகள் உண்டு

தொடர்புகளுக்கு : 0775566224 0773366453 0214545634

(C-158)



### BA பொது நிர்வாகம் (PUBLIC ADMINISTRATION) (MEDIEM TAMIL)

**காமராசர் பல்கலைக்கழகம் (மதுரை)**

- மேற்படி பல்கலைக்கழகத்தினால் 2015 டிசம்பர் பரீட்சை எடுப்பவர்கட்கான பதிவுகள் கோரப்பட்டுள்ளன.
- A/L ல் கலை, வர்த்தகம், விஞ்ஞானம் ஆகிய பிரிவுகளில் முழுமைச்சித்தி அடைந்தவர்களும் இரண்டு பாடம் சித்தி அடைந்தவர்களும் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள் ஆகும்.
- பதிவுகள் யாவும் எமது நிறுவனத்தினூடாக நடைபெறுகின்றன.
- BA- ல் வரலாறு, அரச அறிவியல், பொருளியல், தமிழ், ஆங்கிலம், சமூகவிஞ்ஞானம், பொது நிர்வாகம், Journalisem & Mass communication ஆகிய பாடங்களில் ஒன்றினை தெரிவு செய்யலாம்.
- BSC, B com, BA இவற்றுக்குரிய விரிவுரைகள் ஆரம்பமாகிவிட்டன.
- குறிப்பு BA பொது நிர்வாகத்திற்குரிய விரிவுரைகள் ஆரம்பம் 28.02.2015 காலை 8.00 மணி.
- இப் பட்ட நெறிகள் யாவும் இலங்கை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டவையாகும்.
- பரீட்சைகள் யாவும் காமராசர் பல்கலைக்கழகத்தின் யாழ்.இணைப்பு நிறுவனமாகிய புதிய உயர் கல்லூரி வளாகத்தில் நடைபெறும்.
- விரிவுரைகளில் பங்கேற்கும் வெளிமாவட்ட மாணவர்கட்கான தங்குமிட வசதி இலவசம்.

(C-151)

யாழ்.இணைப்பாளர், காமராசர் பல்கலைக்கழகம் (மதுரை)
T.P. No : 021 222 8148
புதிய உயர்கல்லூரி, ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.


## மின்கட்டணம்...

விரைவாக குறைப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

இதுவரையில் மக்கள்மின்இணைப்புக்களைபெற்றுக்கொள்வதில் காணப்பட்ட பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையில் கட்டணம் செலுத்தியவுடன் அளவீட்டு மானி பொருத்தப்பட்டு விரைவில் மின இணைப்பு வழங்கப்படும்.

அதன்போது மின இணைப்பை பெறுவதற்காக தற்போது அறவிடப்படும் பணத்திலும் கணிசமான தொகை குறைக்கப்படும் எனவும் எதிர் வரும் மார்ச் மாதம் 6-ம் திகதியே இந்நடவடிக்கை அமுல்படுத்தப்படும் என இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

மேலும்இதுவரை மின்இணைப்பு பெறாதவர்கள் எதிர்காலத்தில் இணைப்பை பெற்றுக் கொள்வதற்காக மின்சார சபையுடன்தொடர்பு கொள்ள வேண்டியது மாத்திரமே. அதற்காக மினசார சபையினால் நியமிக்கப்பட்டுள்ள குழு விரைவாக செயற்பட்டு மின் இணைப்பை பெற்று தரும் என அவர் சுட்டிக்காட்டினார்.

அது மாத்திரமல்லாது மின் கட்டணம் குறைக்கப்படும் சந்தர்ப்பத்தில் இயந்திர எண்ணெய்க்கான கட்டணமும் குறைக்கப்படும். இதனால் போக்குவரத்து மற்றும் கடலுணர்தொழில் செய்பவர்களும் நனமையடைவார்கள் எனஇராஜாங்கஅமைச்சர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இதேவேளை கடந்த நாட்களில் தனியார் போக்கு வரத்து சங்க உரிமையாளர்களின் சங்கம் இயந்திர எண்ணெய் விலை குறைக்கப்பட வேண்டும் என கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## குண்டு...

ரயில் நிலையம் முன்பாக உள்ள காணியிலேயே இந்த வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றது.

குறித்த காணியை நேற்று அதன் உரிமையாளர்கள் துப்புரவாக்கி குப்பைகளுககு நெருப்பு வைததுவிட்டு சென்றுள்ளனர்.

இதன் போதே குண்டு வெடித்திருக்கலாம் எனக் கருதப்படுகின்றது.

எனினும் எவ்வகையான குண்டு வெடித்தது என உறுதியாகவில்லை எனத தெரிவித்த சாவகச்சேரிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-11)


## 16 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 1922 - 01 - 01



மறைவு 1999 - 02 - 23

ஸ்ரீமான்
**சின்னையா நல்லையா**
(6-ம் வட்டாரம், மண்டைதீவு)

ஐயா! உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(திதி : மாசிமாதத்து பூர்வபட்ச அட்டமி)

21/3A, இந்து மகளிர் ஒழுங்கை, கந்தர்மடம்.

- குடும்பத்தினர் -



## மரண அறிவித்தல்

### திருமதி தங்கராணி நவரட்ணராஜா



யாழ்.பருத்தித்துறை வராத்துபளையைப் பிறப்பிடமாகவும், பளை வண்ணாங்கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட நவரட்ணராஜா தங்கராணி 22.02.2015 ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிராசா - தங்கம்மா (வராத்துப்பளை) தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பொன்னையா - இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், நவரட்ணராஜாவின் (பளை) அன்பு மனைவியும், காலஞ்சென்ற மகேந்திரராஜா, புஸ்பராணி லலிதாராணி, வசந்தன், ஜெயரூபன், மனோகரன், ஜெயபாபு (ஆசிரியர்), ராஜகோபு (நீர்ப்பாசன பொறியியலாளர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், சாதுஜா (அபிவிருத்தி உத்தியோகத்தர், நீர்ப்பாசனத் திணைக்களம் - திருமலை), நீரஜா, சுஜின் (பிரான்ஸ்), சிந்துஜா, சாலுஜா, டெய்சி, ஜரின் ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஜெயகணேசன் (ரைஸ்மில் உரிமையாளர் - திருமலை), சிவகுமார், பத்மநாதன் (முகாமைத்துவ உதவியாளரும் சமாதான நீதவானும்), வசந்தகுமார், லூவிற்லிசி (பிரான்ஸ்) ஆகியோரின் மாமியாரும், இசைப்பிரியா, சாளினி, இலக்கியா, அஸ்விகன், அபிசாளினி, அபிசாந்த், அபிலாஸ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான தங்கராசா, செல்வராசா (பிரான்ஸ்) , புனிதமலர், தங்கமலர், மனோரஞ்சிதம் ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.02.2015) வியாழக்கிழமை 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தம்பகாமம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

T.P :- 0033954785116 / 0033605685122
0766436247 / 0778948598

தகவல்:- குடும்பத்தினர்


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.02.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org